12

சக்தி

மாத வெளியீடு

12-3



11 AUG 1945

292

பார்த்திப ஞ
ஆனிமீ

-/8

கதை

ராஜகுமாரி
சுபேதார் சாமி
சிக்கிய கள்ளன்
பொய்யின் மனைவ

✲

கட்டுரை

மறதி
என்ன படிப்பது
அன்பும் அறிவும்
பச்சை மசி
தேசிய பாஷை

✲

வரலாறு

கைதியின் கடிதம்
ராஷ்டிரபதி ஆஜாத்
பிரிஸ்கோ மகாநாடு

✲

குறிப்பு

வேவல் திட்டம்
காலச்சூழல்
புத்தக உலகம்

உயர்தரமானதும்
உறுதியானதுமான
அச்சு எழுத்துக்கள்
வார்ப்பவர்கள்

*
* *

நெல்சன் அன் கம்பெனி

சாமிப் பிள்ளைத் தெரு

சூளை :: சென்னை



11 AUG 1946

REGD. No. 1506 ASOKA

அசோகா

சுகந்த பாக்குத்தூள்

தயாரிப்பவர்:

எம். கே. கிருஷ்ண செட்டி

அசோகா பாக்டரி :: கோயமுத்தூர்.

கோவையில்

சக்தி காரியாலயம்

எல்லா வகையான தமிழ்,
ஆங்கிலப் புத்தகங்களும்
கிடைக்கும்

சக்தி காரியாலயம்
350, வெரைட்டி ஹால் ரோட்
கோயமுத்தூர்

குழந்தைகளின் பத்திரிகை

பாப்பா

மாத வெளியீடு

சின்னச் சின்னக் கதை, பாட்டு, சரித்திரம், விடுகதை, அழகிய படங்களுடன் வெளிவருகிறது

தனிப் பிரதி: அணு நாலு

வருட சந்தா: ரூ. மூன்று

பாப்பா பத்திரிகாலயம்
ராயவரம் : புதுக்கோட்டை சமஸ்தானம்

கைலிகளில் சிறந்தது

எங்கள்

சங்கு மார்க்கு

PALAYAKAT COY., LTD.
MADRAS ✻ MADRAS.

REGD. TRADE MARK

உழைப்பிற்கு உறுதியானது!

மாதிரியில் சிறந்தது

●

மதராஸ் பளயகாட் கம்பெனி லிமிடெட்,

சங்கு நிலையம், மதராஸ்

கிளைகள் :—மதுரை, கொளும்பு & கண்டி

சீன மக்களும் சீனமும்

சீனுவைப்பற்றி உலகப் பிரசித்திபெற்ற சீன எழுத்தாளர் லின் யூடாங் எழுதியது. அவருடைய அனுமதி பெற்று, தமிழில் வெளிவருகிறது. இவர், பண்டித ஜவஹர்லால் நேரு, ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் ஆகியவர்களின் நண்பர்; இந்திய நாடு விடுதலைபெற வேண்டும் என்பதில் ஆர்வம் கொண்டவர். சீனப் பண்பாடு, சீன நாகரிகம், சீனர் வாழ்க்கை, சீனக் கலை ஆகியவற்றைத் தெரிந்து கொள்வதற்கு இதைவிட உயர்ந்த புத்தகம் எந்த மொழியிலும் இதுவரை வெளிவந்ததில்லையெனப் பல அறிஞர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

காந்தி மலர் — 3

ஹிந்து முஸ்லிம் பிரசினை

காந்தி மலரில் இது மூன்ருவது புத்தகம். நமது நாட்டைப் பிடித்தாட்டும் வகுப்புப் பிரசினையால் வரும் தீமை; அத்தீமையைப் போக்க எந்தெந்த வகைகளில் முயலலாமென்பதைக் காந்திஜி இந்த நூலின் மூலம் வழிகாட்டுகிறார். ஸ்ரீ ராமகிருஷ்ண வித்யாலயம் க. அருணசலம் அவர்கள் இந்நூலை மொழி பெயர்த்திருக்கிறார்கள்.

விரைவில் வெளிவரும்

புதுமைப் பதிப்பகம் லிமிடெட்

காரைக்குடி

பார்த்திப
மலர் 12

சக்தி

ஆனி
இதழ் 3

அன்பும் அறிவும் அறமும் திருவும் அருளும் ஆற்றலும்
இன்ப வாழ்வும் விளங்கச் சக்தி எழுந்து பொலிகவே!

வேவல் திட்டம்

ஸோல்ஜர் வைஸிராய் வேவல்

சிறைவிட்டு சிம்லா வந்த ஆஜாத்

பாக்கிஸ்தான் பக்தர் ஜின்னா

இந்திய அசெம்பிளியில் காங்கிரஸ் கட்சித் தலைவரான புலாபாய் தேசாய் தான் வேவல் திட்டத்தின் மூல புருஷனாவார். அவருக்கும் அசெம்பிளி லீக் கட்சித் தலைவரான லியாகத் அலிகானுக்கும் ஏதோ சமரசப் பேச்சு நடந்ததாம். அதன் பலனாக, இந்திய அரசியல் முட்டுக்கட்டையைத் தீர்க்க, புலாபாய் தேசாய் ஒரு திட்டத்தைத் தயாரித்து வேவலிடம் கொடுத்தாராம். அதை அவர் லண்டனுக்குக் கொண்டோடினாராம். இப்போது மாண்டுபோன பழைய பிரிட்டிஷ் கூட்டு மந்திரி சபை அதை ஒருவிதமாய் அங்கீகரித்து, வேவலைத் திருப்பி இந்தியாவுக்கு அனுப்பியதாம். இதுதான் வேவல் திட்டத்தின் பூர்வ கதை. திரைக்குப் பின்னே, இன்னும் என்ன நடந்தது என்பதையெல்லாம் நாமறியோம். அதைப்பற்றியெல்லாம் இன்று நாம் கவலைப்படத் தேவையுமில்லை. ஏனென்றால், வேவல் திட்டம் பகிரங்கமாய் வெளி வந்திருக்கிறது. அதைப்பற்றி ஆராய, தலைவர்களின் மகாநாடு சிம்லாவில் நடந்து, ஒரு கட்டத்திலே நின்று கொண்டிருக்கிறது.

வேவல் திட்டம் என்ன சொல்லுகிறது? தற்காலிகமாக,

மூல புருஷர் புலாபாய் தேசாய்

பாமர மக்களின் உறு துணைவன் காந்தி

ஓயாது உழைக்கும் உத்தமன் ராஜாஜி

இந்தியத் தலைவர்களால் பொறுக்கப்பட்டு, பிரிட்டிஷ் சர்க்காரின் சம்மதம் பெற்று, பல கட்சி அங்கத்தினர்களையும் கொண்ட வைசிராய் நிர்வாக சபை ஒன்று புது முறையில் அமைந்து, தேசிய சர்க்கார் போல-உண்மையில் தேசிய சர்க்கார் அல்ல-நடந்து கொள்ளலாம் என்றே சொல்லுகிறது. வேவல் திட்டத்தின் நிபந்தனைகளைக் கவனிக்கும்போது, இது அவ்வளவு சுலபமான வேலையாகத் தோன்றவில்லை. சர்வ கட்சிகளும் ஒத்துப்போய், இத்தகைய ஒரு கூட்டு நிர்வாகசபை அமைந்தாலும், அது வெற்றிகரமாய், நாட்டின் முன்னேற்றத்துக்குகந்த முறையில், ஒத்த மனதோடு, நோக்க ஒருமையும் லட்சிய ஒருமையும் கொண்டு, தேசிய சர்க்கார் போல் செயல்புரிய முடியுமா என்பதும் சந்தேகம் தான். என்றாலும், ஒரே ஒரு காரணத்துக்காக, வேவல் திட்டத்தை நாம் வரவேற்க வேண்டியதாகிறது. இந்தியாவின் ஆட்சி அதிகாரம் ஆறாயிரம் மைலுக்காலுக்கப்பாலுள்ள ஓரிடத்திலே இருப்பதை விட்டு, இந்தியாவுக்குள்ளே எவர் கையிலே வந்து சேர்ந்தாலும், அது பெரிய லாபம் என்பது தான் அந்தக் காரணமாகும்.

வேவல் திட்டத்தின்படி அமையும் நிர்வாகசபை, ஒரு தேசிய சர்க்கார் போல் சுதந்தரமாய் ஆட்சிபுரிய முடியுமா என்ற பிரச்னையை, இங்கிலையில் நாம் ஆராயத் தேவையில்லை. கூட்டு நிர்வாக சபையில் எதுவரையில் காங்கிரஸ் மந்திரிகள் இருக்கிறார்களோ அதுவரையில், அதன் சுதந்தரத்துக்குப் பங்கம் வர அவர்கள் இடங்கொடுக்க மாட்டார்கள் என்ற நிச்சயம் நமக்கு உண்டு. மாகாணங்களில் காங்கிரஸ்காரர் மந்திரி சபைகளை அமைத்தபோது எந்த நிபந்தனையிலே அவர்கள் பதவி ஏற்றார்களோ அதே நிபந்தனையோடு தான் மத்திய சர்க்காரிலும் அவர்கள் பதவி யேற்பார்கள். மாகாணங்களில் அவர்கள் சுதந்தர சர்க்கார்களாய்த் தான் நடந்துகொண்டார்கள். மத்திய சர்க்காரிலும், அந்த உரிமையை அவர்கள் நிலைநாட்டுவார்கள் என்ற நம்பிக்கை நமக்கு உண்டு. ஆகையால், சிம்லா மகாநாடு வெற்றி பெறவேண்டுமென்றே நாம் விரும்புகிறோம்.

ஆனால், மத்திய நிர்வாக சபையில் ஹிந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் சமமாக ஐந்து, ஐந்து அங்கத்தினர்கள் இருக்கவேண்டுமென்று வேவல் திட்டம் கூறுகிறது. இவ் விஷயத்தில் தான் இப்போது பெரிய தகராறு ஏற்பட்டிருக்கிறது. மகாநாடு ஜூலை மாதம் 14-ஆம் தேதிக்கு ஒத்திப்போன காரணமும் இதுவே தான். இதன் நியாய அநியாயங்களைப் பற்றியெல்லாம் இங்கே ஆராயப் போவதில்லை. இந்தச் சமத்துவம் அளிப்பதைப் பற்றியும் நாம் அஞ்சவில்லை. இதனால் எழுந்திருக்கும் சிக்கலைப் பற்றியே, நாம் கவலைப் படுகிறோம். இதுவரையில் வந்த செய்திகளைப் பார்க்கும்போது, காங்கிரஸ் மிக்க தாராள மனோபாவம் காட்டி வருவது தெளிவாகிறது. ஒன்று, காங்கிரஸுக்கு ஐந்து அங்கத்தினர், லீக்குக்கு ஐந்து அங்கத்தினர் என்று தீர்மானிக்க வேண்டும்; அல்லது, ஹிந்துக்களுக்கு ஐந்து அங்கத்தினர், முஸ்லீம்களுக்கு ஐந்து அங்கத்தினர் என்று உறுதிப்படுத்த வேண்டும். முதலில் சொன்னபடி தீர்மானித்தால், ஹிந்துக்களைத் தான் காங்கிரஸ் நியமிக்க

வேண்டுமென்று வற்புறுத்த முடியாது. ஆனல், முதலில் சொன்னபடி தீர்மானிக்க வைஸிராயோ பிரிட்டிஷ் சர்க்காரோ சம்மதிப்பார்கள் என்று தோன்றவில்லை. இரண்டாவது சொன்னபடி உறுதி செய்வதானல், ஐந்து முஸ்லீம்களையும் தானே நியமிப்பேன் என்று லீக் சொல்ல முடியாது; அது நியாயமல்ல. லீக்கில் உள்ள முஸ்லீம்களுக்கு மாத்திரம் தான் லீக் பிரதிநிதியா யிருக்க முடியும், எல்லைப் புறத்திலுள்ள தேசிய முஸ்லீம்களுக்கும் பஞ்சாபிலுள்ள யூனியனிஸ்ட் முஸ்லீம்களுக்கும், இன்னும் நாட்டிலே லீக்கை விரும்பாத எத்தனையோ முஸ்லீம்களுக்கும் லீக் பிரதிநிதியா யிருக்க முடியாது. அவர்களின் கதி யெல்லாம் என்ன? ஜின்ன சாகேப் இப்போதாவது பிடிவாதம் காட்டாமல் நியாய புத்தியோடு நடந்துகொண்டால் தான், சிம்லா மகாநாடு வெற்றி பெறும். இல்லாவிட்டால் நாட்டுக்கு மட்டிலுமல்ல, எந்தச் சமூகத்துக்குத் தாம் உழைப்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கிருரோ அந்த இந்திய முஸ்லீம் சமூகத்துக்குமே அவர் தீங்கு புரிந்தவராகி விடுவார். ஜின்ன என்ன செய்கிருர், பார்க்கலாம்.

*

பொறுப்புக்கு அஞ்சாத வீரன்

"நான் கிழவனுகி விட்டேன்" என்கிருர் பண்டித ஜவஹர்.

ஆனல், "ஜவஹர் தான் என் வார்சு" என்கிருர் மகாத்மா காந்தி.

பண்டித ஜவஹர் இப்போது தான் சிறையிலிருந்து வெளி வந்தார். அவருடைய வீர கர்ஜனையைக் கேட்டோரும் படிப்போரும் அவரைக் கிழவன் என்ருல் நம்பமுடியாது.



அன்று காந்தி "சௌரி சௌரா கலவரங்களுக்கு நான் பொறுப்பு" என்ருர்.

இன்று "ஆகஸ்டு கலவரங்களுக்கு நான் பொறுப்பு ஏற்கிறேன்" என்கிருர் நேரு.

பொறுப்புக்கு அஞ்சாத இத்தகைய வீரத் தலைவர்களைப் படைத்த இந்தியா பாக்கியமுடைய தாகும். உலகெங்குமிருந்து கணக்கிலடங்கா வாழ்த்துச் செய்திகளைப் பெற்றுவரும் பண்டிதரை நாமும் மனதார வாழ்த்துகிருேம்.

காலச்சுழல்

சிதம்பரம் பிள்ளை நிதி : ஐரோப்பியக் கப்பல் கம்பெனிகளால் நாட்டின் பணம் அநியாயமாய்ப் பறிபோவதைத் தடுக்க எண்ணி, தமிழ் நாட்டிலே கப்பல் விட முயன்று, ஐரோப்பியக் கப்பல் கம்பெனிகளின் கோபத்துக்கும் சர்க்கார் சீற்றத்துக்கும் ஆளாகி, சொல்லொணா இன்னல்களை அனுபவித்தவர் ஸ்ரீ வ. உ. சிதம்பரம் பிள்ளை. அவருடைய தேச பக்தி இணையற்றது. அவருடைய ஞாபகார்த்தமாகத் தூத்துக்குடியில் லட்ச ரூபாய் செலவில் ஒரு மண்டபம் கட்டவேண்டுமென்பதற்காகத் தூத்துக்குடிப் பிரமுகர்கள் ஒரு நிதி வசூல் கமிட்டி அமைத்திருக்கிறார்கள். கமிட்டியின் தலைவர் : ஸ்ரீ மு.சி வீரபாகுப் பிள்ளை. காரியஸ்தர்கள் : (1) ஸ்ரீ பெ. கந்தசாமிப் பிள்ளை, (2) ஸ்ரீ எம். வெங்கடகிருஷ்ணன். பொக்கிஷதார் : ஸ்ரீ எ. பி. ஸி. வீரபாகு. அங்கத்தினர்கள் : (1) ஸ்ரீ எ. ஸி. எஸ். கந்தசாமிச் செட்டியார், (2) ஸ்ரீ ஜே. எல். பி. ரோச் விக்டோரியா, (3) ஸ்ரீ ம. கோபால் நாயக்கர், (4) ஸ்ரீ சி வ ந. சின்னக்கண்ணுப் பிள்ளை, (5) ஸ்ரீ எம். வி. சுந்தர் வேல், (6) ஸ்ரீ எஸ். என். சோமயாஜுலு, (7) ஸ்ரீ என். துரைசாமி நாடார். கமிட்டிக்கு நாடெங்கும் பேராதரவு கிடைக்கும். கமிட்டியார் எதிர்பார்க்கும் தொகை கிடைப்பது பெரிய காரியமல்ல; ஆனால், அதற்குத் தமிழ் நாடெங்கும் உள்ள மக்கள் பண உதவி செய்து, காலஞ்சென்ற பிள்ளையிடம் தங்கள் நன்றியையும் நன் மதிப்பையும் காட்டிக் கொள்ள வேண்டும். சிதம்பரம் பிள்ளையின் நாமம் தமிழர் இதயத்திலே என்றென்றும் குடிகொள்ளவேண்டும்.

மோசமான உத்தரவு : பொது உடைமைக் கட்சியாரின் அடிப்படைக் கொள்கைகளிலே, நமக்கு என்றும் பற்றுதல் உண்டு. மக்களின் குறைகளையும் கஷ்டங்களையும் அவர்களின் பத்திரிகைகளைப் போல் விசாரித்தறிந்து அம்பலம் செய்பவை வேறு எவையுமில்லை. அவர்களின் 'பீப்பிள்ஸ் வார்,' 'லோக யுத்', 'குவாமி ஜங்' என்ற மூன்று பம்பாய்ப் பத்திரிகைகளையும் மத்திய மாகாண சர்க்கார் தங்கள் மாகாணத்துக்குள் வரக்கூடாதென்று தடையுத்தரவு விதித் திருக்கிறார்கள். இது மிக மிக மோசமான உத்தரவாகும். ஜனப் பிரதிநிதிகள் அடங்கிய ஜனநாயக ஸ்தாபனம் எதுவும் வேலை செய்யாத காலத்தில், பொது மனோபாவத்தையும் அவர்களின் குறைகளையும் கஷ்டங்களையும் வெளிப்படுத்த உள்ள ஒரே ஜனநாயக சாதனம் பத்திரிகைகள் தான. அவைகளையும் இப்படித் தடுத்துவிடுவது ஜனநாயக வாழ்க்கைக்கு அடியோடு ஊறு செய்வதாகும். இந்தியப் பொது உடைமைக்காரர்களின் தற்போதைய நடைமுறையையும் கொள்கையையும் நம்மால் பூராவும் ஒப்புக்கொள்ள முடியா விட்டாலும், அவர்களின் பத்திரிகைகளை இப்படிச் சர்க்கார் அடக்குவதை நாம் பலமாய்க் கண்டிக்கிறோம்.

✲

ராஷ்டிரபதி ஆஜாத்

ஸரஸி

இந்தியாவில் மட்டுமல்ல; எங்கெங்கே அரபு பாஷையும், பெர்ஷிய பாஷையும் பேசப்பட்டு வருகின்றனவோ அங்கெல்லாம் கீர்த்தியும் செல்வாக்கும் பெற்றவர் மௌலானா அபுல் கலாம் ஆஜாத். "எப்போதாவது உலக மதங்கள், நாகரிகங்கள் இவைகளின் மகாநாடொன்று, ஆக்ராவில் உள்ள அக்பர் மசூதியின் பெரிய ஹால் ஒன்றிலே கூடுமானால், அதிலே நான் கலந்து கொண்டால், அந்த மகா நாட்டுக்குத் தலைமை வகிக்க மௌலானா அபுல்கலாம் ஆஜாதைத்தான் நான் பிரரேபிப்பேன்" என்று ராஜாஜி ஒரு சமயம் அவரைப் புகழ்ந்துள்ளார். ஏனெனில், அவ்வளவு அரிய பண்டிதர் மௌலானா ஆஜாத். அவருடைய தகப்பனர், பாட்டனர் ஆகிய முன்னோர்கள் அனைவருமே பல தலைமுறைகளாய் முஸ்லீம் மத நூல்களில் சிறந்த பண்டிதர்கள்.

மௌலானா ஆஜாதின் தந்தை முகம்மது கைருத்தீன், மத பண்டிதரும் சூபியுமாக டில்லியில் வாழ்ந்தார். டில்லியில் மட்டுமின்றி, குஜரத், கத்தியவாட், பம்பாய், கல்கத்தா ஆகிய இடங்களிலெல்லாம் அவருக்கு ஆயிரக்கணக்கான சிஷ்யர்கள் இருந்தார்கள். முஸ்லீம்களையன்றி, பல ஹிந்துக்களும் அவருடைய சிஷ்யர்களாயிருந்தார்கள். 1857-ஆம் ௵ 'சிப்பாய் கலக' காலத்தில் பிரிட்டிஷ் ஸோல்ஜர்கள் புரிந்த அட்டூழியங்களைச் சகியாமல், கைருத்தீன், முகம்மது நபியின் அவதார ஸ்தலமான மெக்காவுக்குப் போய்விட்டார். மௌலானா ஆஜாத் மெக்காவில் தான் 1888-ஆம் ௵ பிறந்தார். அரபு தான் ஆஜாதின் தாய்மொழி. ஏனெனில், அவருடைய தாயாருக்கு வேறே எந்த பாஷையும் தெரியாது. தந்தையிடமிருந்துதான், ஆஜாத் உருது பாஷை கற்றுர்.

இந்தியாவில் இருந்த சிஷ்யர்கள் வேண்டிக் கொண்டதால், ஆஜாதின் தந்தை கைருத்தீன் 1898-ஆம் ௵ மீண்டும் கல்கத்தாவில் வந்து குடியேறினர். ஆஜாதுக்குச் சிறு வயதில் அஹம்மது என்று பெயர். பிரோஷ் பக்த் என்றும் அவரைத் தந்தை அழைப்பார். மகனுக்கு ஆங்கிலக் கல்வி கூடாதென்று கைருத்தீன் தீர்மானித்தார். கெய்ரோவில் உள்ள 'அல்-அஷார்' என்ற சர்வகலாசாலைக்கு அனுப்பினர். அங்கே தேர்ச்சி பெற்று ஆஜாத் திரும்பி வந்தார். பதினறு வயதிலேயே அவரை ஒரு பெரிய மேதை என்று எல்லாரும் கொண்டாடத் தொடங்கினர்கள். பதினறு வயதில், ஆஜாத் ஓர் உபாத்தியாயராகிவிட்டார்.

அவரிடம் பாடங் கேட்ட மாணக்கர்களில், வயது முதிர்ந்த ஒரு பட்டாணியர் இருந்தார். தர்க்க சாஸ்திரம் சம்பந்தமான 'காயாஸ்' 'இஸ்தாக்ரா' என்ற இரண்டு வார்த்தைகளுக்கும் ஆஜாத் அர்த்தம் சொல்லிக் கொடுத்தார். "காயாஸ் என்றுல் பொதுவிலிருந்து சிறப்புக்கு; அதாவது மேலிருந்து கீழே. இஸ்தாக்ரா என்றுல், சிறப்பிலிருந்து பொதுவுக்கு; அதாவது கீழிருந்து மேலே" என்று ஆஜாத் பன்னிப் பன்னிச் சொல்லியிருந்தார். அடுத்த நாள் கேட்டபோது, பட்டாணியர் அத்தனையையும் தலைகீழாய் மாற்றிச் சொன்னர். ஆஜாத் ஆத்திரங்கொண்டு "உமக்குப் படிப்பு வராது. வீட்டுக்குப் போய்ப் புல்லைத் தின்னும்" என்று திட்டிவிட்டார். பட்டாணியர் ஒரு நாள் பூராவும் உணவு கொள்ள

காங்கிரஸுக்குத் தலைமை வகித்த பெரியார்களில் மௌலானா அபுல்கலாம் ஆஜாத், ஓர் அபூர்வ புருஷன். அவருடைய தேசிய உணர்ச்சியும், சமய ஞானமும், புத்திக் கூர்மையும் அளவிறந்த தாகும். அவர் வாழ்க்கை வரலாறு மிக்க ருசிகரமானது; உருக்கம் நிறைந்தது.

வில்லை. இதைக் கேள்வியுற்ற கெருத்தீன் பெருங்கோபத்தோடு மகனிடம் வந்தார். "உன் செயல் உனக்கு வெட்கமாயில்லையா? பட்டாணியருக்கு உன் தகப்பனைப் போல் வயசாயிற்றே. போய் அவரிடம் மன்னிப்புக் கேள். சாப்பிடும்படி வேண்டிக்கொள்" என்றார். ஆஜாத் அப்படியே செய்தார். பட்டாணியர் 'நீங்கள் என் உபாத்தியாயர். என்னைத் தண்டிக்க உங்களுக்கு உரிமையுண்டு. என்னை நீங்கள் மன்னிப்புக் கேட்க அவசியமில்லையே" என்று சொன்னார். ஆஜாத மனமுருகி விட்டார். பட்டாணியர் உணவு கொள்ளும் வரையில், அவரை விட்டு ஆஜாத் நகரவேயில்லை.

ஆஜாத் பதினைந்து வயதில் லிஸாஸ் ஸித்திக் (உண்மையின் குரல்) என்ற பெயருடன் ஓர் இலக்கியப் பத்திரிகை நடத்தினார். அதன் புகழ் பரவியது. லாகூரில் 'அஞ்சுமானி ஹிமாயதி இஸ்லாம்' என்று ஒரு சங்கம் உண்டு. அதில் இவரை 1904-ஆம் வருஷம் ஒரு பிரசங்கத்துக்குக் கூப்பிட்டார்கள். பிரபல கவிஞர் ஹாலி, உன்னதமான உர்து எழுத்தாளர் நாஜிர் அஹமது, கீர்த்தி மிக்க கவிஞர் முகம்மது இக்பால் ஆகிய பல பிரமுகர்கள் இந்தப் பிரசங்கத்தைக் கேட்க வந்தார்கள். கவிஞர் ஹாலியின் ஒரு புத்தகத்தைப்பற்றி ஏற்கெனவே ஆஜாது தமது பத்திரிகையில் மிகவிரிவாகவும் அருமையாகவும் ஒரு மதிப்புரை எழுதியிருந்தார். அந்தப் பொருட் செறிவுள்ள மதிப்புரை எழுதிய ஆசிரியரைப் பார்க்க வேண்டுமென்று கவிஞருக்கு ஆசை. அவருக்கு ஆஜாத் அறிமுகம் செய்விக்கப்பட்டபோது, இந்தச் சிறு பையனை ஆஜாத் என்று அவர் எண்ணவில்லை; ஆஜாதின் மகன் என்று நினைத்தார். இவரே ஆஜாத் என்று அறிந்ததும், அவர் எல்லையில்லா ஆச்சரியமடைந்தார். பிரசங்கம் நடந்தபோதோ, அறிஞர் அனைவரும் மேலும் பிரமித்து விட்டார்கள்.

ஆஜாத் சிறு வயதிலே கவிகளும் எழுதுவார். காலிப் என்ற மகா கவியின் சிஷ்யரான நாதிர்க்கான் என்பவருக்கு இதில் நம்பிக்கையில்லை. ஆஜாத் எவையோ பழங் கவிதைகளின் அடிகளைத் திருடிக் கோத்து, பாட்டுப் பண்ணி விடுகிறார் என்று அவர் எண்ணினார். ஒரு நாள் ஒரு புத்தகக் கடையின் எதிரே, ஆஜாதை நாதிர்க்கான் சந்தித்தார். "நீ என்னவோ பாட்டுமேல் பாட்டாய்க் கட்டித் தள்ளுகிறாயாமே. எல்லாம் நீயே கட்டுபவையா? எங்கேயாவது திருடுகிறாயோ?" என்று கேட்டார். "நான் தான் கட்டுகிறேன்" என்று சொன்னார் ஆஜாத். "அப்படியானால், இதோ ஒரு தாரா இருக்கிறது: யத் ந ஹோ, ஷத் ந ஹோ. அபத் ந ஹோ. இதை வைத்துக் கொண்டு, பாட்டுக் கட்டு, பார்க்கலாம்" என்றார் நாதிர்க்கான். மழை மேகம்போல் பல அடிகளைக் கமனம் செய்து சொரிந்துவிட்டார் ஆஜாத். நாதிர்க்கானின் பரவசம் சொல்லி முடியாது. "ஸுப்பான் அல்லா, ஸுப்பான் அல்லா!" என்று கூச்சலிட்டுக்கொண்டு பகிரங்கமான பஜாரில் கடைவாசலில் குதிக்கத் தொடங்கி விட்டார். ஆஜாத் அந்தக் காலத்தில் 'ஆஜாத்' என்ற புனை பெயருடனே பாட்டுகள் கட்டிவந்தார். அதுவே இன்றும் நிலைத்துவிட்டது.

1908-ஆம் வருஷம் ஆஜாதின் தந்தை காலமாகிவிட்டார். அதன்பின்பு, ஒரு நண்பர் சொன்ன யோசனையின் பேரில், ஆஜாத் ஆங்கில இலக்கணப் புத்தகமும் அகராதியும் வைத்துக் கொண்டு அந்த பாஷையைக் கற்றார். அந்தக் காலத்தில் வங்காளப் பலாத்காரப் புரட்சிக்காரர் பலரிடம் ஆஜாத் நேசம் கொண்டார். ஆனால், அவர்களின் இயக்கத்தில், எவ்வளவு தூரம் இவர் சம்பந்தம் கொண்டார் என்று திட்டமாய்ச் சொல்வது சாத்தியமில்லை. இப்போது தான், தேசீய இயக்கம் வலுத்தது. பிரித்தாளும் தந்திரத்தை, சர்க்கார் தீவிரமாய்க் கையாண்டார்கள். முஸ்லீம்கள் தேசீயத்தை விட்டு விலகியிருப்பது, ஆஜாதுக்கு அளவிறந்த துயரம் தந்தது. அவர்களைத் தேசீயத்துக்குத் தூண்ட 'ஆல் ஹிலால்' (பிறை)

என்ற பத்திரிகையை 1912-ஆம் ஆண்டு ஆஜாத் ஆரம்பித்தார். அதன் வருஷச் சந்தா ரூபாய் பனிரண்டு. அக் காலத்தில் இது பெரிய தொகை யாகும். அப்படியிருந்தும் ஆறே மாதத்தில், அதன் சந்தாதாரின் எண்ணிக்கை பதினோராயிரம் ஆக உயர்ந்துவிட்டது. சந்தாதாரில் மிகப் பெரும்பான்மையோரும் முஸல்மான்கள். ஆஜாதின் எழுத்து, குத்தலும் விறுவிறுப்பும் இலக்கிய நயமும் செறிந்து விளங்கியது. சென்ற மகா யுத்த காலத்தில் அதன் சந்தாதார் தொகை இருபத்தையாயிர மாயிற்று. அந்த இருபத்தையாயிரம் பிரதிகளில் ஒவ்வொரு பிரதியையும் பலபேர் கூடிக்கொண்டு வாசிப்பார்கள். நாட்டின் பல பாகங்களிலே ஆஜாதின் பத்திரிகைக்குச் செல்வாக்கு ஏற்பட்டது. அலஹபாத் ஆங்கிலோ-இந்தியப் பத்திரிகையான 'பயனீர்' ஆஜாதின் பத்திரிகையைப் பிரமாதமாய்த் தாக்கியது. ஆஜாதின் பத்திரிகையை அடக்க வேண்டுமென்று பார்லிமெண்டிலும் பலர் கேள்வி கேட்டார்கள். இந்திய சர்க்கார் சீறி யெழுந்தார்கள். ஆஜாதின் பத்திரிகை முதலில் கட்டிய ஜாமீனைப் பறிமுதல் செய்தார்கள். புதிதாய், பதினாயிரம் ரூபாய் ஜாமீன் கேட்டார்கள். ஐக்கிய மாகாணம், மத்திய மாகாணம், டில்லி, பஞ்சாப், பம்பாய் ஆகியவற்றில் எல்லாம் அது நுழையக்கூடாது என்று தடையுத்தரவும் போட்டார்கள். ஆஜாதையும் வங்காள மாகாணத்தை விட்டு வெளியேற்றினார்கள். 'ஆல் ஹிலால்' நின்றுவிட்டது. 1916-ஆம் ஆண்டு பீஹாரைச் சேர்ந்த ராஞ்சியில், ஆஜாதைப் பந்தோபஸ்துக் கைதியாகவும் சர்க்கார் சிறைப்படுத்தி விட்டார்கள். 1919-ஆம் ஆண்டு தான் அவர் விடுதலையடைந்தார்.

1921-ஆம் ஆண்டு விண்ட்ஸர் கோமகனை வேல்ஸ் இளவரசர் இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்தார். அவரது பிரயாணத்தைப் பகிஷ்கரிப்பதில், ஆஜாதும் தேசபந்து தாஸும் முக்கியமான பங்கு எடுத்துக்கொண்டார்கள். இருவரும் சிறைத் தண்டனை யடைந்தார்கள். 1922-ஆம் ஆண்டு முஸ்லீம் லீக், அகில இந்தியக் கிலாபத் கமிட்டி இரண்டுக்கும் மௌலானா ஆஜாதுதான் தலைவரா யிருந்தார். 1923-ஆம் ஆண்டு நடந்த காங்கிரஸுக்கு அவர் தலைவராய்த் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்போது அவருக்கு வயது 35. இவ்வளவு சிறிய வயதில் காங்கிரஸ் தலைமைப் பதவி வகித்தவர் இதுவரையில் அவர் ஒருவர்தான். காந்திஜி அப்போது சிறையி லிருந்தார். தேச பந்து தாஸின் தலைமையில், சுயராஜ்யக் கட்சி தோன்றி, சட்டசபைப் பிரவேசத்தை வற்புறுத்தியது. ராஜாஜியின் தலைமையில் மாறுதல் வேண்டாதார் கட்சி, அதை எதிர்த்தது. இரு கட்சிகளுக்கும் சமரசமாக ஒரு தீர்மானத்தை ஆஜாதுதான் தயாரித்து நிறைவேற்றச் செய்தார். 'சட்டசபையில் நம்பிக்கையுள்ளவர் அதற்குள் செல்லட்டும்; அதில் நம்பிக்கை யில்லாதவர் நிர்மாணத் திட்டங்களில் ஈடுபடட்டும்' என்பதுதான் அந்தச் சமரசம். பின்னால், ஒவ்வொரு சட்ட மறுப்பியக்கத்திலும் சம்பந்தப்பட்டு, ஆஜாத் சிறை சென்றார். 1937-ஆம்

அகங்காரத்துக்கு மாற்று

'நான்' என்பதை உன்னிடமிருந்து போக்கமுடியாதென்று நீ கண்டால், 'தாசனான நான்' என்ற தன்மையோடு அது உன்னிடம் இருக்கட்டும். 'நான் ஈசுவர தாஸன்', 'நான் ஈசுவர பக்தன்' என்று உணர்கிற அகங்காரத்தினிடமிருந்து அதிகத் தீங்கு உண்டாகாது. சர்க்கரைப் பண்டங்கள் அஜீர்ணத்தைத் தரும். ஆனால், கற்கண்டுக் கட்டி இந்த விதிக்கு ஒரு விலக்காகும். அதற்கு அந்தத் தோஷ மில்லை. 'தாஸனான நான்' 'பக்தனான நான்' 'குழந்தையான நான்' என்ற மனோபாவ மெல்லாம், கோலால் ஜலத்தில் கிழிக்கப்பட்ட கோடு போலாகும். அது நீடித்திருப்ப தில்லை.

—ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்.

ஆண்டு பல மாகாணங்களில் காங்கிரஸ் மந்திரி சபைகள் ஏற்பட்டபோது, காங்கிரஸின் அகில இந்தியப் பார்லிமெண்டரி சப்-கமிட்டி அங்கத்தினர் மூவரில் அபுல்கலாம் ஆஜாதும் ஒருவர். ராஜன் பாபுவும், சர்தார் படேலும் மற்ற இருவராவர். 1940-ஆம் ஆண்டு 183-ஓட்டுகளுக்கு எதிரே 1,854 ஓட்டுகள் பெற்று, மீண்டும் ஆஜாத் ராஷ்டிரபதியானார். அது முதல் இது வரையில் காங்கிரஸ் மகாசபை மறுபடியும் கூடாததால், அவரே ராஷ்டிரபதியா யிருந்து வருகிறார்.

ஆஜாதின் தியாகம் அளவிட முடியாதது. ஒரு சமயம் முஸ்லீம் மத அதிகாரிகள் பலரும் லாகூரில் விசேஷ மகாநாடு ஒன்று கூட்டி, அகில இந்தியாவுக்கும் இஸ்லாம் மதத் தலைவராக 'இமாம்' என்ற பதவியை அவருக்கு அளிக்க முன் வந்தார்கள். அவர் மறுத்துவிட்டார். சில நாளில் அவர் சிறை சென்று 1923-ஆம் ஆண்டு விடுதலை யடைந்த போது, மீண்டும் 'இமாம்' பதவியை அவருக்களிக்க, ஜமையத் - உல் - உலிமா சபையார் முன் வந்தார்கள். அப்போதும், அவர் அதை மறுத்து விட்டார்.

மௌலானா ஆஜாத், நேர்த்தியான உர்தூவில்தான் பேசுவார். ஆங்கிலத்தில் அதிகமாய்ப் பேசமாட்டார். ஆயினும், பற்பல ஆங்கிலக் கவிதைகளையும் நவீனமான இலக்கியங்களையும் ஏராளமாய்ப் படித்திருக்கிறார். காந்திஜீயிடமும் காங்கிரஸ் காரியக் கமிட்டியிடமும் அவருக்கு எப்போதும் அபரிமிதமான செல்வாக்கு. அவரது சம்பாஷணை பொருள் செறிந்திருக்கும். அவர் புத்திக்கூர்மை வாய்ந்தவர். இதனால்தான் 'ஆஜாத் காங்கிரஸின் மூளை; ராஜன் பாபு அதன் இதயம்; படேல் அதன் நிர்த்தாட்சண்யமான முஷ்டி' என்று, ஜான் கந்தர் வர்ணித்திருக்கிறார். ஆஜாத் இந்தியாவின் உத்தம புத்திரர்களில் ஒருவர்.

✲

குதிரைப் பந்தய 'டிப்' ரகஸ்யம்

ஜான் ஹாமெர்ட்டன் என்பவர், என்ஸைக்ளோப்பீடியா மன்னன் என்ற கீர்த்தி பெற்றவர். அவர் எத்தனையோ அகராதிகள், பத்திரிகைகளைப் பதிப்பித்திருக்கிறார்; இன்றும் பதிப்பித்து வருகிறார்.

ஒரு காலத்தில் அவர் ஒரு பத்திரிகையின் ஆசிரியராயிருந்தபோது, ஒரு நண்பரிடம் சென்றார். "என் பத்திரிகையில் குதிரைப் பந்தய 'டிப்' கொடுக்கக்கூடிய ஒரு நிபுணர் வேண்டும். உங்களுக்குத் தெரிந்த யாராவது இருக்கிறார்களா?" என்று கேட்டார்.

நண்பர் சிரித்துக்கொண்டு, "இது ஒரு பெரிய காரியமா? பந்தயக் குதிரைகளின் பெயர்களை எல்லாம் சில சீட்டுகளிலே எழுதும். குலுக்கிப் போட்டு, கண்ணை மூடிக்கொண்டு, கைக்கு வந்த சீட்டை எடும். கண்ணைத் திறந்து அதைப் படியும். அதில் என்ன குதிரையின் பெயர் இருக்கிறதோ அந்தக் குதிரையே வெல்லும் என்று 'டிப்' கொடுத்துவிடும். இதற்கு எந்த நிபுணரும் தேவையில்லை" என்றார்.

ஹாமெர்ட்டன் அப்படியே செய்தார். அவரது பத்திரிகையின் 'டிப்'களுக்கு வெற்றிக்குமேல் வெற்றி கிடைத்தது. பல காலம் இந்தத் தந்திரத்தை, ஹாமெர்ட்டன் தொடர்ந்து கையாண்டாராம்.

வெற்றிகரமான மூன்றாவது வாரம்

தினந்தோறும் இடமின்றித் திரும்புகின்றார் பலரே
திரும்பவுமே காண்பதற்கு விரும்புகின்றார் பலரே

ஏன்?

அனந்த சயனனின் சக்கரம் அந்தரத்தில் சுழல்கிறது
அம்புலியும் பிறைபிறையாய் அழகாக வளர்கிறது
திருப்பி நட்ட எருக்கு உருப்பட்டு முளைக்கிறது
திருநீலகண்டன் கழுத்தில் உயிர்ப்பாம்பு நடிக்கிறது

அத்துடன்

கிழவி குமரியாய் மாறுகிறாள்

இத்தனை விந்தைகளும் எங்கே?

மௌண்ட் ரோடு போஸ்டாபீஸுக்கு எதிரே
காஸ்மாபாலிடன் கிளப்புக்கு அருகே

சென்னை நியூ தியேட்டரில்

காரைக்குடி ஸ்ரீராம பால கான விநோத சபையார்
நடத்தும்

திருமழிசை ஆழ்வார்

என்னும் புதிய தமிழ் நாடகத்தைக் கண்டுகளியுங்கள்
டிக்கெட் விபரம் வரியுள்பட:

ரூ. 3—8—0 2—12—0, 1—10—0, 1—3—0, 0—10—0

முதல் இரண்டு வகுப்புகள் மட்டும் ரிசர்வ் செய்ய
டிக்கட் ஒன்றுக்கு ரூ. 0—5—6

செவ்வாய், புதன், வெள்ளி, ஞாயிறு மாலை 6-30 மணிக்கும்
திங்கள், வியாழன், சனிக்கிழமைகளில் இரவு 9-30 மணிக்கும்
நாடகம் நடைபெறும்

பயோ - சரசா

(IODISED SARASAPARILLA)

ரத்த சுத்தி திராவகம்

துர்நீர் சம்மந்தமான சொறி சிரங்கு, கட்டி, மேகப்பத்து, கரப்பான், முதலியவைகளுக்கும் வெட்டை சம்மந்தத்தால் ஏற்படும் கை, கால், இடுப்பு வலிகள் பிடிப்பு பக்ஷவாதம், மொழிசூலை முதலிய சகல வியாதிகளுக்கும் சிறந்த மருந்து.

பாட்டில் 1-க்கு விலை ரூ. 2-8-0

MFD. BY: **BHARATH DRUG HOUSE**

: ஏஜண்ட்ஸ் :

T. N. C. நாகலிங்கம் பிள்ளை & சன்ஸ்

மருந்து ஷாப் :: :: மதுரை

நைஜாம் சமஸ்தானம், ஆந்திர தேசம், தமிழ நாடுகளுக்கு ஏஜண்டுகள்:

சீதாராம ஜெனரல் ஸ்டோர்ஸ்

செகண்ட்ராபாத் — பெஜவாடா — மதுரை

பிசாசுகள் உண்டா?

உத்திரன்

பேய், பிசாசு, ஆவி, பூதம் என்றெல்லாம் சொல்கிறார்களே, அவை உண்டா? உண்டென்றால் அவற்றின் உருவம் எப்படி இருக்கும்? அவை மனிதரோடு பேசுமா?

பேய், பிசாசுகளில் பெரும்பான்மையோருக்கு நம்பிக்கையுண்டு. துர்மரண மடைந்தவர்களின் ஆவிதான் பிசாசாக அலைகிறது என்பது நம்மவர்களின் சித்தாந்தம். பிசாசுகள் மனிதருக்குக் கெடுதி செய்பவை என்பதும் நம் நாட்டினரின் எண்ணம். நாகரிகம் முதிர்ந்துவிட்டதாகப் பெருமையடித்துக் கொள்ளும் மேல் நாடுகளிலும் கூட, பிசாசு நம்பிக்கையுள்ளவர்கள் இருக்கத்தான் இருக்கிறார்கள். 1890-ஆம் வருஷத்தில் ஆவிகளை நேரில் பார்த்தவர்களின் ஜன கணிதி ஒன்றை ஒரு 'மனோசக்தி ஆராய்ச்சி'ச் சங்கத்தார் எடுத்தார்கள். நூற்றுக்குப் பத்துப் பேர் தங்கள் வாழ்நாளில் ஒருமுறையாவது ஆவிகளை நேரில் பார்த்திருப்பவர்கள் என்ற விஷயம் அந்த கணிதியில் வெளியாயிற்று. எனவே, பேய், பிசாசு என்பவற்றில் உலகெங்குமே பல மக்களுக்கும் நம்பிக்கையிருக்கிறது.

பேய் பிசாசுகளை நேரில் பார்த்தவர்கள் அவற்றைப் பற்றி என்ன சொல்கிறார்கள், பார்ப்போம். பிசாசுகள் உருவமில்லாமல் அலையும் மனித ஆவிதான் என்று ஒரு சாரார் சொல்லுகிறார்கள். வேறு சிலர் அவை பார்வைக்கு மனிதனைப் போல் தோன்றும் இருண்ட உருவங்கள் என்கிறார்கள். மற்றொரு சாரார், 'அவை பார்வைக்குத் தோன்றும்; ஆனால் அவைகளைத் தொடமுடியாது; காற்றில் கரைந்து மறைந்துவிடும்' என்று சொல்வதுடன், அவைகள் இறந்துபோன மனிதர்களுடைய ஆவியல்ல என்று கூறுகிறார்கள்.

பிசாசுகள் உண்டா? இல்லையா? இது இன்று நேற்றல்ல, ஒரு நாட்டில் மட்டிலுமல்ல - என்றும் எங்கும் கேட்கப்பட்டுவரும் கேள்வி. நம்புவோர் பலர்; நம்பாதவர் சிலர். நம்பாதவர்கூடச் சில சமயம் 'இருந்தாலும் இருக்குமோ' என்று சந்தேகிக்கிறார்கள். அவை உண்டா இல்லையா? யாரேனும் சாஸ்திர ரீதியாய் நிச்சயமாய்ச் சொல்ல முடியுமா?

பிசாசுகளிலும் ஜாதிபேதம் உண்டாம். பிரம்மராட்சஸ் என்பது, கல்வி மிக்கவனாயிருந்தும் கெட்ட வழிகளில் பிரவேசித்துத் துர்மரண மடைந்தவனுடைய ஆவியாம். பூதம் என்பது பணத்தின் மேல் பெரும் ஆசை கொண்டிருப்பவனது ஆவியாம். இவையிரண்டும் ஆவிகளில் உயர்ந்த ஜாதியாம். பிரேத பைசாசம் என்று ஒரு வகை இருக்கிறது. இவை எப்போதும் சுடுகாட்டை விட்டு நீங்காமல் அங்கேயே வாசம் செய்து கொண்டிருக்குமாம். தங்களிடம் எக்கச்சக்கமாக வந்து அகப்பட்டுக் கொள்பவர்களை அடித்துக் கொல்வதும், பிரேதங்களை உண்பதுமே அவைகளின் தொழிலாம். தற்கொலை செய்து கொள்பவர்கள் தான், பிசாசாக அலைகிறார்களாம். வஞ்சனையாகவோ, விபத்திலோ கொல்லப்படுபவர்கள் பேயாய்ப் போகிறார்களாம். இதெல்லாம் போக, ஜடாமுனி, காட்டேரி, மோகினி என்றெல்லாம் பேய்க் கணங்கள் இருக்கின்றன. வேறு பல துர்த்தேவதைகளும் இருக்கின்றன.

ஹிந்து சாஸ்திரங்களிலே பூத பிரேத பைசாசங்களைப் பற்றி அறிவதும், அவற்றை வசியம் செய்துகொள்வதும், ஒரு கலையாகவே காணப்படுகிறது. வேதங்களில் அதர்வண வேதமென்னும் பிரிவில் இந்தக் கலையைப் பற்றி விரிவான விவரங்களைக் காணலாம். ஏவல், பில்லி, சூனியம், குறளி, துர்த்தேவதைகள் முதலிய பல்வேறு விஷயங்களைப் பற்றியும் அது கூறுகிறது.

பிசாசுகள் உண்டென்பதற்கு எத்தனையோ கதைகள் கேட்கிறோம். படிக்கத் தெரியாத ஒரு தமிழ்ப் பெண், தமிழைத் தவிர வேறு பாஷையே அறியாதவள், திடீரென்று ஒரு நாளைக்கு மராட்டி பேசுகிறாளாம்! இது எப்படி முடிகிறது? அவள்மேல் பிசாசு வந்திருக்கும் சமயத்தில் தான் அவள் இம்மாதிரி பேசுகிறாளாம். மற்றச் சமயங்களில் அவளுக்குத் தமிழைத் தவிர வேறே ஒன்றும் புரிவதில்லை. இதைக் கேட்கும்போது பிசாசுகள் உண்டென்று நம்பத்தான் தோன்றுகிறது.

கதைகளிலே வரும் பேய் பிசாசுகளுக்கும், அவற்றை நேரில் பார்த்ததாகச் சொல்பவர்கள் கூறும் கதைகளுக்கும் சம்பந்தமே யில்லை. கதைகளில் வரும் பிசாசு கோர உருவம் உள்ளது. திடீரென்று தோன்றி மறையும். மிகவும் அதிகமாகப் பேசும். மறைகையில் தான் வந்து போனதற்கு அடையாளமாக ரோமம், சாம்பல், எலும்பு போன்ற வஸ்துக்களைப் போட்டுவிட்டுப் போகும். ஆனால், பார்த்தவர்களோ அது, சுவடே தெரியாமல் மறைந்து விடுகிறது என்கிறார்கள். மனிதனைப் போலவே தோன்றுகிறது, சம்பாஷணைகளில் ஈடுபடுவதில்லை என்றும் கூறுகிறார்கள்.

ஆனால், பிசாசுகள் இல்லை என்று மறுக்கவும் காரணங்கள் உண்டு. இந்தத் தோற்றங்களுடன், நாம் முயன்றாலும் சம்பாஷிக்க முடிவதில்லை; அவைகளும் சம்பாஷணையில் ஈடுபடுவதில்லை. சமூகப் பிரச்னைகளில் அவை சிரத்தை காட்டுவதில்லை. பிசாசுகளை நேரில் காண வேண்டும் என்று தேடித் திரிபவர்களின் கண்ணில் அந்தப் பிசாசுகள் தென்படுவதே கிடையாது. இதெல்லாம் போக, மற்றொரு விசித்திர சம்பவமும் உண்டு. உயிருடனுள்ள சிநேகிதர்களின் ஆவி கூட அருவமாகத் தோன்றுமாம்! அந்த நண்பர்கள் மயக்கத்திலோ, துக்கத்திலோ கூட அந்த நேரத்தில் இருக்கமாட்டார்கள். அப்போது எப்படி அவர்களுடைய ஆவி, அவர்களை விட்டுத் தனியே சென்றது? இன்னொரு வேடிக்கை. இறந்த மனிதர்களின் ஆவி தோன்றுவதிலும், எந்த மனிதனுடைய ஆவி தோன்றுகிறதோ, அது அவன் உயிருடன் இருக்கையில் என்ன வேலை செய்து வந்தானோ, அதே வேலை செய்வதுபோல் காட்சியளிக்குமாம். உழவன் ஒருவன் கொல்லப் பட்டானென்றால், அவன் வயலில் மண் வெட்டிகொண்டு வாய்க்காலை வெட்டி, மடை மாறி வயல்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுவதுபோல் தோற்ற மளிக்குமாம், ரொம்ப சரி! மனிதனுக்குத் தான் ஆவியுண்டு; மண்வெட்டிக்குமா ஆவி இருக்கிறது?

நாலு பேர் கூடியிருக்கும் இடத்தில் ஓர் ஆவி மூன்று பேருக்கு மட்டும் தோன்றி நான்காமவனுக்குத் தெரியாமல் இருப்பதேன்? இந்த மாதிரி பாகுபாடுகளைப் பிசாசுகள் செய்வதேன்? இம்மாதிரி பிசாசுகளின் உண்மையைப் பற்றிச் சந்தேகிக்கப் பல காரணங்க ளிருக்கின்றன. இருந்தாலும், அவை இல்லை என்று துணிந்து கூற முடியவில்லை. அவை உண்டு என்றால், விஞ்ஞான ரீதியில் அவை என்ன என்பதை விளக்கிச் சொல்ல இயலவில்லை. பிரமை யடைந்தவர்களின் கற்பனைச் சித்திரம் தான் பிசாசு என்று ஒரேயடியாய் முடிவு கட்டவும் முடியவில்லை.

பேய் பிசாசுகளைப் பற்றியாவது மக்களுக்குள் ஒருவிதமான ஒற்றுமை காணப்படுகிறது. ஏவல், பில்லி, சூனியம், குறளி வேலைகளில் அநேகருக்கு நம்பிக்கையேயில்லை. நம் நாட்டில் விரோதிகளை ஒழிக்க மந்திரவாதிகளைக் கொண்டு ஏவல், பில்லி, சூனியம், குறளி முதலியவற்றை ஏவி அவர்களைப் பயமுறுத்துவது சகஜம். அதற்கெனவே மந்திரவாதிகள் இருக்கிறார்கள். இவற்றில் குட்டிச்சாத்தானின் சேஷ்டைதான் அதிகமாகக் கையாளப்படுகிறது. அது கல் எறிவதும், கோர உருவங்களைக் காட்டிப் பயமுறுத்துவதும், பயங்கர சப்தங்களைச் செய்வதுமாகப் பயமுறுத்தும். சில மாதங்கள் தான் இப்படி இருக்கும். பின்பு, தானே நின்றுவிடும்.

விஞ்ஞான ரீதியில் இதை விளக்குவது கடினமாக இருக்கிறது. மனோவசிய சக்தியாலும், உபாசனையாலும், பொருள்களை நகர்த்தக்கூடிய ஒருவித அசாதாரண சக்தியாலும் (Paranormal Power) மந்திரவாதிகள் குட்டிச்சாத்தானை ஏவும் வல்லமை பெறுகிறார்களோ ஒரு வேளை!

உபாசனை, மனோவசியம், சாமான்களைத் தானே நகரும்படிச் செய்யக்கூடிய சக்தி இவைகளைப்பற்றி மேல் நாடுகளிலே உள்ள சர்வகலா சாலைகள் ஆராய்ச்சி நடத்திவருகின்றன. எவ்விதமான சூதும் நடக்க முடியாத ஒரு வீட்டிலே பொருள்கள் தாமே நகருவதைப் பிரத்தியட்சமாகக் கண்டிருக்கிறார்கள். சில மனிதருக்கு, தாங்களறியாமல் எட்டவிருந்தே பொருள்களை இயக்கும் ஒருவித சக்தி இருக்கிறதாம். இதை டர்ண்ஹாம் சர்வகலா சாலையில் ஆராய்ந்தார்கள். இந்தச் சக்தியை ஆங்கிலத்தில் 'அந்தர இயக்க சக்தி' (Telekinetic Power) என்று கூறுகிறார்கள. இந்தச் சக்தியுள்ளவர்கள் ஓர் அறைக்குள் வந்தாலே போதும். அறையிலுள்ள சாமான்கள் தாமாகவே நகர்கின்றனவாம்.

இறந்து போன மனிதர்களின் ஆவிகள் மனிதரோடு பேசும் எனச் சொல்கிறார்கள். ஆனால், அவை நேரடியாக மனிதர்களுடன் தொடர்பு வைத்துக் கொள்வதில்லை. மூன்றாவது மனிதன் (Agent) மூலமே பேசுகின்றன. அதுவும் அந்த ஏஜெண்ட் சுய ஞாபகத்தில் இருக்கும்போது, அவனால் ஒன்றும் சொல்ல முடிவதில்லை. ஒருவிதமான பிரமை பிடித்த நிலையில் தான் அவை தமது செய்தியைப் பிறருக்கு வெளியிடுகின்றன என்கிறார்கள். ஆவிகளோடு சம்பாஷிப்பவன் ஒருவன், ஒருவருடைய ஆவியை அழைத்துப் பேசினான். அதைப்பற்றி ஆராய்ந்தபோது, எந்த மனிதருடைய ஆவி தன்னுடன் பேசியதென்று அவன் சொன்னானோ அந்த மனிதர் உயிருடன் இருந்தாரென்றும், இவன் அவருடைய ஆவியை அழைத்துப் பேசிய அதே சமயத்தில் தம் கட்சிக்காரன் ஒருவனுடன் அவர் பேசிக்கொண்டிருந்தார் என்றும் வெளியாயிற்று. இதெல்லாம் சுத்தப் புரளியாகவே தோன்றவில்லையா?

பேய் பிசாசுகள் பெரும்பாலோரின் கண்ணில் தென்படுவதில்லை. போதுமான அத்தாட்சிகளில்லை என்பதற்காக அவை இல்லை என்று சொல்லிவிட முடியுமா? பேய் பிசாசுகளைப் பற்றிய எண்ணங்கள் மத பூர்வமானவை. மனித ஆத்மா அமரத்துவம் அடைகிறதென்றால், ஏன் அவை பேய்த் தன்மையையும் அடையக்கூடாது? பேய் இல்லையென்றால், மனிதனுக்கு ஆத்மா உண்டென்பதையே நாம் மறுத்தாக வேண்டும்; இறந்த பின் மனிதன் சுத்த சூன்யமாகிறான் என்று ஒப்புக்கொண்டாக வேண்டும். அதற்கு எத்தனை பேர் தயார்?

✲

அங்கே விலை மலிவு

கனவான்: இந்த அமெரிக்கப் பேனா என்ன விலை?

கடைக்காரர்: பதினஞ்சு ரூபாய்.

கனவான்: அடேயப்பா! கிராக்கியா யிருக்கிறதே! அதோ அந்த மூலைக் கடையில் பனிரண்டு ரூபாய் தானே சொன்னார்கள்?

கடைக்காரர்: நீங்கள் ஏன் அங்கேயே அதை வாங்கிக் கொள்ளவில்லை?

கனவான்: அவர்களிடம் இது 'ஸ்டாக்' இல்லை.

கடைக்காரர்: அப்படியா? எங்களிடம் இது 'ஸ்டாக்' இல்லாதபோது, இதை நாங்கள் அஞ்சே ரூபாய்க்கு விற்பது வழக்கம். அப்போது வாருங்கள்.

பொய்யின் மனைவி

க. சோமசுந்தரம்

உலகத்தில் அக்கிரமம் மலிந்து விட்டது. எங்கே பார்த்தாலும் அதர்மத்தின் கோர தாண்டவமே காணப்பட்டது. மனிதர்கள் எல்லாம் பாவம் செய்வதிலே மிகுந்த மகிழ்ச்சி கொண்டார்கள்.

உலகத்தின் விபரீதப் போக்கு, கடவுளுக்கு மிகுந்த கோபத்தை உண்டாக்கிற்று. இந்த அநியாய உலகத்தை அழித்துவிட வேண்டுமென்று மனங் கொண்டார். மகாப் பிரளயம் ஒன்றை உண்டாக்க எண்ணினார்.

ஆனால், ''மீண்டும் அத்தனையையும் சிருஷ்டிக்க வேண்டுமே? அதைவிட ஒவ்வோர் உயிர் வருக்கத்திலும் ஒவ்வொரு தம்பதிகளை மட்டும் காப்பாற்றி விட்டால், நலமாயிருக்குமே'' என்றெண்ணினார்.

இந்த எண்ணம் வந்தவுடன், கடவுளுக்கு மகான் நோவாவின் ஞாபகம் வந்தது. அக்கிரமம் நிறைந்த அந்தக் காலத்திலும் அவன் நீதி தவறாமலும், சத்தியவானாகவும் இருந்து வந்தான். தமது விருப்பத்தை நிறைவேற்ற அவனே தகுதியுள்ளவன் என்று நினைத்தார் கடவுள்.

நோவாவை அழைத்து, ''நீதிமானே, இன்னும் சில நாட்களில் மகாப் பிரளயம் ஒன்றை உண்டாக்கப் போகிறேன். உலகமெல்லாம் அழிந்துபோகும். மனிதரிலே உன்னை மட்டில் காப்பாற்ற விரும்புகிறேன். சீக்கிரம் ஒரு பெரிய கப்பலைக் கட்டிக் கொள். உலகத்தில் உள்ள ஜீவராசிகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு தம்பதிகளை உன் கப்பலில் ஏற்றிக் கொள். பின்னால், பிரளயம் வற்றும்போது, அவற்றின் மூலமே உலகம் தழைக்கவேண்டும். பிரளயம் தோன்றி உலகை அழித்தாலும், நீயும் உன் கப்பலும் காப்பாற்றப்படுவீர்கள்'' என்று கட்டளையிட்டார் கடவுள்.

இது ஒரு பழைய கதை தான். ஆனால், புதிய உருவம். இந்த உவமைக் கதை, பொய்யும், அநீதியும் உருவெடுத்த மாதிரி சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. அந்த இரண்டுக்கும் உலகிலே நிரந்தர உறவு இருப்பதன் ரகஸ்யம் என்ன? அது உங்களுக்குத் தெரியுமா?

கடவுளின் ஆணைப்படி மகான் நோவா ஒரு பெரிய கப்பலைக் கட்டினான். உலகிலுள்ள ஜீவராசிகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு தம்பதிகளைக் கப்பலில் ஏற்றிக் கொண்டான்.

பிரளயம் தொடங்கும் சமயம். அப்போது அங்கே பொய் ஓடிவந்தது. தன்னையும் கப்பலில் ஏற்றிக் கொள்ளும்படி நோவாவை வேண்டிற்று.

பொய்யைக் காப்பாற்ற நோவாவுக்கு விருப்பமில்லை. அவன் பொய்யை நோக்கி ''நண்பா, தம்பதிகளாக இருப்பவர்களை மட்டுமே கப்பலில் ஏற்றிக்கொள்ள, கடவுளின் ஆணை. தனியனான உன்னை எப்படி ஏற்றிக்கொள்வேன்? உன் மனைவியுடன் வந்தால் ஏற்றிக்கொள்கிறேன்'' என்று திருப்பி அனுப்பிவிட்டான்.

பொய் என்ன செய்யும், பாவம்! உலகம் அழியப்போகும் காலம் நெருங்கிவிட்டது. அந்த அவசரத்தில் யாரைப் போய்க் கலியாணம் செய்துகொள்ளும்?

ஊழிக்காற்றுத் துவங்கி விட்டது. இன்னும் கொஞ்ச நேரம் தான். சமுத்திரம் பொங்கி உலகை மூழ்கடித்துவிடும்! அப்புறம்! உலகிலுள்ள எல்லாம் அழிகையில், பொய் மட்டும் தப்பி உயிர் வாழமுடியுமா? இதை நினைக்க நினைக்கப் பொய்க்கு மனங்கலங்கியது. சாவதற்கு யாருக்காவது மனம் வருமா?

தன்னைக் கலியாணம் செய்துகொள்ள ஒருத்தியைத் தேடித் தேடி

அலைந்தது. அங்கும் இங்கும் ஓடிற்று. எங்கெங்கோ திரிந்தது. எவனும் அதை மணந்துகொள்ள விரும்ப வில்லை. பொய்யைக் கலியாணம் செய்துகொள்ள யாராவது இசை வார்களா?

தன் நிர்க்கதியான நிலையை எண்ண எண்ண, பொய்க்குத் துக்கம் தாள வில்லை. ஓரிடத்தில் அமர்ந்து தன்னை இந்த ஆபத்திலிருந்து காப்பாற்றக் கூடியவர்கள் யார் என்று சிந்தித் தது. அப்போதுதான் அதற்குத் தன் பாலியத் தோழி அநீதியின் ஞாபகம் வந்தது.

"சரி! அநீதியிடம் நிலைமையைச் சொல்லிப் பார்ப்போம். நம் பாலியத் தோழி யாயிற்றே! கொஞ்சமாவது மன மிரங்க மாட்டாளா? என் னைக் கலியாணம் செய்துகொண் டால், அவளும் இந்தப் பிரளயத்துக் குத் தப்பிப் பிழைக்கலா மல்லவா? கட்டாயம் ஒப்புக்கொள்வாள்" என்று எண்ணியது. அநீதியிடம் ஓடியது.

பொய்யின் கதையைக் கேட்டு, அநீதி சிரித்தது. பொய்யின் வார்த் தையை யார்தான் நம்புவார்கள்! ஊழிக் காற்றின் பேயிரைச்சலும், பிரளயம் வருவதற்கான உற்பாதங் களும், பொய் சொன்ன சங்கதி நிஜமே என்று அநீதியை நம்பச் செய் தன. பொய்யின் பரிதாபகரமான தோற்றமும் அநீதியின் மனத்தை இளக்கிற்று.

பொய், "என்னைக் கலியாணம் செய்து கொண்டாயானால், இந் தப் பெரிய விபத்திலிருந்து நீயுங் கூடத் தப்பிப் பிழைக்கலாம். நம் மிருவருக்கும் நோவாவின் கப்பலில் இடங் கிடைக்கும். வாழ்க்கையிலே எனக்குக் கிடைக்கும் சகல இன்பங் களையும் லாபங்களையும் உனக்கும் பகிர்ந்தளிப்பதாக வாக்களிக்கிறேன்" என்று கையடித்துச் சத்தியம் செய்தது.

பொய்யின் சத்தியமும் ஒரு சத்தி யமா? அதை யார் நம்புவார்கள்? அநீதியும் நம்பவில்லை. இருந்தாலும், அதற்கும் உயிர் வெல்லந்தானே! பொய்யை விவாகம் செய்து கொண் டது.

பிரளயம் ஆரம்பித்து விட்டது. சமுத்திரம் கரை புரண்டு உலகத்தை அழிக்கத் தொடங்கியது. நோவா வின் கப்பல் நங்கூரம் தறிபட்டுத் தண்ணீரில் மிதக்க ஆரம்பித்தது. அப்போது இரைக்க இரைக்க, அநீதி யுடன் பொய் ஓடி வந்தது.

"நோவா மகானே! இதோ நீ சொன்னபடி என் மனைவியுடன் வந்துவிட்டேன். என் பக்கத்தில் நிற் பவள் தான் என் மனைவி அநீதி. உன் வாக்குறுதிப்படி எங்களையும் உன் கப்பலில் ஏற்றிக் கொள்" என்று கத்தியது.

பொய் தனியாக வந்தபோது கடவு ளின் கட்டளையைக் காரண மாகக் கூறி, நோவா அதை விரட்டி விட்டான். இப்போது, அது தம்பதி சமேதராக வந்தி ருக்கும்போது, எப்படி அவனால் மறுக்க முடியும்? கடவுளின் கட் டளை, "தம்பதிகளாக இருப்பவர்களை ஏற்றிக் கொள்" என்பதல்லவா? அதை எப்படி மீறுவான்? பொய்யை யும் அநீதியையும் கப்பலில் ஏற அனு மதித்தான்.

பிரளயம் உலகத்தை அழித்து விட் டது. நாள்கணக்காகக் காற்றும் மழையும் கலந்தடித்தன. எங்கே பார்த்தாலும், ஜல மயமாக இருந்தது. நோவாவின் கப்பலைத் தவிர, எல்லாப் பொருள்களும் அழிந்து போயின.

கப்பலில் ஏறியதுமே, பொய் தன்னு டைய வேலையைத் தொடங்கிவிட் டது. கப்பலில் இருந்தவர்கள் எல்லா ருமே பொய்யைத் தவிர வேறெதை யும் பேசத் தெரியாதவர்களானார்கள். ஆனால், பொய் பெற்ற லாபங்களை யெல்லாம் அநீதி அபகரித்துக்கொண்டு போயிற்று. பொய்க்குத் தன் லாபங் களை அநீதி பிடுங்கிக் கொள்வது பிடிக்கவில்லை.

"நான் கஷ்டப்பட்டுச் சம்பாதிக் கும் லாபங்களை யெல்லாம் நீ அப கரித்துக் கொள்கிறாயே!" என்று பொய் கோபித்தது.

"என்ன, கலியாண காலத்தில் கொடுத்த வாக்குறுதியை மறந்து விட்டாயோ? புருஷனுக்குச் சொந்த மானதெல்லாம் மனைவிக்கும் சொந்த மில்லையா?" என்றது அநீதி.

தன் வாக்குறுதியை மீறி நடக்கப் பொய்க்கு இஷ்டம் தான். தர்ம பத்தினி விட்டால் தானே? பொய்யின் பலத்தையும் மிஞ்சி, அதன் வெற்றிகளையும் லாபங்களையும் அநீதி அபகரித்துக் கொள்ளும்போது, அதனால் என்ன செய்ய இயலும்?

எங்கெங்கோ ஓடித் திரிந்து, பொய் தன் தொழிலை நடத்தியது. அது போகு மிட மெல்லாம் அநீதியும் நிழல் போல் பின்தொடர்ந்து சென்று, பொய்யின் வெற்றிகளையும் லாபங்களையும் அபகரித்துக் கொண்டது.

ஆகவே, அன்றிருந்து உலகில் பொய் தோன்று மிடங்களி லெல்லாம் அநீதியும் பிறந்து, பொய்யால் வந்த லாபத்தை அநீதி அபகரித்துக் கொள்வது சகஜமாகிவிட்டது.

*

கடிதம் எழுதும் இன்பம்

ஒரு கடிதத்துக்குத் தபால் தலை ஒட்டும்போது, ஆஹா! எனக்கு என்ன பரவசம் உண்டாகிறது! அப்போது என் ஆத்மாவின் ஒரு கூறையே ஒருவருக்கு அனுப்புவதுபோல் தோன்றுகிறது. அதிலே என் சர்க்காரின் ஒத்துழைப்பையும் நான் விலைக்கு வாங்கி விட்டதாய்த் தோன்றுகிறது. ஒரு காகிதத்தைத் தபால் பெட்டியில் போடும்போதோ, எனக்கு இன்னும் அதிக பரவசம் உண்டாகிறது. ஏனெனில், அது காலத்துக்கும் வெளிக்குமே பாலம் போட்டுவிடுகிறது. அந்தக் காகிதம் ஒரு சமரச ஒப்பந்தம் செய்விக்கும் ராஜதந்திரியா யிருக்கலாம்; மனஸ்தாபத்தைப் பஞ்சாயத்து செய்விக்கும் மத்தியஸ்தனா யிருக்கலாம்; ரகஸ்யங்களைக் காதோடு சொல்லும் அந்தரங்க தூதனா யிருக்கலாம். மடித்த அந்தத் துண்டுக் காகிதத்தில் இத்தனை சக்தி இருக்கிறது. ஆகையால், அதன் பூர்ண இன்பத்தையும் பருகும் ஆசையால், தயங்கித் தயங்கி அதைத் திரும்பவும் பிரித்துப் பார்க்கிறேன்.

தபால் பெட்டியில் ஒரு காகிதத்தைப் போடுவது, எனக்கு உண்மையிலேயே எவ்வளவு பேரின்பம் தருகிறது! ஆனால், அதை எழுத மாத்திரம் எனக்கு நேரம் கிடைத்தால்......!

— ஓர் ஆங்கில ஆசிரியர்.

சோதிடர்களைப் பற்றி ராஜாஜி

சேவாக்கிராமத்துக்கு வரும் யாத்திரிகர்கள் வார்தாவில் தங்குமிடம் பஜாஜ்வாடி என்ற விடுதியாகும். அங்கே ஒரு நாள் காலையில் நானும் ராஜாஜியுமாய் உட்கார்ந்திருந்தோம். மனம் பதைக்கச் செய்யும் ஒரு சம்பவத்தைப் பற்றிய தகவல் அப்போது எங்களுக்கு எட்டியது. "உன் மூத்தாள் மகளால், உனக்குப் பெரும் துர்ப்பாக்கியம் நேரப் போகிறது. உன் உயிருக்கே ஆபத்து வரலாம்" என்று ஒரு மாற்றாந் தாயிடம் யாரோ சோதிடன் சொன்னனாம். இதைக் கேட்ட மாற்றாந் தாய், அந்தப் பெண்ணைக் கொன்றுவிட்டாளாம்.

"இதைப்பற்றி நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?" என்று நான் ராஜாஜியைக் கேட்டேன்.

அவர் சட்டென்று பதில் சொன்னார்: "உலகத்தில் உள்ள அத்தனை சோதிடர்களையும் தூக்கில் போடவேண்டும். அவர்களால் தொந்தரவும் கேடும் தான் விளைகிறது. மனித சமூகத்துக்கு அவர்கள் தீமையே புரிகிறார்கள்."

— கே. ராமராவ்

ஏன் நம்பிக்கை

கோமதி :— வாடியம்மா கமலம் வா! எங்கே இப்படி சாவகாசமாய் பொரப்பிட்டே.

கமலம் :— ஒங்களைப் பாத்துட்டுப் போவோ ம்னுதான் வந்தேன்.

கோமதி :— என்னைப் பாக்கரத்துக்காகவா அரை காலன் பெட்ரோலைச் செல வழிச்சுண்டு வந்தே. அப்படீன்னா நன்னா ஏந்திருந்து நிக்கிரேன் பாரு ...

கமலம் :— போங்க மாமி ... எப்போதும் கேலி தான். ராஜத்துக்குக் கல்யா ணச் சீருக்கு சாமான்களெல்லாம் வாங்கிட்டியளான்னு பார்த் துட்டுப் போவம்னு தான் வந்தேன்.

கோமதி :— என்னமோ வாங்கியிருக்கேம்மா — கேலிபண்ணாதே. அதோ அந்த அலமாரியைத் திற. நகை, வெள்ளிப் பாத்திரம் எல்லாம் இருக்கு.

கமலம் :— ஒங்க செலக்ஷனுக் கென்ன மாமி. எல்லாம் நன்னயிருக்கே ... ஆமா ... ஏம்மாமி புடவை ரவிக்கைத் துண்டெல்லாம் எங்கே காணுமே.

கோமதி :— அதை யேண்டியம்மா கேக்கரே. எங்காத்திலே — இவாளும், ராஜமும் அலையாத ஜவுளிக்கடை பாக்கியில்லே. ராஜத்தின் இஷ்டம்போல ஒண்ணும் கிடைக்கல்லே ... இதோத் தான் ரெண்டு பேரும் வெருங்கையோடே திரும்பி வராளே ...

கமலம் :— ஏண்டி ராஜம். எல்லாக் கடைகளிலுமா பாத்துட்டியள். முக்கியமாப் பாக்கவேண்டிய ஒரு கடையை விட்டுட்டியளே. மயிலாப்பூர்லே 1/14, சந்நிதித் தெருவிலே இருக்கே **ராதா ஸில்க் எம்போரியம்** அங்கே பாத்தியளோ ... இல்லியே.

ராஜம் :— பத்தியளா — அப்பா — மறந்தே போயிட்டமே. எதுராளாத்து அம்புலுகூட அந்தக் கடையைப்பத்தி சொல்லியிருக்கா.

கமலம் :— போன தீபாவளிக்கு நான் அங்கே தான் புடவை வாங்கினேன். கல்யாண காலத்துக்குன்னு நிறைய ஸ்டாக் பண்ணிருக்கா. புதுப் புது பார்டர்கள், வித விதமான கலர்கள், புது மாதிரியான தலைப்புகள். கொள்ளேகாலம் டிஷ்யூப் புடவைகள் ஒரு ஸ்பெஷல் ரகம். **8016** நம்பரைப் போன் பண்ணிக் கேட்டால் விபரம் தெரிஞ்சுக்கல்லாம். விலையும் ஸஹாயம். ரொம்ப நாணயம். எனக்கு ராதா ஸில்க் எம்போரியம்னா நல்ல நம்பிக்கை. கும்பகோணத்திலே கூட பெரிய தெருவிலே **ராதா ஸில்க் எம்போரியம்** பிராஞ்சு இருக்கு. இப்பவே புறப்படுங்கோ. ராஜத்துக்கு இஷ்டமான புடவைகள் அவசியம் அங்கே கிடைக்கும்.

....

பார்த்தீர்களா .... ஸ்ரீமதி கமலத்தின் நம்பிக்கையை. ஏன்? **நீங்களும் ஒருமுறை ராதா ஸில்க் எம்போரியத்திற்கு** குடும்பத்துடன் விஜயம் செய்யுங்களேன். Advt.

செனாரில் தேநீர் அருந்தும் நேரம்

பனி மூடிய மலைகளின் பிம்பத்தைப் பிடித்துக்காட்டும் நதிகள், ஏரிகள், காடுகள் இவை காஷ்மீரின் அழகில் உள்ளடங்கியவை. இப்பள்ளத்தாக்கிலுள்ள நீர் நிலைகளில் செல்லும் ஓடங்களின் வனப்பை வேலைப்பாடமைந்த மரத்தட்டுகளும், சோடிப்புச் சாமான்களும் அதிகப்படுத்திக் காட்டுகின்றன.

காஷ்மீர் சென்று அநாயாசமாய்ப் பொழுது போக்க ஓய்வு நாள் பெற்ற பாக்கியசாலிகள் பிற்பகலில் தேநீர் பருகுவது உண்டு. ஆற்றோரம் உலாவி வருவதால் காலதாமதம் ஏற்பட்டாலுங்கூட அந்தத் தேநீர் அருந்தும் நேரத்தை அவர்கள் மிகுந்த ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள்.

ஓடங்களில் அமைத்த பல வீடுகளில் வர்ணப் பூச்சுக்களால் பளபளவென்று கண்ணைப் பறிக்கும்படி செய்த பல காஷ்மீர் மண் பாண்டங்களை தேநீர் அருந்துவதற்காக வைத்திருக்கிறார்கள். இங்கே, ஐரோப்பிய முறையில் தேநீர் உபசரிக்கப்படுகிறது. கோப்பையில்தான் தேநீருடன் பாலும் சீனியும் கலக்கப்படுகின்றன.

காஷ்மீருக்குப் பொழுது போக்குக்காக வருகிறவர்களுக்கு மற்ற பிரதேசங்களில் அவர்களுக்குக் கிடைப்பது போலவே புத்தப் புதிய ப்ரூக்பாண்ட் தேயிலை சுலபமாய்க் கிடைக்கிறது.

ப்ரூக் பாண்ட்

"இரு இலையும் ஒரு மொட்டும்"

ராஜ குமாரி

'தூமகேது'

மாரி காலத்தில் ரூபேண் நதி கரை புரண்டு ஓடும். அப்போது அதைப் பார்ப்பதற்கு மிகவும் பயங்கரமா யிருக்கும். அதன் பிரவாகத்தின் வேகத்தில் அகப்படும் எந்தப் பொருளும் தலை கீழாக உருண்டு புரண்டு, சிறிது நேரத்தில் மறைந்து விடும். மாரி காலம் அதன் யௌவன உன்மத்தத்தில் இருந்த சமயம். ரூபேண் நதி ஒரு நாகத்தைப் போல் சீறிக்கொண்டு இரு கரையும் ஒரு கரையாய் ஓடிக் கொண்டிருந்தது. வயல்களில் எல்லாம் நீர் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. மேகங்கள் கட்டவிழ்ந்து சோவென்று மழையைச் சொரிந்து கொண்டிருந்தன. ஆகாயத்தையும் பூமியையும் ஒரே தினத்தில் ஒன்றாக்க முயற்சிப்பது போல், அவை தங்களுடைய ஆவேசம் முழுவதையுங் காட்டின. அச்சமயம் தன் குதிரையின்மீது சவாரி செய்து கொண்டு யௌவன ராஜ புத்ர ஜாகீர்தார் ஒருவன் வந்தான். குதிரை உயர்ந்த ஜாதியைச் சேர்ந்ததுதான். ஆனால், நதியின் கதியோ சொல்லொணா வேகமாயிருந்தது. ஆகையால், சிறிது நேரத்தில் வீரனும், குதிரையும் நீரில் மூழ்க, அவர்களை வெள்ளம் அடித்துக்கொண்டு போய் விட்டது. வீரனின் திறமை, தைரியம் எல்லாம் பயனற்றுப் போயின. நொடிப் பொழுதில் அந்த இரண்டு உருவங்களும் மறைந்துவிட்டன.

ரூபேண் நதியிலிருந்து செல்லும் இந்த மார்க்கமானது இதர காலங்களில் மிக்க ரமணீயமான விருட்ச ஜாதிகள் சூழ்ந்து, பார்ப்பதற்குப் பசைப் பசேல் என்று சௌந்தரியம் பொங்கக் காட்சியளிக்கும். வழியிலே விசாலமான அத்திமரம் ஒன்று நின்று நிழல் பரப்பிக்கொண்டிருந்தது. பிரயாணிகள் தங்கள் வண்டிகளை அங்கே நிறுத்தி, மாடுகளுக்குத் தீவனம் போட்டு, தாங்களும் அதன் நிழலில் சற்று இளைப்பாறுவார்கள். அந்த அழகிய அத்திமர நிழலில் இளைப்பாறிய பிரயாணிகள் எத்தனை பேரோ! களைப்பு நீங்கிப் புத்துயிர் பெற்ற மிருகங்கள் எத்தனையோ! இளமையின் ஆவேசந் ததும்பும் ரூபேண் நதி, விசாலமான அத்திமரத்தின் குளிர்ந்த நிழல், பசுமையான பயிர்கள் நிரம்பிய அழகிய வயல்கள், சுந்தரமான காடுகள் - இவைகளின் காரணமாக, சாதாரணமாய்ப் பயந்த சுபாவமுள்ள ஜனங்கள் கூட, ஆள் அரவமற்ற உச்சி நேரத்தில் அந்த இடத்தில் சற்று நேரம் தங்கி இளைப்பாறிச் செல்வது வழக்கம். இத்தகைய லாவண்யமான இடம் அது.

ஆனால், அந்த ராஜபுத்ர வாலிபனின் மரணத்துக்குப் பின்பு, அந்தச் சாலையை எல்லாரும் கைவிட்டு விட்டார்கள். இந்த வழியை விட்டு எத்தகைய கஷ்டங்களையும் சகித்துக் கொண்டு, தூரமான வேறொரு மார்க்கத்தில் ஜனங்கள் நடமாட ஆரம்பித்தார்கள். அந்தச் சாலையின் வழியாகச் செல்லும் யாத்திரிகன் எவனும் உயிருடன் திரும்பமுடியாது என்ற வதந்தி, நாலா பக்கத்துக் கிராமங்களிலும் பரவியது. முடிவில் அது ஜன நடமாட்டமற்று, ஒரு பயங்கரமான பாதையாகிவிட்டது.

கொடுமையான உச்சி வெயிலில் பாணன் ஒருவன் சமீபத்துக் கிராமத்தின் வழியாக வெளியேறி, அந்த ரூபேண் நதிச் சாலை வழியாகச் சென்று கொண்டிருந்தான். கிராம ஜனங்கள் அவனை நோக்கி, "தம்பி, இந்தப் பாதையின் வழியாகச் செல்

ஆசை நிறைவேறாமல் மரணமடைபவர்களின் ஆவி உலகத்தைச் சுற்றிக்கொண்டேயிருக்கும் என்பது ஒரு நம்பிக்கை. இதை அஸ்திவாரமாய்க் கொண்டு எழுதப்பட்டுள்ள அபூர்வமான இந்தக் குஜராத்திக் கதையை, **திரு. சு. குருசாமி** மொழி பெயர்த்துத் தந்திருக்கிறார்.

வேண்டாம். இதில் செல்பவர்கள் உயிருடன் மீள்வதில்லை'' என்று சொன்னார்கள்.

"ஏன், என்ன விஷயம்?''

"ஐந்து வருஷங்களுக்கு முந்திய சமாசாரம். ராஜபுத்ர வாலிபன் ஒருவன் அப்போது இங்கே துர்மரணம் அடைந்தான். அதிலிருந்து இந்த மார்க்கத்தை ஒருவரும் உபயோகிப்பதில்லை. மாரிகாலத்தில் நதியைக் கடக்க முயற்சிக்கையில், அவன் தன் குதிரையோடு முழுகி விட்டான். தன் மனைவியை அழைத்து வருவதற்காக, ஆவணி மாதத்தில் மாமனார் வீட்டுக்குச்சென்று கொண்டிருந்தான். மனைவியைச் சந்திக்கும் ஆசையோடும் ஆத்திரத்துடனும் அவன் சென்று கொண்டிருந்தபோது, அகாலத்திலே காலன் அவனைக் கொண்டு சென்று விட்டான். பாவம்! அவனுடைய ஆசைகள் பூர்த்தியடையவில்லை. அதிலிருந்து இந்த ரஸ்தாவில் போக்குவரத்துக் கிடையாது. எவனாவது பிடிவாதமாக இந்த வழியிலே சென்றால், அவன் உயிருடன் திரும்புவதில்லை.''

"பார்க்கலாம்!'' என்று சொல்லி, பாணன் குதிரையை வேகமாய்ச் செலுத்தினான். வேண்டுமென்றே எமன் வாயில் சிக்கிக் கொள்ளப் போகும் மூர்க்கனுடைய முட்டாள் தனத்தை நோக்கிச் சிரித்துக் கொண்டே குடியானவர்கள் சென்று விட்டார்கள். பாணன் தன் வழியே சென்றான்.

நல்ல உச்சி நேரம். வெயில் கடுமையாய்க் கொளுத்துகிறது. பிராணிகளும் பறவைகளும் மரங்களின் நிழலில் இளைப்பாறிக் கொண்டிருந்தன. எங்கும் நிசப்தம். சூரியனின் கிரணங்கள் பட்டு ரூபேண் நதி, வெள்ளிப் போர்வை போர்த்திருந்தது போல் தோன்றியது. சுந்தரமான அந்த நதியின் ஜல ராசியை நோக்கி, பாணன் உன்மத்த மடைந்தான். ஆ! அத்தி மரத்தின் கிளைகள் காற்றில் அசைந்தாடுவதும், மற்றொரு புறம் ஆலமர நிழலில் புருக்களும் மயில்களும் குயில்களும் தங்களுடைய மதுரமான குரலில் பாடுவதும் என்ன ஆனந்தம்! அந்த இடத்தின் இயற்கை இன்பத்தை அனுபவித்து, "ஆஹா! ஆஹா!'' என்று சொல்லிக் கொண்டே, பாணன் மேலும் சென்று கொண்டிருந்தான். ஆனால், அந்த அத்திமரத்தை யடைந்ததும். அவன் கண்ட காட்சி அவனைத் திடுக்கிடச் செய்தது.

அந்த மரத்தின் கீழே தேவர்கள் போன்ற சுமார் முப்பது, நாற்பது அழகிய ராஜபுத்ர வாலிபர்களின் சபை ஒன்று கூடியிருந்தது. சுத்தமான ஒரு விரிப்பின்மீது ஒரு முழ உயரத்துக்கு மெத்தைகள் பரப்பப் பட்டிருந்தன. அந்த மெத்தைகளின் மேல் அழகிய பூவேலைகள் செய்யப்பட்ட மேல் விரிப்புகளும் போடப்பட்டிருந்தன. அதன் நடுமத்தியில் பட்டினாலாகிய ஓர் ஆசனத்தின் மீது அமர்ந்து, ஒரு ராஜபுத்ர வாலிபன் அவர்களுடன் ஏதோ பேசிக்கொண்டிருந்தான். மரத்துக்குச் சமீபத்தில் கச், கத்தியவார் நாடுகளைச் சேர்ந்த குதிரைகள் சில நின்று கொண்டிருந்தன. பெருங்கூட்டம். அவர்களுக்கு முன்னே வெள்ளி இலைகள் பரப்பிக் கிடந்தன. ஒரு புறம் கசும்பா என்ற மதுபானம் தயராகிக் கொண்டிருந்தது. மற்றொருபுறம் நல்ல மிட்டாய் தினுசுகள் தாலங்களில் பரப்பி வைக்கப்பட்டிருந்தன. பத்துப் பன்னிரண்டு கிராமங்களின் தலைவனாகிய ராஜபுத்திரப் பிரபு ஒருவன், ஓரிரண்டு மணிநேரம் இளைப்பாறுவதற்காக, அந்த ரமணீயமான இடத்தில் இறங்கியிருக்கிறானே என்று தோன்றியது. இந்த ஆடம்பரத்தை யெல்லாம் கண்டதும், பாணனும் குதிரையை விட்டு இறங்கி, அந்தக் கூட்டத்தை நோக்கி நடந்தான்.

அவன் வருவதைக்கண்டதும், சபா நாயகனாயிருந்த ராஜபுத்ர வாலிபன், புன்முறுவல் பூத்தான். அவன் சபையோரை ஏதோ குறிப்போடு நோக்கியதும், அங்கிருந்த முப்பது நாற்பது பேர்களும், ஆரவாரத்துடன், "வாருங்கள், வாருங்கள், ஐயா! சரியான சமயத்தில் வந்திருக்கிறீர்கள்.

எங்கே யிருந்து வருகிறீர்கள், எங்கே போகிறீர்கள்?'' என்று அவனை வரவேற்றார்கள்.

பாணன் சிறிது மனக் கலவரத்துடன் உட்கார்ந்தான். அங்கேயிருந்த எல்லோருடைய முகங்களிலும் ஒரு தெய்வீக ஒளி பிரகாசித்துக் கொண்டிருந்தது. அவனுடைய உள்ளங் கலங்கியது. ஆனால், அத்திமரத்தினடியில் விலையுயர்ந்த குதிரைகள் கனைத்துக் கொண்டிருந்ததைக் கண்டதும், சிறிது தைரியமடைந்தான். அவனும் அந்தச் சபையிலிருந்த ஜனங்களில் ஒருவனைச் சேர்ந்து விட்டான். ஹுக்கா அவனிடம் வந்த போது, அதில் இரண்டு மூன்று இழுப்பு இழுத்தான்; கரும்பாவும் அநேகம் கிண்ணங்கள் குடித்தான். மேலும், அவர்களுடன் விதம் விதமாகச் சம்பாஷிக்கவும் ஆரம்பித்தான். எல்லாம் ஒரு சொப்பனம் போல் அவனுக்குத் தோன்றியது.

''தேவி புத்திரா, ஒரு கேள்விக்குப் பதில் சொல், பார்ப்போம்'' என்று சபாநாயகன் கூறினான்.

பாணன் அவனை ஏறிட்டு நோக்கினான்.

''இதோ பார்! பரமாத்மா எத்தனையோ தினங்களை, எத்தனையோ பருவ காலங்களைச் சிருஷ்டித்திருக்கிறார். ஆனால், ஒரு பருவத்தின் மாதுர்யம் இன்னொரு பருவத்தில் இருப்பதில்லை. இந்தப் பருவங்கள் எல்லாவற்றிலும் அழகும் மதுரமுமான பருவகாலம் எது என்று சொல், பார்ப்போம்.''

ராஜபுத்திர வாலிபனுடைய உள்ளக் கிடக்கையைத் தான் அறிந்து கொண்டதுபோல், பாணன் அவனை நோக்கி, ''பிரபு! எல்லாப் பருவங்களும் நல்லவையே. ஆனால், குளிர் காலத்தைக் கடவுள் இளம் ஆடவர்களுக்கும் பெண்டிர்களுக்கு மென்றே சிருஷ்டித்திருக்கிறார். ஆஹா! குளிர் காலத்தின் மகிமைதான் என்ன! அந்தக் காலத்தில் நாம் விதம் விதமான ஆகார வகைகளை உண்டுகளிக்கிறோம்; குளிர் காலத்தின் இளம் வெய்யில் நமக்குப் புத்துயிர் அளிக்கிறது. வறுக்கப்பட்ட புதுச்சோளம், புதுக் கோதுமை ஆகியவைகளால் செய்த அழகிய தின்பண்டங்கள், பச்சைக்கடலை, திவ்யமான பசும் பால், இவைகளுடன் அழகான இளம் பெண்! ஆஹா! குளிர்காலமே குளிர் காலம்! அதை எவ்வளவு போற்றினாலுந் தகும். சங்கர-பார்வதி சம்யோகத்துக்காகவே இந்தக் குளிர் காலம் சிருஷ்டிக்கப்பட்டது போலும்!'' என்றான்.

ராஜபுத்திரத் தலைவன் ஒளிபொருந்திய கண்களுடன் பாணன் பக்கம் நோக்கினான்.

''ஆம், நீ சொல்வது சரிதான். ஆனால், ஜீவராசிகளுக்கெல்லாம் உயிரளிப்பது மழை காலமல்லவா?'' என்று அவன் பாணனைக் கேட்டான்.

''இல்லை, பிரபு! எங்கே பார்த்தாலும் ஒரே தண்ணீர்! பாதைகளில் எல்லாம் சேறும் சகதியும்! இடி, மின்னல்! ஆடுமாடுகளுக்கு ஒரே கஷ்டம்! நதிகளிலுங் கால்வாய்களிலும் மனிதர்கள்கூட வெள்ளத்துடன் அடித்துக்கொண்டு போகப் படுகிறார்கள்...''

ராஜபுத்திரனுடைய புஜங்கள் நிமிர்ந்தன. பிரகாசம் பொருந்திய அவன் கண்களில் ஆழ்ந்த வேதனையும் கிலேசமுந் தென்பட்டன. பாணன் இதைப் பார்த்தும் பாராததுபோல், பின்னும் சொல்லலுற்றான்: ''மழை காலம் குடியானவர்களுக்கு ஏற்ற காலமா யிருக்கலாம். ஆனால், அந்தப் பருவத்தில் காதலால் ஒருவருடன் ஒருவர் பிணைக்கப்பெற்ற இளந் தம்பதிகளின் பிரசன்னமான வதனங்களிலிருந்து அன்பு ததும்பும் வார்த்தைகள் எங்கே வெளிவருகின்றன? பருவங்களில் எல்லாம் சிறந்தது குளிர் காலம். அதற் கடுத்தாற்போல் கோடை காலத்தைச் சொல்லலாம். மாரி காலமும் ஒரு காலமா? இதை யாராவது ஒரு பருவம் என்று சொல்வார்களா?''

''பேஷ்! பேஷ்! நன்றாய்ச் சொன்னாய்! நீதான் உண்மையைக் கூறுகிறாய்! நீயே உண்மையான தேவி

புத்திரன்!'' என்று கூறிக்கொண்டே, ராஜபுத்திரன் எழுந்து, பாணனிடம் வந்து, அவன் கையைப் பிடித்துத் தூக்கினான்.

"தேவி புத்திரா! நான் ஒரு ராஜ புத்திர ஜாகிர்தார்!'' என்று அவன் கூறினான்.

பாணன் பீதியுற்றுத் தன்னைச் சுற்றிலும் பார்த்தான். இது என்ன? அங்கே கூடியிருந்த அனைவரும் எங்கே? அந்த அத்திமரத்தின் கீழே, அவனும் அந்த ராஜ புத்திரனுந்தான் நின்று கொண்டிருந்தார்கள். வேறு எவரையுங் காணோம். "தேவி புத்திரா, பயப்படவேண்டாம்!'' என்று ராஜபுத்திரன் கூறினான்.

பாணன் சிரித்துக்கொண்டே, "பயப்படுவதற்கு என்ன இருக்கிறது? உமக்கு என்ன வேண்டும்? சொல்லவேண்டியதைத் தெளிவாய்ச் சொல்லும்'' என்றான்.

ராஜ புத்திரனின் முகம் நம்பிக்கையால் பிரகாசமடைந்தது. மிகுந்த பரிவுடன் பாணனின் கையை லேசாய் அழுத்தி, "ஐந்து வருஷத்துக்கு முந்திய சமாசாரம். நல்ல அடை மழை காலம். என் மனைவியை அவளது தாய் வீட்டிலிருந்து அழைத்து வருவதற்காகப் புறப்பட்டேன். ரூபேண் நதியில் வெள்ளம் கரை புரண்டோடிக் கொண்டிருந்தது. அதோ, அந்த மடுவைப் பார். (வேதனை மிகுந்த பார்வையுடன் ராஜபுத்திரன் மடுவை நோக்கிக் கையை நீட்டினான்.) நான் அந்த மடுவில் அகப்பட்டு என் குதிரையுடன் முழுகிவிட்டேன். என் காதல் மனைவியைச் சந்திக்கும் ஆசை நிறைவேறாமலே, நான் இந்த உலகத்தை விட்டுச் செல்லவேண்டி நேர்ந்தது'' என்றான்.

தன் மனதில் மலைபோல் எழுந்த துக்கத்தை அடக்க முயற்சித்தவன் போல, சிறிதுநேரம் ராஜபுத்திரன் மௌனமாயிருந்தான்.

"தேவி புத்திரா, அன்பினால் பிணைக்கப்பட்ட இருவரின் பிரிவைக் காட்டிலும், துக்கந் தரும் விஷயம் வேறே என்ன இருக்கிறது?''

"ஆம் பிரபு, வேறே என்ன இருக்கக் கூடும்? நீங்கள் சொல்லவேண்டியதைச் சொல்லி முடியுங்கள்.''

"நீ ஒரு காரியம் செய்தால், சாந்தியற்றுச் சுற்றிக் கொண்டிருக்கும் என் ஆவி நற்கதியடையும். ரூபேண் நதியைக் கடந்து அப்பால் போ. ஐந்தாறு காதங்களுக்கப்பால் தாந்தாசர் என்ற பெயருடன் ஒரு கிராமம் இருக்கிறது. அங்கே என் மனைவி வசிக்கிறாள். அவள் அழகை நான் என்னென்றுரைப்பேன்! அவள் இங்கே வந்து, எனக்கு ஒரு முறை தரிசனங் கொடுத்துவிட்டுச் சென்றுவிட்டாள் என்றால், என் ஆத்மா சாந்தியடையும். உன்னைத் தவிர, வேறே யார் இந்த வேலையைச் செய்ய முடியும்?''

ராஜபுத்திரன் இவ்விதம் சொல்லி முடித்தான். பாணன் அவனை நோக்கி, "ராஜபுத்திரா! உம்முடைய மனைவியை நான் அவசியம் ஒருமுறை இங்கே அழைத்து வருகிறேன். அதில் தவறினால், நான் உண்மையான தேவி புத்திரனல்ல. ஆனால், நீரும் ஓர் உண்மையான ராஜபுத்திரனானால், இனி ஒருபோதும் இந்த ராஜபாட்டையில் தோன்றுவதில்லை என்று எனக்கு வாக்குக் கொடுக்க வேண்டும்'' என்று கூறினான்.

"சரி, வாக்குக் கொடுக்கிறேன். நான் இதைவிட்டுப் போய்விடுகிறேன். எனது கடைசி இச்சை பூர்த்தியானவுடன், நான் இந்த இடத்தை விட்டுச் சென்று விடுகிறேன். பாணா, நல்ல அடை மழை காலத்தில் எனக்கு மரணம் சம்பவித்தது. ஆகையினால் தான், நான் மழை காலத்தை இவ்வளவு தூரம் வெறுக்கிறேன். எந்தப் பருவம் மிகவும் சிறந்தது என்று தான் நான் வழிப்போக்கர்கள் எல்லோரையும் கேட்கிறேன். அவர்கள் பீதியுற்று, இரண்டாம் நாளோ, மூன்றாம் நாளோ இறந்து விடுகிறார்கள். அதற்கு நான் என்ன செய்யமுடியும், பாணா?''

"சரி, இதற்கு எட்டாவது நாள் உம்முடைய மனைவி இந்த இடத்துக்கு வருவாள்'' என்று கூறிக் குதி

ரையின் லகானைப் பிடிப்பதற்காகப் பாணன் திரும்பினான். இதென்ன ஆச்சரியம்! அத்திமரத்தினடியில் அதன் இலைகள்தான் சல சலத்துக் கொண்டிருந்தன. அங்கே வேறொன் றையுங் காணோம்; எவரையுங் காணோம். பயத்தினால் அவனுக்குப் பிராணன் போய்விடும்போலிருந்தது. அவனுடைய இதயமும் அந்த இலை களைப்போல் துடிக்க ஆரம்பித்தது.

பாணன் தாந்தாசர் போய்ச் சேர்ந் தான். யுத்தம் என்னும் பலி பீடத்தின்மீது ஏறும் ராஜபுத்திரர் கள், பாணனை உற்சாகமும் ஆனந்த முமே உருவெடுத்துவந்த ஒரு தேவ னைய் மதிப்பார்கள். அவன் எங்கே சென்றாலும், யாரும் எந்த விதமான தடையும் சொல்வதில்லை. அவன் அந்த ராஜபுத்திரனின் மாமனார் வீட்டுக்குச் சென்று, ராஜபுதானியை ஏகாந்தமாய்ச் சந்தித்தான்.

"ராஜபுதானி, இங்கே வா. உன் னிடம் ஒரு வேலை இருக்கிறது."

ராஜபுதானியின் வதனம் எவ்வளவு வசீகரமா யிருந்ததோ, அதேபோல் அவளுடைய பேச்சும் மதுரமா யிருந் தது. அவள் வார்த்தைகளின் இனி மைக்கு ஓர் எல்லையே கிடையாது போல் தோன்றியது. "சொல்லும் தேவிபுத்திரரே, என்னிடம் என்ன வேலை?" என்று அவள் கேட்டாள்.

"சகோதரி, உயிருட னிருக்கும் போது மனிதர்கள் காதலிக்கிறார்கள் என்று கேள்விப்பட் டிருப்பாய். ஆனால், இதுவோ மரணத்துக்குப் பின் ஏற்படும் காதலா யிருக்கிறது!"

ராஜபுதானி திடுக்கிட்டாள். பாணன் சொல்வதை மேலுங் கேட்ப தற்கு, அவள் ஆவல் கொண்டாள்.

"நீ டாகுர் சாஹெப் (தலைவர்) வீட் டுக்குச் சென்று எத்தனை வருஷங்க ளாகின்றன?"

"ஐந்து வருஷம்."

"ஐந்து வருஷமா? சரி, அவர் எப் போதாவது உன் சொப்பனத்தில் தரி சனங் கொடுத்திருக்கிறாரா?"

"கிடையாது. இங்கே யிருந்து விடைபெற்றுக் கொண்டு சென்ற பின்பு, அவர் என்னை அடியோடு மறந்துவிட்டார்."

"அப்படிச் சொல்லாதே, அம்மா! உண்மையான ராஜபுத்திரன் கற் புள்ள மங்கையை எப்போதாவது மறப்பதுண்டா? பார்வதி - பரமேசு வரரில் உயர்வு தாழ்வு ஏது? அவர் உன்னை இன்னும் மறக்க வில்லை. கோபித்துக் கொள்ளாதே, சகோதரி. நீ உண்மையான ராஜபுதானி தானே?" •

ராஜபுதானி திடீரென்று எழுந்து நின்றாள். பாணன் நடுங்கினான். ராஜபுதானி உரத்த குரலில், "ஏன், நீர் அதைப் பரீட்சிக்க வேண்டுமா? டாகுர் பேயுருவம் எடுத்து, என்னைப் பற்றிய விஷயங்களை அறிந்து கொண்டு வருவதற்கு உம்மை அனுப்பியிருக்கிறாரா? அப்படி ஒன்று மில்லையே?" என்று கேட்டாள்.

பாணன் மிகுந்த பயத்துடன், "உனக்கு எப்படி அது தெரிந்தது, ராஜபுதானி?" என்று கேட்டான்.

"எப்படித் தெரிந்ததா? போர்க் களத்தில் மடியாத ராஜபுத்திரன் பூத மாகாமல் வேறே என்ன ஆவான்? அத்தகைய பூதத்தின் ஆசையை வேர றக் களைய வேண்டும். இந்த எண் ணத்தினாலேயே, நான் க்ஷத்திரிய வமி சத்தைச் சேர்ந்த ராஜபுத்திர ஸ்திரீயா யிருந்தபோதிலும், இன்னும் சதியாகா மல் இருக்கிறேன். பாணா, மேலும் நீ சொல்லவேண்டியதைச் சொல்."

"அந்த வீர ராஜபுத்திரர் உன்னைச் சந்திப்பதற்காக மாரி காலத்தில் வந்து கொண்டிருக்கையில், ரூபேண் நதியில் முழுகி இறந்துவிட்டார். அவருடைய காதல் சாதாரணமானதா?"

"அந்தக் காதலின் காரண மாகவா, அவர் தங்கமான ராஜமார்க் கத்தை ஆள்நடமாட்ட மில்லாத தாக் கிக் கொண்டிருக்கிறார்?" என்று ராஜ புதானி உரத்த குரலில் கேட்டாள்.

"ஆம், உன்னைச் சந்திக்கவேண்டு மென்று ராஜபுத்திரர் இச்சைகொண் டிருக்கிறார். ரூபேண் நதிக்கரையில்

ஓர் அத்திமரத்தினடியில், இரண்டு தினங்களுக்கு முன்பு அவரை நான் சந்தித்தேன். உச்சி நேரத்தில் அந்த மரத்தின் நிழலில் சிங்கம்போல் அவர் கச்சேரி நடத்திக் கொண்டிருந்தார். அவரைச் சுற்றிலும் சுமார் முப்பது, நாற்பது ராஜபுத்திரர்கள் கூடியிருந் தார்கள். தேவர்கள் பூலோகத்தில் அவதரித் திருப்பதுபோல், எல்லோ ருடைய முகங்களிலும் தேவ களை வீசிற்று. ஒருமுறை உன்னை அவர் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யுமாறு, என்னை வேண்டிக் கொண்டார். சகோதரி, நான் வாக்குக் கொடுத்து விட்டேன். அதை நிறைவேற்ற உதவி செய்யவேண்டியது உன் கடமை. உன்னைச் சந்தித்த பின், ஒருபோதும் அவர் ரஸ்தாவில் தோன்றக் கூடா தென்று, நானும் அவரிடத்தில் வாக்கு வாங்கியிருக்கிறேன்.''

"உமது வாக்கை ஒரு முறையல்ல, நூறுமுறை அல்லது ஆயிரம் முறை வேண்டுமானாலும் நான் நிறைவேற்றி வைக்கிறேன். ராஜபுத்திரன் சிங் கம்; ராஜபுதானி சிம்மம். ஒரு பாவ மும் அறியாத பிரயாணிகளைக் கொன்று, ராட்சசத்தன்மை வாய்ந்த பெருங்குற்றம் அவர் செய்திருக்கிறார். ரூபேண் நதிக்கரையிலுள்ள அழகிய ரஸ்தாவைப் பாழ் செய்துவிட்டார். ரமணீயமான அந்த ராஜமார்க்கத்தை நடமாட்டமற்றதாய்ச் செய்துவிட்டார். என் பதி உயிருடனிருக்கும் போது, இவ்விதம் செய்திருந்தாலும், நான் அவரை என் வாளுக் கிரையாக்கி யிருப்பேன். வருகிறேன், பாணா; நான் வந்து அவரை அவசியம் சந்திக் கிறேன். ராஜபுதானி வந்து, வாள் முனையில் மீண்டும் ஒருமுறை உம்மை விவாகம் செய்ய இச்சிக்கிறாள்' என்று அவரிடம் நேர்போய்ச் சொல்லிவிட்டு வாரும்.''

"ராஜபுதானி! நீ என்ன பேசு கிறாய்? அவர் மனித சரீரத்தில் இல்லை. வாள் கொண்டு அவருடன் யாராவது யுத்தம் செய்ய முடியுமா? ஆவி உருவத்தி லிருக்கும் அவரை, வசம் செய்யமுடியுமா? அந்த ஆவி சூறுவளிக்காற்றைப் போல் பறந்து விடுமே!''

ராஜபுதானி மிகுந்த கோபத்துடன் எழுந்து நின்றாள். மெல்லிய கொடி போன்ற அவளது தேகம் பட மெடுத்த நாகத்தைப் போல் சீறி நிமிர்ந்தது. கோபத்தால் சிவந்த கண்களால் பாணனை நோக்கி, அவன் தேகத்திலுள்ள எலும்புகளுங்கூட நடுங்கும்படி அவள் கர்ஜித்தாள்.

"தேவி புத்திரா, நீ ராஜபுதானி யோடு பேசுகிறாயா, அல்லது ஏதாவது பனியா ஸ்திரீயோடு பேசுகிறாயா?''

ராஜபுதானி ஒரே பாய்ச்சலில், கரு நாகத்தைப் போல் இடையில் தொங் கிக் கொண்டிருந்த வாளாயுதத்தை எடுத்தாள். உறையைக் கழற்றி ஒரு புறம் எறிந்துவிட்டு, "நட, பாணா, முன்னால் நட! இன்று இந்த மார்க் கத்தை நான் நிர்ப்பயமாக்கியே தீரு வேன்'' என்று உரத்துக் கூவினாள்.

பாணன் பதில் ஏதும் சொல்லா மல், முன்னால் நடந்தான். மகிஷாசுர வதத்துக்காகச் செல்லும் துர்க்கா தேவியைப் போல், அவனுக்குப் பின் னால் ராஜபுதானி சென்றாள்.

பகல் பனிரண்டு மணி யிருக்கும். பாணனும் ராஜபுதானியும் அந்த அத்திமரத்தை யடைந்தார்கள். அத்தி மர இலைகளின் சலசலப்பு, மிகுந்த பயங்கரமா யிருந்தது. அந்தப் பிராந் தியத்தில் எங்கேயும் மனித வாச னையே இல்லை. அத்தகைய பயங்கர மான ஏகாந்தத்தில், பாணன், ராஜ புதானி இந்த இருவரும் மட்டுந்தான் நின்று கொண் டிருந்தார்கள்.

"எங்கே அவர்?'' என்று கேட் டாள் ராஜபுதானி. அவளுடைய வார்த்தைகளைக் கேட்டு நடுநடுங்குவது போல், அந்த அத்திமரத்தின் இலை கள் சலசலத்தன. அந்தச் சலசலப்பு, "இங்கே ஒருவரும் இல்லையே'' என்று கூறுவதுபோல் தோன்றியது.

"கொஞ்ச நேரம் பொறு. உனக் குக் காட்டுகிறேன்'' என்று பாணன் கூறினான்.

சிறிது நேரம் இருவரும் பேசாதிருந் தார்கள். அவர்களுடைய மௌனம் அவ்விடத்தின் பயங்கரத்தை மேலும் அதிகரித்தது.

திடீரென்று ஒரு குதிரை வீரன் தென்பட்டான். பீதியுற்ற முகத்துடன் பாணன் ராஜபுதானியை நோக்கினான். ஆனால், அவள் முகத்திலோ பயம் லவலேசமுங் காணப்படவில்லை. அவள் தனது வாளாயுதத்தைக் கையில் பிடித்துக் கொண்டு, பாணனைப் பார்த்து, "ஏ பாணா, மனிதன் ஆண்மையுடனிருக்க வேண்டும்" என்று கத்தினாள்.

சிறிது நேரத்தில் சுமார் இருபத்தெட்டு, இருபத்தொன்பது வயதுள்ள சுந்தரமான ராஜபுத்திரக் குதிரை வீரன் ஒருவன் சமீபத்தில் வந்தான்.

"ஆம், இவர்தான். இன்னும் பக்கத்தில் வரட்டும்."

ராஜபுத்திரன் வெகு சமீபத்தில் வந்துவிட்டான். ஒளி பொருந்திய அவன் முகம் மிக நன்றாய்த் தெரிந்தது. அவன் ராஜபுதானியைப் பார்த்தான்; ராஜபுதானி அவனைப் பார்த்தாள்.

"அடையாளம் தெரிகிறதா?"

"உம், நன்றாய்த் தெரிகிறது" என்று ராஜபுதானி பதிலளித்தாள்; மேலும் தொடர்ந்து, "ஏன் அடையாளம் தெரியாது? தன் மனைவியைச் சந்திக்கும் ஆசையால் நிரபராதிகளான யாத்திரீகர்களைக் கொன்றவனையும், இந்த ராஜபாட்டையைப் பாழாக்கியவனையும், தனது நற்பெயருக்குக் களங்கமுண்டாக்கிக் கொண்டவனையும், கேவலம் யாசகனைப் போல் ஒரு பாணனிடம் யாசித்தவனையும்..." என்று அடுக்கினாள்.

"போதும், தேவி; போதும்!" ராஜபுதானியைப் பாணன் இதற்குமேல் பேசவிடவில்லை. முன்னால் நின்று கொண்டிருந்த ராஜபுத்திரன் அழாக்குறையாய் மிகப் பரிதாபகரமாய் விழித்தான். அவன் கையினின்றும் குதிரையின் லகான் நழுவியது. துக்கம் நிறைந்த கண்களால் அவன் தன் மனைவியை நோக்கி, "ராஜபுதானி!" என்றான்.

"என் கிராமத்தில், என் ஆதரவிலிருந்த ஜனங்களை நீ கொன்றாய் அல்லவா?"

"நானா? இல்லை, நான் கொல்லவில்லை, ராஜபுதானி!"

"நீ உண்மையான ராஜபுத்திரனாயிருந்தால், இதோ போருக்கு ஆயத்தம் செய்துகொள்."

திடீரென்று ராஜபுத்திரனுடைய முகம் மாறியது. பாணன் நடு நடுங்கினான். மின்னல் மின்னுவது போல், ராஜபுதானியின் கையிலிருந்த வாள் பிரகாசித்தது. மிகுந்த ஆவேசத்துடன் ராஜபுதானி அந்த வாளாயுதத்தை வீசினாள்.

"ஐயோ! வேண்டாம். கொன்றுவிட்டாயே!" என்று, பாணன் அவர்களுக்கிடையில் குதிக்க ஆரம்பித்தான். ஆனால், ராஜபுத்திரன் எங்கே? வேகமான கத்தி வீச்சுப் பயனற்றுப் போகவே, ராஜபுதானி அந்த வேகத்தில் கீழே விழுந்து விட்டாள்.

"வருத்தப்பட வேண்டாம், தேவி புத்திரா; நீ கொடுத்த வாக்கைக் காப்பாற்றி விட்டாய்!" — ஆகாயத்திலிருந்து இந்த வார்த்தைகள் ஒலித்தன.

ராஜபுதானி சட்டென்று பின்னால் திரும்பிப் பார்த்தாள். ராஜபுத்திரன் நதியை நோக்கித் தன் குதிரையைச் செலுத்திக்கொண்டு போவது தெரிந்தது. ராஜபுதானியும் அவன் பின்னால் சென்றாள்.

"உண்மையான ராஜபுத்திர வீரனாயிருந்தால், அங்கேயே நில்" என்று ராஜபுதானி உரத்துக் கூவினாள். அதைக் கேட்டதும், ராஜபுத்திரன் நின்றான்.

ராஜபுதானி அவனுக்கு வெகு சமீபத்தில் சென்றாள். அப்புறம் என்ன நடந்ததோ, தெரியவில்லை ... ஆனால், சிறிது நேரத்துக்குப் பின்பு நீரில் ராஜபுதானியின் சேலையை யாரோ பற்றி இழுப்பது போல் தோன்றியது. ராஜபுதானியின் தாவணி நீரில் நனைந்து கொண்டிருந்தது. அதிலிருந்து தண்ணீர் சொட்டிக் கொண்டிருந்தது. அவள் கீழே உற்றுக் கவனித்தபோது, தண்ணீருக்குள்ளிருந்து கொண்டு, மிகுந்த வேதனையுடன் ராஜபுத்திரன் உள்ளங்கைகள் இரண்

டையுங் குவித்து, தாவணியினின்றும் வடியும் நீரை வேகமாய்க் குடித்துக் கொண்டிருந்தான். இவ்விதம் அவன் அநேக மிடறு தண்ணீர் குடித்து விட்டான்.

ராஜபுதானி அதைப் பார்த்தாள். ராஜபுத்திரனும் அவளை நோக்கினான். ஆனால், அந்தப் பார்வையில் தான் எத்தனை துக்கம், எத்தனை வேதனை, எத்தகைய ஏமாற்றம்! ராஜபுதானி துக்கம் நிறைந்த குரலில், "ஐயோ! என்ன காரியம் செய்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

"போதும்! நான் திருப்தியடைந்து விட்டேன். முற்றிலும் திருப்தியடைந்து விட்டேன். இனி, நீ வாளினால் என்னை வெட்டலாம், கொல்லலாம். இத்தகைய மரணம் இன்பகரமான தல்லவா?"

ராஜபுதானியின் கையினின்றும் வாளாயுதம் நழுவியது. அவள் கீழே குனிந்து, ராஜபுத்திரனுடைய கையைப் பிடித்தாள்.

ராஜபுத்திரன் அவள் பிடிக்கு அகப்படாமல் ஒருமுறை தப்பினான். மீண்டும் அவள் அவனைப் பிடித்துக் கொண்டு, "நீருக்குள் மூழ்கியிருக்கும் போது, நீர் எங்கே தப்ப முடியும்?" என்று கேட்டாள்.

ராஜபுத்திரன் ரூபேண் நதியை மிகப் பரிதாபகரமாய் நோக்கினான். தண்ணீர் அதிக ஆழமா யிருந்த இடத்தை நோக்கி, அவன் பார்வை சென்றது.

"இனி நான் உம்மை விடமாட்டேன்!" என்று ராஜபுதானி வாளாயுதத்தை நீரில் எறிந்துவிட்டு, அவனது மற்றொரு கையையும் பிடித்துக் கொண்டாள்.

ஆனால், ராஜபுதானியின் கையில் நீர்த் திவலைகளைத் தவிர, வேறே ஒன்றும் இல்லை. நதியில் எழுந்த அலைகளின்மீது சிறிது தூரத்தில் ராஜபுத்திரனின் தலை தென்பட்டது. ராஜபுதானி நதியில் குதித்தாள். அவளை முன்னேறி வருமாறு கை அலைத்துக் கொண்டே, ராஜபுத்திரன் வெகு தூரம் சென்றுவிட்டான். ராஜபுதானி மேலும் மேலும் சென்று கொண்டே யிருந்தாள். ஆனால், ராஜபுத்திரன் வெகு தூரத்திலேயே தென்பட்டான்.

"தேவி, திரும்பி வா. நதி வெகு ஆழம். திரும்பி வந்து விடு. ராஜபுத்திரன் ஆகாயத்தில் பறந்து விட்டான்" என்று பாணன் கரையில் நின்றவாறு கத்திக் கொண்டிருந்தான்.

"நீ போ, தேவி புத்திரா, நீ போ! சுகமே திரும்பி உன் வீடு போய்ச் சேர். நான் இந்த ராஜபுத்திரனின் வீட்டை அலங்கரிக்கப் போகிறேன்" என்று இனிமை மிக்க குரலில் ராஜபுதானி கூவினாள்.

✲

கிணறு வெட்டப் பூதம்

லார்டு நார்த் என்று ஒரு பிரிட்டிஷ் மந்திரி இருந்தார். அவர் தேயிலை வரி விதித்ததால் தான், ஐக்கிய அமெரிக்கப் புரட்சி எழுந்து, அந்த நாடு சுதந்தரம் பெற்றது.

இந்த மந்திரியார் ஒரு சமயம் தம் குடும்பத்தோடு ஒரு விருந்துக்குப் போயிருந்தார்.

இவர் பக்கத்திலே உட்கார்ந்திருந்த ஒருவர், "அதோ அந்த விகாரமான பெண்மணி யார்?" என்று இவரைக் கேட்டார்.

"அவளா, அவள் என் மனைவி" என்றார் மந்திரியார்.

கேட்டவருக்குச் சங்கடமாய்ப் போய்விட்டது. அவர் சாமர்த்தியமாக, "அந்த அம்மாளைக் கேட்கவில்லை, பக்கத்திலே உட்கார்ந்திருக்கிறாளே ஒரு ராட்சசி, அவளைக் கேட்டேன்" என்றார்.

"அவளா, அவள் என் மகள்" என்றார் மந்திரியார்.

சினிமா நட்சத்திரங்களைப் போல, நீங்களும் உங்கள் சருமத்தைக் காப்பாற்றுங்கள்!

ரமோலா

என்னுடைய சருமமே எனக்கு முதல் கவலை என்கிறார் ரமோலா. அவர் தவறாமல் லக்ஸ் டாய்லட் சோப்பை உபயோகித்து தன் சருமத்தை அதிக சுத்தமாகவும், மிருதுவாகவும் வைத்துக்கொள்ளுகிறார். என் சரும அழகைக் காப்பாற்றிக் கொள்ள லகுவான முறை இது தான் என்று கூறுகிறார். மேலும் இந்த சுத்த நறுமணமுள்ள சோப்பின் நுரை ஸ்திரீகளின் சருமத்தை சுத்தமாகவும், மிருதுவாகவும், மாசில்லாமலும் வைத்துக் கொள்கிறதென்று அவர் உறுதியாக நம்புகிறார்.

லக்ஸ் டாய்லட் ஸோப்

LEVER BROTHERS (INDIA) LIMITED

எதிர்பாராத தீவிபத்துகளினல்
எத்தனையோ நஷ்டங்கள்!

அவற்றிற்கெல்லாம்
ஈடு கொடுப்பதே
எங்கள் அரிய சேவை!

விவரங்களுக்கு எழுதுங்கள்:-

பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

(இந்தியாவில் ஸ்தாபிதம் 1933)

தலைமை ஆபீஸ்: மதுரை

கிளை ஆபீஸ்கள்:

பம்பாய் : லாயிட்ஸ் பாங்க் பில்டிங் ஹாரன்பி ரோடு
அகமதாபாத் : 1761, காந்தி ரோடு
கல்கத்தா : 26, டல்ஹௌஸி ஸ்குயர்
ராவல்பிண்டி : லாயிட்ஸ் பாங்க் காம்பவுண்ட் எட்வர்ட்ஸ் ரோடு

தீவிபத்து சம்பந்தமான சகலவித இன்ஷ்யூரன்ஸ் -திட்டங்கள்
மொத்த ஆஸ்திகள் ரூ. 42,00,000-க்கு மேல்

பிரதம ஏஜண்டுகள்:
ஏ. & எப். ஹார்வி லிமிடெட், மதுரை etc.

சகல விதமான
வலிகளையும்
10 நிமிஷங்களில்
நிறுத்த

ஸாரிடோன்

கைதியின் கடிதம்

ப. கி. விஜயராகவன்

சிப்பாய் கலகம் என்கிற சுதந்தரப் புரட்சிக் காலத்தில் நிகழ்ந்த எத்தனையோ உருக்கமான சம்பவங்கள், சரித்திர தீபத்தின் முன் வராமல் இருளிலே புதைந்துகிடக்கின்றன. அந்தக் காலத்தில், கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சியைக் கவிழ்க்க, பலர் பலவித நோக்கத்துடன் முன் வந்தார்கள் என்று சொல்லப்படுகிறது. அப்படிப்பட்டவர்களில் ஒருவர் ஜவாம் பக்த் என்பவர். இவர் ஔரங்கசீப்பின் பேரன். 'சிப்பாய் கலகம்' தோற்றது. இவரும் இவர் மனைவியும் ரங்கூனில் சிறைப்பட்டார்கள். இவர் மனைவி, ரங்கூனிலிருந்து, டில்லியிலுள்ள தன் தாய்க்கு ஓர் உருக்கமான கடிதம் எழுதியிருக்கிறாள். சர்வ பாக்கியங்களுடன் வாழ்ந்த ஒரு ராஜகுமாரி, சிறைக் கைதியாய் இருந்துகொண்டு எழுதும் கடிதம். கடிதத்திலே மற்றெல்லாவற்றையும் விட ஒரு முக்கியமான அம்சம் கவனிக்கத்தக்கது. இந்திய முஸ்லீம்கள் இந்தியர் அல்ல போலச் சிலர் எண்ணுகிறார்கள். இந்திய முஸ்லீம்களின் பாஷையும், பழக்க வழக்கங்களும் இந்திய மயமானவை. ஓர் இந்திய முஸ்லீம் ராஜகுமாரி, பர்மாவில் போய் வாழ்க்கையில், தாய்க்கு எழுதும் கடிதத்தில், இந்தியாவையே தாயகமாக மதித்து வெளியிடும் மனமுருக்கும் உணர்ச்சிகளை இதிலே காணலாம்:

"ரங்கூன், பர்மா தேசம்.
கைதி டில்லி ராஜாவின் வீடு.

"அன்புமிக்க தாய்க்கு வந்தனம். உன் பெண்ணாகிய நான் கரு நீர் பரந்த கடலுக்கு அப்பால் இருக்கிறேன். என் ஊரான டில்லி இங்கேயிருந்து ஆயிரக் கணக்கான மைல் தூரத்தில் இருக்கிறது. நான் தாயை விட்டுப் பிரிந்திருக்கிறேன். நான் உயிர் உள்ளவரையில், என் தாய் வழிச் சுற்றத்தாரைச் சந்திக்க விரும்பவில்லை. சாயீம் சபீல்ஷா உன் கடிதத்தைக் கொண்டுவந்தார். அவர் என் மாமன் பகதூர் ஷாவிடம் பேசிக் கொண்டிருந்தார். அப்போது, நான் எனது சல்லா வழியாகப் பார்த்தேன். சாயீம் சபீல்ஷா விம்மி விம்மி அழுதுகொண்டிருந்தார். என் மாமனின் கண்களில் நீர் ததும்பியது. என் கணவரான ஜவாம் பக்திடம் பேசிக்கொண்டே, என்னிடம் வந்து கடிதத்தைக் கொடுத்தார். கடிதத்தைத் தந்தவுடன், அவர் அழ ஆரம்பித்துவிட்டார். எனக்குப் பழைய நாட்கள் ஞாபகம் வந்தன. என் கலியாணம், அப்போதிருந்த குதூகலம், கலியாணத்தின் போது அணிந்த புஷ்ப ஆபரணம் இவைகளையெல்லாம் சாயீம் சபீல் எனக்கு ஞாபகமூட்டிவிட்டார். அப்போது நான் ஹிந்துஸ்தானத்து யுவராஜாவின் ராணியாய் இருந்தேன். சாயீம் சபீல்ஷா ஏழு வாயில்களையும் வாயில் காப்போன்களையும் கடந்து தான், என்னை வந்து பார்க்க முடியும். ஆனால், இன்றோ நான் நாடு கடத்தப்பட்ட ஒரு கைதி; அதிலும் ஒரு கைதியின் மனைவி; கைதிகளான மாமன் மாமிகளின் மருமகள்.

"இப்போது இங்கே அந்தச் சிவப்புக் கோட்டையும் கிடையாது; ஏழு வாயில்களும் இல்லை; வாயில் காப்போனும் இல்லை. மரத்தால் கட்டிய ஒரு வீடுதான் உண்டு. அதுவும் மழை காலத்தில் ஒழுக்கெடுக்கும். நாலே நாலு அறைகள். இந்த அறைகளைத் தவிர, வேறே இடம் கிடையாது. என் மாமனுக்கும் மாமி மகாராணி ஜீனத் மகலுக்கும் படுப்பதற்கு ஒரே அறை தான். எனக்கும் என் கணவருக்கும்

சகல இன்பங்களோடும் அரண்மனையிலே வாழ்ந்த ஒரு ராஜகுமாரி, கண்காணா நாட்டிலே சிறைப்பட்டு வாடுகிறாள். அப்போது அவள் வீட்டையும் நாட்டையும் நினைந்து பொழியும் உணர்ச்சிகள் எவ்வளவு உருக்கமாயிருக்கின்றன! என்ன இருந்தாலும், அவளும் ஒரு மானிடப்பிறவி தானே?

மற்றோர் அறை. மூன்றாவது அறையில் வேலைக்காரர்கள். சாப்பிடுவதற்கும் சந்திப்பதற்கும் வேறோர் அறை. எனக்கு இந்தத் தேசத்தின் சீதோஷ்ண நிலை பிடிக்கவில்லை. இங்கே மழை மிக அதிகம்; கொசுக்களோ ஏராளம். வீடு பழைய வீடு; இடிந்துபோன வீடு. அடிக்கடி ஜுரம் வந்து விடுகிறது. மாமனாரும் மகாராணியும் எப்போதும் உடல் நிலை குன்றி யிருக்கிறார்கள். கணவர் ஒருவர் தான் கடவுளின் கிருபையால் சௌக்கியமாய் இருக்கிறார். டில்லி நகரத்தின் சீரழிந்த நிலையை, உன் கடிதத்தில் வர்ணித்திருக்கிறாய். அதை எங்கள் கண்களாலே பார்த்து விட்டுத் தான் இங்கே வந்திருக்கிறோம்.

"பெரிய சகோதரனின் தூக்குத் தண்டனையை உன் கடிதத்தின் மூலம் தெரிந்துகொண்டேன். கலகம் நடந்த போது அவர் தான் காசி சென்று விட்டாரே! அவருக்கு எந்தக் குற்றத் துக்காகத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது என்று உன் கடிதத்தில் எழுதவில்லை. அதைச் சாயீம் சாஹெபிடம் கேட்டேன். ஹஜரத் சையத் ஹுசேன் அஸ்கரிக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது என்றும், பெரிய சகோதரர் அஸ்கரியுடன் சேர்ந்து சூழ்ச்சி செய்துவிட்டு அதை மறைப்பதற்காகவே காசிக்குச் சென்றுவிட்டார் என்று யாரோ சொன்னதாகவும் சாயீம் சாஹெப் மூலம் தெரிந்து கொண்டேன். பெரிய சகோதரரின் நிலைமை என்ன பரிதாபம்! கொஞ்சம்கூடத் தயை தாட்சண்யமின்றி அவருக்குத் தூக்குத் தண்டனை கொடுக்கப்பட்டதாம். அவரைத் தூக்கில் போடும்போது நீயும் இருந்தாயாம். அதைக் கேட்டவுடன் எனக்குத் துக்க மேலீட்டால் மூர்ச்சை உண்டாகிவிட்டது. நாங்கள் டில்லியிலிருந்து காடுகடத்தப் பட்டபோதுகூட, பெரிய சகோதரர் காசியிலிருந்து வரவில்லையே!

"அவருடைய பெண் குழந்தை கண்ணீர்விட்டுக் கதறுவதை, சாயீம் சாஹெப் சொல்லக்கேட்டு, எனக்குத் தாங்கமுடியாத துக்கம் உண்டாகிவிட்டது. சிறுமியின் வயது நாலு தான். தந்தை எங்கே சென்றார் என்பது அதற்கு எப்படித் தெரியும்? பெரிய சகோதரரின் பிரேதம் வீட்டுக்குக் கொண்டுவரப் பட்டதாம். அப்போது அந்தச் சிறுமி 'அப்பா நம்முடன் கோபமா யிருக்கிறார்; பேச மாட்டேன் என்கிறார்; கண்ணைமூடிக் கொண்டு படுத்துக்கொண் டிருக்கிறார்' என்றதாமே! இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன், என் நெஞ்சு பகீர் என்றது. பெரிய சகோதரர் தூக்கில் மடிந்ததைக் கேட்டதிலிருந்து, சயீதாவின் ஞாபகம் எனக்கு அடிக்கடி வருகிறது. அவளைப் பார்த்தால், என் மனதுக்குக் கொஞ்சம் ஆறுதல் உண்டாகும். ஆனால், நான் எங்கேயிருக்கிறேன்; அவள் எங்கே இருக்கிறாள்! என் தாய் தகப்பன் எங்கே இருக்கிறார்கள்; டில்லி எங்கே இருக்கிறது! டில்லிக்கு வர இப்போது எனக்குத் துளிக்கூட ஆசை கிடையாது! நம் வம்சத்துக்கே கெட்ட காலம் வந்து சூழ்ந்துவிட்டது.

"மகாராஜா பாபருக்கு உண்டான கஷ்டத்தைவிட அதிகமான கஷ்டத்தை இப்போது நாம் அனுபவிக்கிறோம். ஆனால், பாபர் நம்பிக்கையை இழக்கவில்லை; நாமோ அதையும் இழந்து விட்டோம். உலகத்தின் கதவுகள் பாபரின் வீரத்துக்கு எதிரே திறந்து விட்டன. அவருக்கு அவ்வளவு செல்வாக்கு இருந்தது. அவர் விரும்பிய போதெல்லாம் ஆயிரக் கணக்கிலும் லட்சக் கணக்கிலும் வீரர்கள் அவர் சார்பாக யுத்தம் செய்தார்கள். ஆகையால், பாபரின் கஷ்டங்கள் நிவர்த்தி ஆயின. ஆனால், நம் நிலைமை வேறு. இந்தப் பட்டணத்தில் உள்ளவர்களில் ஒருவர்கூட எங்கள் தரப்பில் அனுதாபம் காட்டுவதாகத் தெரியவில்லை. உலகத்திலே எப்போது அனுதாபம் உண்டாகுமென்றால், அனுதாபம் காட்டுவோருக்கு ஏதாவது பலன் கிடைப்பதாயிருந்தால்தான். எங்களிடம் அனுதாபம் காட்டுவோருக்கு என்ன கிடைக்கும்? எங்கள் செல்வாக்கு முடிந்துவிட்டது; எங்கள் அதிர்ஷ்ட விளக்கு மங்கிவிட்டது. எங்களை ஆதரித்தவர்களெல்லாம் இறந்துபட்

டார்கள். இப்போது யாராவது எங்களை ஆதரிக்க விரும்பினாலோ எங்களுக்கு உதவி செய்தாலோ, தூக்குத் தண்டனையைத் தவிர வேறொன்றையும் அவர்கள் எதிர்பார்க்க முடியாது.

"இமாம் ஹுசேனின் கொலைகாரர்களுக்கு யஜீதின் தர்பாரிலிருந்து சொல்பக்கூலிதான் கிடைத்துவந்தது. ஒவ்வொருவனுக்கும் ஒன்றரைச் சேர் பார்லி கொடுத்தார்கள். கொலைகாரர்கள் கேவலம் ஒன்றரைச் சேர் பார்லிக்காக, ரசூலில்லாவின் பெண் வயிற்றுப் பேரனைக் கொலை செய்துவிட்டார்கள்! அரச சேனையில் உள்ள ஒவ்வொரு சிப்பாய்க்கும் ஒன்றரைச் சேர் பார்லி கொடுக்க ஹுசேனால் முடிந்திருந்தால், அத்தனை பேரும் ஹுசேனின் பக்கம் சேர்ந்திருப்பார்கள்! எங்கள் நிலைமையும் ஹுசேனின் நிலைமையைப் போன்றதுதான். இவ்வுலகமே ஆசை நிரம்பியது; ஆசையால் உருவானது!

"இந்த நாட்டின் பாஷை வேறு; மதம் வேறு; இருக்கை, உணவு எல்லாம் நம்மிலிருந்து வேறுபட்டவை. நாங்கள் யாரென்று இந்த ஜனங்களுக்குத் தெரியாது. எங்களை எதற்காகக் கைது செய்து வைத்திருக்கிறார்கள் என்பதும் அவர்களுக்குத் தெரியாது. நாங்கள் கைதிகளல்ல, சுதந்தரமாயுமில்லை; உயிரோடில்லை, நடைப்பிணங்களும் அல்ல. நம் வீட்டுக்கு, நம் பட்டணத்துக்கு, நம் தேசத்துக்கு நாங்கள் வரமுடியாது; ஆகையால், நாங்கள் கைதிகள். இருப்புச் சங்கிலி கழுத்திலும் கால்களிலும் பூட்டப்படவில்லை; ஆகையால், நாங்கள் சுதந்தரமாயிருக்கிறோம். நண்பர்களிடமிருந்தும், சுற்றத்தாரிடமிருந்தும் பிரிக்கப்பட்டிருக்கிறோம்; ஆகையால், நாங்கள் நடைப்பிணங்கள். சாயீதா சுல்தானவை மடியில் வைத்து, மார்போடணைத்து, உச்சி முகந்து, இவையெல்லாம் உன் அத்தையின் அன்பு என்று சொல்லு. அப்பாவை மறந்துவிடு; எங்களை அறவே மறந்துவிடு. நீ அவரையும் சந்திக்க முடியாது; எங்களையும் சந்திக்க முடியாது. அவர் சமாதியில் இருக்கிறார்; நாங்களும் சமாதியில் தான் இருக்கிறோம். அவருடைய சமாதி தாய் நாட்டில் இருக்கிறது; ஆனால், எங்கள் சமாதியோ பரதேசத்தில் இருக்கிறது. நாங்கள் உயிர் உள்ளபோதே சமாதியில் இருக்கிறோம்; இறந்த பிறகும், சமாதியில் தான் உறங்கப் போகிறோம். தாயே நமஸ்காரம். பிள்ளைப் பேறில்லா அபாக்கியவதியான,

—உன் மகள்."

✲

சுலபமான வழி

பிரான்சு நாட்டின் அபூர்வமான நாவல் ஆசிரியர் விக்டர் ஹியூகோ. அவர் 1848-ஆம் வருஷ பிரஞ்சுச் சட்டசபையான சேம்பரின் ஓர் அங்கத்தினராயிருந்தார். சபையில் ஏதோ விவாதம் நடந்து கொண்டிருந்தது. ஹியூகோ அதைச் சற்றும் கவனியாமல், பக்கத்தில் இருந்த ஒரு நண்பரோடு சம்பாஷித்துக் கொண்டேயிருந்தார். விவாதம் முடிந்ததும் ஓட்டெடுத்தார்கள். சம்பாஷணையிலே ஈடுபட்டிருந்த ஹியூகோ, என்ன விவாதம் என்பதைக் கவனியாமலே, 'ஜம்' என்று எழுந்து கைதூக்கினர்.

"கடைசியில் பேசினாரே, அந்தப் பிரசங்கி சொன்னதைக் கேட்டீர்களா?" என்று கேட்டார் நண்பர்.

"இல்லை" என்றார் ஹியூகோ.

"விவாதத்தையே கவனியாமல், கைதூக்கி விட்டீர்களே?" என்றார் நண்பர்.

"அது ஒன்றும் கஷ்டமில்லை. அதோ உங்களுக்கு முன்னே மூக்குக் கண்ணாடி போட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கிறாரே ஒரு குள்ளமான மனிதர்; அவர்தான் எனக்கு வழிகாட்டி. அவர் எழுந்தால், நான் உட்கார்ந்திருப்பேன். அவர் உட்கார்ந்திருந்தால், நான் எழுந்து கை தூக்குவேன். நான், அவர் இரண்டு பேருக்குமாக அவரே பிரசங்கங்களைக் கேட்டுவிடுகிறார்" என்றார் ஹியூகோ.

தேசீய பாஷை

மகாத்மா காந்தி

'ஹிந்தி' அல்லது 'ஹிந்துஸ்தானி' தான் தேசீய பாஷையாக இருக்க முடியும் என்பதைச் சில வெளிப்படையான காரணங்களைக் கொண்டு, நான் இப்போது விளக்கிக் காட்ட விரும்புகிறேன். உதாரணமாக, கன்னட தேசத்தின் எல்லைக்குள்ளே இருந்துகொண்டு, வெளியே நடக்கிற விஷயங்களில் நீங்கள் சிரத்தைகொள்ளா திருக்கிற வரையில், உங்களுக்குக் கன்னட பாஷை மட்டும் தெரிந்தால் போதுமானதாகும். ஆனால், கன்னட தேசத்திலுள்ள ஒரு கிராமத்திலே இன்று நடப்பவைகளைக் கவனித்துப் பாருங்கள். மக்களுடைய எண்ணங்கள் கன்னட தேசம் என்ற அளவோடு நின்றுவிடவில்லை. இந்தியா முழுவதையுமே ஒன்றுசேர்த்துப் பார்க்கிற மனநிலை அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. கன்னட தேசத்துக்கு வெளியே நடக்கிற காரியங்களோடும் நீங்கள் தொடர்பு பூண்டிருக்கிறீர்கள். அந்தத் தொடர்பை, செயல்முறையில் பயன்பெறச் செய்வதற்கு, பொது மொழி ஒன்று அவசியம் இருந்தாக வேண்டும். சிந்து மாகாணத்திலிருந்தும், ஐக்கிய மாகாணத்தி லிருந்தும் வருபவர்களோடு, கன்னடம் பேசுகிற ஒருவர் பொது மொழி ஒன்றில்லாமல் எப்படித் தொடர்பு வைத்துக்கொள்ள முடியும்? "ஆங்கிலத்தைப் பொதுமொழியாக வைத்துக்கொண்டால் போகிறது" என்று நம்மவர்களில் சிலர் சொல்லக் கூடும். ஏதோ சில ஆயிரம் பேர்தான் நம்மவர்களில் ஆங்கிலம் படித்திருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்த வரையில், ஆங்கிலமே பொது மொழியாய் இருந்தால் போதுமானதாகும். ஆனால், இந்த ஏற்பாடு உங்களுக்குத் திருப்தி அளிக்காதென்பது நிச்சயம்.

இந்தியாவில் கோடிக் கணக்கான மக்கள் பல மாகாணங்களில் வசித்து வருகிறார்கள். அவர்கள் ஒருவருக்கொருவர் தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன்; நீங்களும் அப்படியே விரும்புவீர்கள். இன்னும் பல தலைமுறைகள் நாம் படித்தாலுமே, எல்லோருக்கும் பொது மொழியாக ஆங்கிலத்தை ஆக்கிக்கொள்ளலாம் என்பது முடியாத காரியம். எல்லோருமே ஆங்கிலத்தைப் படிக்க வேண்டிய அவசியம், என்னவோ, எனக்குத் தெரியவில்லை. அப்படியே படிப்பதாக வைத்துக்கொண்டாலும், சம்பாத்தியம் செய்ய ஆங்கிலம் உதவும் என்ற நிச்சயமாவது உண்டா? ஆங்கிலம் படிப்பதால் சம்பாத்தியம் செய்ய முடியும் என்று சிலர் எண்ணுகிறார்கள். அப்படியே சம்பாதிக்க முடியும் என்று வைத்துக்கொண்டாலும், ஆங்கிலத்தை எல்லோருமே படித்துவிட்டால், அதற்குள்ள மதிப்புக் குறைந்து விடாதா? தவிர, ஆங்கிலம் படிப்பதில் எவ்வளவு கஷ்டங்கள் இருக்கின்றன! ஆனால், 'ஹிந்தி' 'ஹிந்துஸ்தானி' படிப்பதில் அவ்வளவு சிரமம் இல்லை. ஆங்கிலம் படிப்பதற்கு நீண்ட காலம் ஆவது போல, ஹிந்தி படிப்பதற்கு ஆகாது.

'ஹிந்தி' 'ஹிந்துஸ்தானி' பேசுகிறவர்கள், ஹிந்துக்களும் முஸ்லிம்களும் சேர்ந்து இருபது கோடிக்கு மேல் இருக்கிறார்கள். கன்னடம் பேசுகிறவர்கள், ஆண்களும் பெண்களுமாக இப்போது, ஒரு கோடிக்குச் சற்று அதிகமாக 110 லட்சம் பேர் இருக்கிறார்கள். சகோதர சகோதரி

இது பங்களூரில் ஹிந்திபட்டமளிப்பு விழா ஒன்றில் மகாத்மா செய்த பிரசங்கம். 'நமது மொழிப் பிரச்னை' என்ற புதுமைப் பதிப்பகப் பிரசுரத்தினின்றும் எடுக்கப்பட்டுள்ளது. காந்திஜியின் சில கட்டுரைகளும் பிரசங்கங்களும் அடங்கிய அந்தப் புத்தகத்தை மொழிபெயர்த்தவர் திரு. அ. லெ. நடராஜன்.

களாயுள்ள இருபது கோடி மக்கள் பேசுகிற பாஷையைக் கற்கவேண்டும் என்கிற ஆசை, கன்னட தேச மக்களுக்கு இல்லாமலா போய்விடும்? மேலும், ஹிந்தி மிக எளிதாகக் கற்றுக்கொள்ளக் கூடியதுதானே? லேடி ராமன் (ஸர் சி. வி. ராமன் மனைவியார்) பேசிய ஹிந்திப் பேச்சை ஒருவர் கன்னடத்தில் மொழிபெயர்த்துச் சொல்ல நீங்கள் இப்போது கேட்டீர்கள். மொழிபெயர்ப்பாளர் அனேகம் ஹிந்திச் சொற்களை அப்படியே உபயோகித்தார். பிரேமா, பிரேமி, சங்கம், அத்தியட்சகர், பாதம், ஆனந்தம், பக்தி, ஸ்வாகதம், அத்தியட்சதம், . சம்மேளனம் போன்ற சொற்கள் கன்னடத்துக்கும் ஹிந்திக்கும் பொதுவாகவே இருப்பதை நீங்கள் கவனித்திருக்கலாம். லேடி ராமன் பேசியதை ஒருவர் இப்போது ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துச் சொல்வதானால், மேலே சொன்ன சொற்களை யெல்லாம் அப்படியே அவர் கையாண்டிருக்க முடியுமா? ஒருக்காலும் முடியாது. இந்தச் சொற்களுக்கு நேரான ஆங்கிலச் சொற்கள், கேட்பவர்களுக்கு என்னும் கேளாத புதிய சொற்களாகவே இருக்கும். இதையெல்லாம் பார்க்கும்போது, ஹிந்தி பாஷையை எளிதாய்க் கற்றுக்கொண்டு விடலாம் என்று தோன்றவில்லையா?

'ஹிந்தி' கற்பது கஷ்டமானது என்று கன்னட சகோதரர்கள் சொல்லும்போது, எனக்குக் கோபமும் ஆத்திரமும் மட்டும் உண்டாகவில்லை; சிரிப்பும் கூட வருகிறது. தினமும் கொஞ்ச நேரம் பயின்றால், ஒரு மாதத்தில் நிச்சயமாய் ஹிந்தியைக் கற்றுக்கொண்டு விடலாம். எனக்கு இப்போது வயது 67. நான் இன்னும் அதிக நாள் இருக்கப்போவதில்லை. அப்படி இருந்தும் இந்தக் கன்னட மொழிபெயர்ப்பைக் கேட்டபோது, தினமும் கொஞ்ச நேரம் படித்தால், ஏழெட்டு நாட்களில் கன்னடத்தைக் கற்றுவிடலாம் என்று தோன்றிற்று. கனம். சீனிவாச சாஸ்திரியாரையும் என்னையும் போன்ற சிலர் நீங்கலாக, இங்கேயுள்ள நீங்கள் அனைவரும் இளைஞர்கள். ஹிந்தியைக் கற்றுக்கொள்வதற்கு, ஒரு நாளைக்கு நான்கு மணி வீதம் நீங்கள் ஒரு மாதம் செலவு செய்தால் போதும். இதற்கு வேண்டிய உற்சாகமும், ஊக்கமும் உங்களிடம் இல்லாமலா போய்விட்டது? நமது நாட்டிலிருக்கும் இருபது கோடி மக்களோடு தொடர்பு வைத்துக்கொள்வதற்காகக் கொஞ்ச நேரம் ஒரு பாஷையைக் கற்பது வீணென்று கருதுகிறீர்கள்? இருக்கட்டும். உங்களில் ஆங்கிலம் தெரியாது இருக்கும் சிலர், ஆங்கிலம் கற்க எண்ணுவதாக வைத்துக்கொள்வோம். நாள் ஒன்றுக்கு நான்கு மணி நேரம் செலவிட்டு, ஒரு மாதத்திலேயே ஆங்கிலத்தைக் கற்று விடலாம் என்ற நம்பிக்கை இங்கிருப்பவர்களில் யாருக்காவது உண்டா? இருக்க முடியாது.

தென் இந்தியாவில் உள்ள நான்கு பாஷைகளிலும் சம்ஸ்கிருதச் சொற்கள் நிறையக் கலந்திருக்கின்றன; ஆகையால்தான், ஹிந்தியைக்கற்றுக் கொள்வது நமக்கு மிகமிக எளிதாய் இருக்கிறது. பண்டைக் காலத்தில், தென் இந்தியாவுக்கும் வட இந்தியாவுக்கும் இடையே, சம்ஸ்கிருதபாஷை மூலமாகவே சம்பந்தமிருந்து வந்தது என்பதைச் சரித்திர வாயிலாக அறிகிறோம். இன்றைக்கும் தென் நாட்டிலுள்ள சாஸ்திரிகள் வட நாட்டிலுள்ள சாஸ்திரிகளுடனே, சம்ஸ்கிருத பாஷை மூலமாகவே சர்ச்சை செய்கிறார்கள். நம் நாட்டிலுள்ள வெவ்வேறு மொழிகளுக்குள்ளும் இருக்கும் வித்தியாசம் எல்லாம் பெரும்பாலும் இலக்கணம்பற்றிய வித்தியாசங்களே. வட இந்திய மொழிகளுக்குள்ளே, இலக்கண அமைப்புங்கூட ஒத்தேயிருக்கிறது. தென் இந்திய மொழிகளிலோ, இலக்கண வித்தியாசம் அதிகம். சம்ஸ்கிருத பாஷையோடு கலப்பு ஏற்படும் முன்பு, அவற்றின் சொற்களிலும் பெருத்த வித்தியாசம் இருந்தது. ஆனால், இப்போது தென் இந்திய மொழிகளில் சம்ஸ்கிருதச் சொற்கள் மிகுதியாகக் கலந்துவிட்டன. இதனாலே, தென் இந்தியாவில் பிரயாணம் செய்யும்போது, பாஷை

சம்பந்தமாக எனக்கு அதிகக் கஷ்டம் ஏற்படுகிற தில்லை. கன்னடம், தெலுங்கு, மலையாளம், தமிழ் இந்த நான்கு பாஷைகளில் ஒன்றில் யாரேனும் பேசினல், பேசியதன் சாராம்சத்தை நான் எளிதில் புரிந்துகொள்கிறேன்.

இனி, நம் முஸ்லிம் நண்பர்களைப் பற்றி இரண்டொரு வார்த்தை சொல்லவேண்டும். அவர்கள் வசித்து வரும் மாகாணத்தில் வழங்கும் பாஷை அவர்களுக்கு இயல்பாகவே தெரிந்திருக்கும். அதோடு உருது பாஷையும் தெரியும். ஹிந்திக்கும் அல்லது உருது - ஹிந்துஸ்தானிக்கும் வித்தியாசமே இல்லை. இலக்கணமோ இரண்டுக்கும் பொது. எழுத்திலே தான் இரண்டுக்கும் வித்தியாசம். பார்க்கப்போனல், இந்தப் பெயர்கள் மூன்றும் ஒரே பாஷையைத்தான் குறிப்பிடுகின்றன. அவற்றின் அகராதிகளைப் புரட்டிப் பார்த்தால், பெரும்பாலான சொற்கள் ஒன்றாகவே இருப்பதைக் காண்போம். ஆகவே, எழுத்தைத் தவிர வேறு ஒரு கஷ்டமும் இருப்பதாகத் தெரியவில்லை. அதுவும் காலக்கிரமத்தில், தானே சரிப்பட்டுவிடும்.

தொடக்கத்தில், ஹிந்திதான் தேசீய பாஷையாக இருக்க முடியுமென்று சொன்னேன். வடக்கே ஸ்ரீ நகரிலிருந்து தெற்கே கன்னியாகுமரி வரையிலும், மேற்கே கராச்சியிலிருந்து கிழக்கே திப்ருகார் வரையிலும் பரந்துள்ள இந்தியாவை மனசால் ஒருசேரச் சிறிது நேரம் எண்ணிப்பாருங்கள். இந்தியர் என்ற முறையிலே இவ்வாறு எண்ணுவது அவசியம் அல்லவா? அப்படி எண்ணும் போது, ஹிந்தி பாஷை எவ்வளவு அவசியம் என்பதை உணர்ந்து கொள்வீர்கள். இவ்வாறு சேர்த்தெண்ணுவதற்கு, ஹிந்தி மொழியொன்றே துணைசெய்யும் என்பதையும், அதைக் கற்றுக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்பதையும் கண்டுகொள்வீர்கள். இந்த நாட்டுப் பொது மொழியாக ஆங்கிலம் இருக்க முடியாது என்பதையும் உங்களுக்கு எடுத்துக்காட்டினேன். ஆங்கில பாஷைமீது எனக்கு வெறுப்பில்லை. சில அறிவாளிகளுக்கு ஆங்கிலம் தெரிந்திருக்க வேண்டியது அவசியம் தான். எல்லா நாடுகளோடும் தொடர்பு வைத்துக்கொள்ளவும், மேல் நாட்டு சயன்ஸ் ஆராய்ச்சிகளைத் தெரிந்துகொள்ளவும், ஆங்கிலப் பயிற்சி இன்றியமையாததுதான். அளவுக்கு மிஞ்சி ஆங்கிலத்துக்குப் பிரதானம் கொடுக்கச் சிலர் முயல்வதைக் கண்டே, எனக்கு மிகவும் வருத்தமுண்டாகிறது. இந்த முயற்சி தோல்வியுறும் என்பதில் சந்தேகமில்லை. அது அதற்குத் தகுந்த இடத்திலேதான், அது அது சோபிக்க முடியும்.

ஹிந்தி பாஷையைக் கற்றுக் கொடுப்பதனல், கன்னட பாஷையின் வளர்ச்சி குன்றிப்போகும் என்றும், கன்னட பாஷைக்கு உரிய ஸ்தானத்தில் 'ஹிந்தி' வந்து அமர்ந்து கொள்ளும் என்றும் சிலர் அஞ்சுகிறார்கள். இதை வீண் கலவரம் என்றே சொல்லுவேன். பிறமொழிகளின் ஸ்தானத்தில் 'ஹிந்தி' அமர்ந்து விடும் என்பதற்கு மாருக, ஹிந்தியால் நன்மையே ஏற்படும் என்று சொல்லவேண்டும். ஹிந்தியைப் பரப்பப் பரப்ப, மற்ற மொழிகள் வளரவும் சக்தி பெறவும் நாம் உதவி செய்தவர்களாகிறோம். நான் பல மாகாணங்களிலிருந்து பெற்ற சொந்த அனுபவத்திலிருந்தே இதைச் சொல்லுகிறேன்.

✲

மீசையும் அரசியலும் :— சுடச் சுடக் குத்தலாகப் பதில் சொல்லுவதில் பிரிட்டிஷ் பிரதம மந்திரி சர்ச்சிலுக்கு இணையாக யாருமில்லை.

ஒரு பெண்மணி ஒரு சமயம் அவரிடம், "நண்பரே, எனக்கு உமது அரசியல் கொள்கையும் பிடிக்கவில்லை; உமது மீசையும் பிடிக்கவில்லை" என்ருள்.

"அம்மணி, இதற்காக நீ துயரப்பட வேண்டாம். ஏனெனில், அந்த இரண்டின் ஸ்பர்சமும் உனக்கு ஏற்படப்போவதில்லை" என்ருர் சர்ச்சில்.

மறதி

மு. அருணாசலம்

பாட்டி ஒருநாள் பையனைக் கடைக்கு அனுப்பினாள். "கடையிலே சர்க்கரை என்றைக்கு வருகிறது என்று விசாரித்துவிட்டுவா" என்று சொல்லி, ஒருவேளை அவன் வழியில் தன் கூட்டாளிகளைக் கண்டால், கடைக்குப் போகவேண்டு மென்பதையே மறந்து விடுவானே என்ற அச்சத்தால் அவன் வேட்டியில் ஒரு முடிச்சும் போட்டு அனுப்பினாள்.

பையன் போனான். வழியில் தன் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் பம்பரம் ஆடிக்கொண் டிருப்பதைப் பார்த்தான். இவனும் கூடச்சேர்ந்து கொண்டான். கொஞ்ச நேரமாயிற்று. வேட்டியிலிருந்த முடிச்சுக் கையில் தட்டுப்பட்டது. 'பாட்டி ஏதோ சொல்லி யல்லவா முடிச்சுப் போட்டனுப்பினாள்?' என்பது மட்டும் அவனுக்கு ஞாபகம் வந்தது. என்ன சொன்னாள் என்று வெகுநேரம் யோசனைசெய்து பார்த்தான்; ஞாபகம் வரவில்லை. முடிச்சை அவிழ்த்து விட்டுக்கொண்டு வீட்டுக்கு வந்து சேர்ந்தான்.

இந்தமாதிரி மறதி உலகத்தில் மிகவும் சாதாரணம். ஒருநாள் அவசரமாக ஊருக்கு ஒரு கடிதம் எழுதினேன். அப்போது நண்பரொருவர் வந்தார். பேசிவிட்டு அவர் திரும்பிப் போகும்போது, "இந்தக் கடிதத்தை வழியிலுள்ள தபால் பெட்டியில் போட்டு விடுங்கள்" என்று அவர் கையில் கொடுத்தேன். அவரும் அதை வாங்கிக் கையில் பிடித்தபடியே போனார்.

எத்தனை ஞாபக முடிச்சுகள் போட்டாலும், முடிச்சுப் போட்ட விஷயம் நமக்கு அநேக சமயங்களில் மறந்துபோய் விடுகிறது. இந்த மறதியின் லீலை வெகு விநோதமாகும். சாதாரண விஷயங்களில் ஏற்படும் இந்த மறதி மாதிரியே ஆத்மிக மறதியும் ஏற்படுகிறதென்றால், விசித்திரமல்லவா?

என் கடிதத்துக்கு மூன்று நாளில் பதில் வருமென்று எதிர்பார்த்திருந்தேன். நாள் ஆறாயிற்று; பதிலைக் காணோம். சந்தேகப்பட்டு நண்பர் வீட்டுக்குப்போனேன். அவரும் வீட்டில் இருந்தார்.

"கடிதம் கொடுத்தேனே, என்ன வாயிற்று?" என்று கேட்டேன்.

"ஏது கடிதம்?" என்றார்.

"தபாலில் போடும்படி அன்றைக்கு நீங்கள் வந்தபோது கையில் கொடுத்தேனே, அந்தக் கடிதம்... தபாலில் போட்டீர்களா?"

கனவு கண்டு விழித்தவர்போல, நண்பர், "அடாடா அந்தக் கடிதமா! மறந்தே போயிற்று...அன்றைக்குப் பாருங்கள்..." என்று சொல்லிக் கொண்டே, எழுந்து சட்டைப் பையிலிருந்து கடிதத்தை எடுத்துக் கொடுத்தார்.

கடிதத்தை இனி என்ன செய்வது? அவர் சொல்லிய தொன்றும் என் காதில் ஏறவில்லை. கடிதத்தைத் தபாலில் போடுவது சம்பந்தமாக எல்லோருடைய அனுபவமும் இப்படித்தானே? தபால் பெட்டியில் போடவேண்டு மென்ற எண்ணத்துடனே போய்க்கொண் டிருப்போம். தெரு முனையில் உள்ள தபால்பெட்டியைத் தாண்டிப் போய்விடுவோம். பிறகுதான், கையில் கடிதமிருப்பது ஞாபகம் வரும். 'சரி இவ்வளவு தூரம் வந்தாயிற்று. மயிலாப்பூருக்குத்தான் போகிறோமே. அங்கே போட்டுக் கொள்ளலாம்' என்று சமாதானம் பண்ணிக்கொண்டு, பஸ்ஸில் ஏறுவோம்.

எத்தனை நேரம் தான் கடிதத்தைக் கையில் வைத்திருப்பது? கண்டக்டரிடம் சில்லறை எடுத்துக் கொடுக்கும்போது,கடிதம் சட்டைப் பைக்குப் போகும். போனது, அவ்வளவுதான், அங்கேயே இருந்துவிடும். நாம் மயி

லாப்பூர் போய்விட்டுத் திரும்பிவந்து, மறுநாள் ஆபீஸுக்குப் புறப்படுகிற வரையில், அது பத்திரமாய் அங்கேயே இருக்கும். சட்டையை எடுத்து மாட்டும்போது தான், கடிதம் கையில் தட்டுப்படும். அன்றைக்கும் ஒருவேளை தபால் பெட்டிக்குப் போகாமல், மறுபடியும் பழைய கதி நேர்ந்தாலும் நேரலாம்!

நாம் எவ்வளவுதான் ஜாக்கிரதையாயிருப்பதாகச் சங்கல்பம் செய்துகொண்டாலும், இந்தப் பொல்லாத மறதி எப்படியாவது வந்து நம்மை ஏய்த்துவிடும். போன டிசம்பர் மாதம் காசிக்குப் போவதற்காகப் புறப்பட்டேன். சென்ட்ரல் ஸ்டேஷனில் நண்பர்கள் வந்து வழியனுப்பினார்கள். ரயில் புறப்பட்டபின், நான் கொண்டுவந்திருந்த சாமான்களை எண்ணினேன்; பெட்டிகள், படுக்கை, புத்தக மூட்டை, கூஜா, குடை, சாப்பாட்டுப் பொட்டலம், காசியிலுள்ள ஓர் உறவினருக்கு நண்பரொருவர் என் மூலம் கொடுத்தனுப்பிய காப்பித்தூள் வகையரா மூட்டையொன்று - எல்லாம் சேர்ந்து மொத்த உருப்படி ஒன்பது; ஒரு முறையல்ல, இரண்டு முறை எண்ணி ஒன்பது என்பதை உறுதி செய்துகொண்டேன்.

மறுநாள் மாலையில் இட்டார்சி என்ற ஜங்ஷனில் அலகபாத் போகிற வண்டிக்கு நான் மாறவேண்டும். இந்த வண்டி சிக்கிரத்தில் புறப்பட்டுவிடும் என்று நண்பர்கள் சென்னையிலேயே எச்சரித்திருந்தார்கள். போதாக்குறைக்கு நான் வந்த வண்டி இரண்டு மணிநேரம் தாமதித்து வந்திருந்தது. இட்டார்சி வந்தவுடனே அவசர அவசரமாய்ச் சாமான்களை இறக்கினேன். கூலியோ, இந்துஸ்தானிவாலா; எனக்கோ, இந்துஸ்தானி தெரியாது. ரயிலில் கூடவந்தவரொருவர் அவனோடு இந்துஸ்தானியில் பேசிச் சாமான்களை அவன் தலையிலும் என் கையிலுமாக ஏற்றி அனுப்பினார். அலகபாத் வண்டி போய்விடுமே என்ற கவலையினால், இறக்கிய சாமான்களை எண்ணாமலே, கூலியும் நானுமாகப் போனோம். போகிற வழியில் எண்ணிப் பார்த்தேன்; சாமான் எட்டுத் தானிருந்தது. இன்ன சாமான் குறைகிறதென்பது தெரியவில்லை. முன்னே ஒன்பதென்று எண்ணியது ஒருவேளை தவருயிருக்கலாமோ என்று மனத்தில் யோசனை பண்ணியபடியே, காத்திருந்த வண்டியில் வந்து ஏறிக்கொண்டேன். அலகபாத் ரயில் கிடைத்ததே என்ற சந்தோஷத்தால், ஒரு சாமான் குறைந்த சங்கதியை மறந்தே விட்டேன்.

சில நிமிஷ நேரமானதும் ரயில் புறப்பட்டது. கூலியை அமர்த்திவிட்ட நண்பர் ஓடோடியும் வந்தார்; அவர் கையில் என் கூஜா இருந்தது. "என்ன ஐயா, இப்படியா சாமானை மறப்பார்கள்! எண்ணிப் பார்க்கப்படாதோ?" என்று இரைந்துவிட்டு, தம் வண்டிக்குத் திரும்பிப்போய் விட்டார். அவர் கூஜாவைக் கொண்டுவந்து கொடுக்காமலிருந்தால், கொஞ்ச நேரம் கழித்துச் சாப்பாட்டு மூட்டையை அவிழ்த்து வைத்துக்கொண்டு, தண்ணீருக்குக் கூஜா இல்லாமல் எப்படி விழித்திருப்பேன் என்று எண்ணியபோது, எனக்கு அவமானமாயிருந்தது.

இந்த மறதி என்பது மிகவும் பொல்லாதது என்பதில் சந்தேகமேயில்லை. கடைத்தெருவுக்குப் போவதற்காகக் கிளம்புகிறோம். "சிலேட்டுக்குச்சி வாங்கி வாருங்கள், அப்பா" என்று, குழந்தை பல நாட்களாகச் சொல்லிவரும் விஷயத்தை இன்றைக்கும் ஞாபக மூட்டுகிறான். சரி, நாலு மணிக்கு வீட்டைவிட்டுப் புறப்பட்ட நாம் எவ்வளவோ சுற்றிவிட்டு, என்னவெல்லாமோ வாங்கிக்கொண்டு வீடு திரும்புகிறோம் - பேனாவுக்கு மை, கில்லெட் பிளேடு, கடித மெழுதக் காகிதம் முதலிய பல சாமான்கள். சிலேட்டுக்குச்சி மாத்திரந்தான் வாங்கவில்லை! மணி ஏழுக்குப் படுத்துத் தூங்கிவிடுகிற பையன், மணி எட்டாகியும் தூங்காமல், சிலேட்டுக்குச்சி வருமென்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறான். ஆனால், அப்பா வந்ததும், சிலேட்டுக்குச்சி வரவில்லை என்பதைக்காணும்போது, அவனுக்கு எப்படியிருக்கும்? குழந்தை விரும்பு

வதை வாங்கிக் கொடுக்கவேண்டும் என்பது தான் நம்முடைய ஆசை. சிலேட்டுக்குச்சி வாங்கக் கூடாது என்பது நம் எண்ணமல்ல. ஏதோ சொல்ப மறதி. ஆனால், சிறு குழந்தைக்கு எவ்வளவு ஏமாற்றம்!

இப்படிப்பட்ட மறதிகள் நம்மெல்லோருக்கும் உண்டு. இந்த மறதி இல்லாமலிருந்தால் நல்லது என்று நினைப்போமே தவிர, மறதியினால் நேர்ந்த பிழையைப் பெருங்குற்றமாய்க் கருதிவிடமாட்டோம்.

ஒரு பெரிய மனிதர், பெரியவர்கள் இரண்டுபேரை மறுநாள் மத்தியான்னம் தம் வீட்டில் விருந்துக்கு அழைத்திருந்தார். அவர் மிக்க வேண்டியவரானபடியால், இவர்களும் மறுக்க முடியாமல் வருவதாக ஒப்புக்கொண்டார்கள். பதினொன்றரை மணிக்கு விருந்து. பெரியவர்கள் இரண்டு பேரும் சரியாகப் பதினொன்றேகால் மணிக்கு மோட்டாரில் வந்து இறங்கினார்கள். விருந்துக்கழைத்த பெரிய மனிதர் அப்போதுதான் சாப்பிட்டுக் கையலம்பிக்கொண்டு வந்துகொண்டிருந்தார். வந்த இருவரையும், "வாருங்கள் இந்நேரத்தில் என்ன விசேஷம், இருவரும் வந்தது? சாப்பாடாயிற்றா?" என்று விசாரித்தார். விருந்தாக வந்த பெரியவர்களுக்கு எப்படியிருக்கும்! சாப்பாட்டை எதிர்பார்த்து வந்தவர்கள், சாப்பிட்டுக் கை துடைப்பவரிடம் என்ன பதில் தான் கூறமுடியும்?

இவை யாவும் மறதியைப் பற்றிய பேச்சில் ஒரு பகுதிதான்; இவை ஸ்தூலமான வாழ்க்கையைப் பற்றியவை. ஆனால், இப்படியே மறதியில் ஆன்மாவைப் பற்றிய செய்திகளும் சில இருக்கின்றன. அவைகளும் இப்படியே ரசமாக இருக்கும். ஒரே ஒரு செய்தியை மட்டும் இங்கே பார்ப்போம். உயிருக்குப் பொதுவாக இறைவன் இருக்கிறான் என்பது தெரியுமா? தெரியும் என்கிறார் ஆழ்வார். தம்முடைய நெஞ்சத்தையே பார்த்துச் சொல்கிறார்: "இறைவன் இருக்கிறான்; இந்த விஷயம் தான் உனக்கு நன்றாய்த் தெரியுமே?" என்று ஆரம்பிக்கிறார்.

இன்னும் மோசம்!

ஆஸ்திரேலியப் பார்லிமெண்டு சபையில் அறுபது வருஷத்துக்கு முன் ஏதோ ஒரு விஷயம் பற்றிக் கடுமையான விவாதம் நடந்தது.

"இன்ன ஊரின் கனம் மெம்பர், பன்றித் தொட்டிக்குத் தண்ணீர் சுமக்கக்கூடத் தகுதி உள்ளவர் அல்ல" என்றார் ஓர் அங்கத்தினர்.

'ஒழுங்கு, ஒழுங்கு' 'மன்னிப்புக் கேளும்' என்ற கூச்சல்கள் எழுந்தன.

உடனே அந்த அங்கத்தினர் சொன்னார்: "தலைவர் அவர்களே, நான் தாழ்மையோடு மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். குறிப்பிட்ட வேலையைச் செய்ய, கனம் மெம்பருக்குப் பூர்ணத் தகுதியும் உண்டென்று ஒப்புக் கொள்கிறேன்."

இறைவன் உளன் என்பதை யுணர்ந்த நெஞ்சம் நல்ல நெஞ்சந்தான்.

> உளன் கண்டாய், நன்னெஞ்சே!
> உத்தமன் என்றும்
> உளன் கண்டாய்!

நெஞ்சம், இறைவன் உளன் என்பதை உணர்ந்ததுதான்; ஆகவே கெட்ட நெஞ்சமல்ல, நல்ல நெஞ்சந்தான். ஆனாலும், மறந்துவிட்டது. மறந்த விஷயத்தை மீண்டும் ஞாபகப் படுத்துவதற்காக, ஆழ்வார், 'உளன் கண்டாய்' என்று இரண்டு முறை அழுத்தமாகத் திருப்பிக் கூறுகிறார்.

மெத்தையிலே படுத்திருக்கிறோம். மிருதுவான படுக்கையில் இருக்கிறோம் என்ற எண்ணமே நமக்கு இருக்காது. ஒரு பக்கம் புரள்கிறோம்; புரண்டவுடன், அந்தப் பக்கத்திலுள்ள படுக்கை, நம் உடம்பு மீது உறுத்தாமல் மிருதுவா யிருக்கிறது. இந்த மென்மையை உடம்பு கண்டவுடன்தான், 'நாம் மென்மையான மெத்தையில் படுத்திருக்கிறோம்' என்ற நினைப்பு உண்டாகிறது.

இதே போலத்தான் இறைவன் நம்மோடு இருக்கிறான் என்ற விஷயமும். அவனே, 'நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்'. நினைப்பவர் உள்ளத்திலே அவன் இருக்கிறான் என்ற விஷயத்தை ஆழ்வார் இப்போது ஞாபகமூட்டி, இறைவன் இருக்கிறான் என்று மீண்டுமொரு முறை வற்புறுத்திச் சொல்கிறார் :

உளன்கண்டாய், நன்னெஞ்சே !
உத்தமன் என்றும்

உளன்கண்டாய் உள்குவார்
உள்ளத்(து)—உளன்கண்டாய் !

சரி, இப்படி உள்குவார் உள்ளத்தில் உள்ளவனான இறைவன் எப்படிப்பட்டவன், எங்கெங் கெல்லாம் இருப்பவன் என்று கேட்கலாமல்லவா? இதற்கும் ஆழ்வார் விடை தருகிறார்.

உலகெங்கும் தான் அவன் இருக்கிறான் ; பாற்கடலில் பள்ளி கொண்டிருக்கிறான் என்பார்கள் பக்தர்கள் ; பாற்கடலாகிய பிரபஞ்ச வெள்ளத்தில் வியாபித்து நிற்கிறான்.

ஆனால், இப்படிச் சூக்ஷ்மமாக வியாபித்து நின்றால் போதுமா? கண்ணார அவனை ஓரிடத்தில் கண்டு அனுபவிக்க வேண்டுமென்று பக்தர்கள் ஆசைப்படுகிறார்கள். இதன் பொருட்டு, சர்வ வியாபியாகிய இறைவன், வேங்கடம் (திருப்பதி) என்ற ஸ்தலத்திலே மூர்த்தி வடிவமாக ஸ்தூலமாகவும் காட்சி தருகிறான்.

'இப்படிப்பட்ட இறைவன் அவனை உள்குவார் உள்ளத்திலும் உள்ளான் என்பதை, எனது நல்ல நெஞ்சமே! நீ அறிவாய். ஆனாலும் மறந்துபோய் விட்டாய். ஆகவே நான் இப்போது உனக்கு ஞாபகப் படுத்துகிறேன். நீ இதைக் கொஞ்சம் மறக்காமல் நினைவில் வைத்திருந்து சிந்தனை செய்வாயாக!'

இந்த பாவத்தில் ஆழ்வார் தம் நெஞ்சுக்கு அறிவுறுத்துகிறார் :

உளன்கண்டாய், நன்னெஞ்சே!
உத்தமன் என்றும்
உளன்கண்டாய், உள்குவார்
உள்ளத்(து)—உளன்கண்டாய்!
வெள்ளத்தின் உள்ளானும்,
வேங்கடத்து மேயானும்,
உள்ளத்தின் உள்ளான் என்(று)
ஓர்.

[டி. கே. சி. யவர்கள் சொல்லிக்கொடுத்த பாட்டு.]

'இந்தியாவை விட்டுப் போ'

பம்பாயில் ஒரு பங்களாவின் சுவரில், "இந்தியாவை விட்டுப்போ" என்ற வாக்கியத்தை ஆங்கிலத்தில் யாரோ எழுதிவிட்டுப் போயிருந்தார்கள்.

ஒரு மாதம் சென்றது. அந்த வாக்கியத்தின் கீழே மற்றொரு வாக்கியம் காணப்பட்டது : "எனக்குப் போகத்தான் ஆசை. முடியவில்லையே?" என்று ஏக்கத்தோடு எழுதிக் கையொப்ப மிட்டிருந்தார் ஒரு பிரிட்டிஷ் ஸோல்ஜர்.

இரண்டொரு நாள் சென்றது. மூன்றாவது ஒரு வாக்கியம் அங்கே முளைத்திருந்தது : "ஏன் போகவில்லை? மனமுண்டானால், இடமுண்டப்பா" என்பது தான் அந்த வாக்கியம்.

திறமையுள்ள வியாபாரி

எப்பேர்ப்பட்ட சாமானையும் விற்றுவிடக் கூடிய மகா திறமையுள்ள ஒரு வியாபாரிக்கு, வாழ்க்கையில் என்னவோ வெறுப்புத்தட்டியது. அவர் ஓர் ஆற்றுப் பாலத்தின் மீது ஏறி, நீரில் குதித்துச் சாக ஆயத்தமானார்.

ஒரு போலீஸ்காரன் ஓடிவந்து "ஓய்! விழாதேயும், விழாதேயும். தற்கொலை கூடாது" என்று கூறி அவரைத் தடுத்தான்.

"ஏன் கூடாது?" என்று கேட்டுத் திரும்பினார் வியாபாரி.

பத்து நிமிஷ நேரம் வியாபாரிக்கும் போலீஸ்காரனுக்கும் ஏதோ பேச்சு நடந்தது. பின்பு, இருவருமாய் நீரில் குதித்துவிட்டார்கள்.

ஸான் பிரான்ஸிஸ்கோ

கலிபோர்னியா மிஷன் ஸ்தாப
கரான பாதிரியின் சிலை.
கலிபோனியா மாகாணத்தின்
தலைநகரம்தான் ஸான்பிரான்
ஸிஸ்கோ



ஆப்பெரா ஹௌஸுக்குப் போகும் வழி



உலகிலேயே நீளமும் உயரமு
மான கோல்டன் கேட் பாலம்



ஆப்பெரா ஹௌஸ்: இங்கே ஐம்பது தேசப் பிரதிநிதிகளும் கூடினார்கள்



1906-ஆம் ௵ பூகம்பத்துக்குப் பின்பு நிர்மாணமான நகரின் ஒரு பகுதி



ஸான் பிரான்ஸிஸ்கோ நகரத்தின் கடற்கரை

அறிவும் அன்பும்

வெ. சாமிநாத சர்மா

அறிவுக்கும் எல்லையில்லை; அன்புக்கும் எல்லையில்லை. ஆனால், இவ்விரண்டுமே மனித வாழ்க்கையைப் பிரகாசிக்கச் செய்கின்றன. இரண்டிலே ஒன்றில்லாவிட்டால் கூட வாழ்க்கை பூர்த்தி பெற்றதாக மாட்டாது.

ஒருவன் பல நூல்களை படித்துப் பேரறிஞன் என்று பட்டம் வாங்கியிருக்கிறான். பதவியும் அவனுக்குக் கிடைத்திருக்கிறது. ஆனால், அவன் இருதயம் ஈரமில்லாதிருந்தால், பிறர் துன்புறுவதைப்பார்த்து அவன் கண் கலங்காதிருந்தால், அவனுடைய அறிவு எதற்குப் பிரயோஜனம்? அதற்கு என்ன மதிப்பு?

அப்படியே வேறொருவன் மற்றவர்களுடைய வருத்தத்தைப் பார்த்தோ கேட்டோ தானும் வருத்தப்படுகிறான். "ஐயோ, ஜனங்கள் இப்படிக் கஷ்டப்படுகிறார்களே" யென்று து[illegible] கொட்டுகிறான். ஆனால், அந்த ஜனங்கள் ஏன் கஷ்டப்படுகிறார்கள், அந்தக் கஷ்டத்தை நிவர்த்திப்பதற்கு என்ன வழி யென்பவைகளைப்பற்றி அவன் சிந்திப்பதில்லை; சிந்திப்பதற் குரிய சக்தியும் அவனுக்கு இல்லை. சிந்தனையே இல்லாதபோது, அவன் மேற்படி கஷ்டங்களைப் போக்க எப்படிப் பரிகாரம் தேடப்போகிறான்? வீட்டிலோ அல்லது எங்காவது ஒரு மூலைக் காட்டிலோ உட்கார்ந்து கொண்டு, 'ஐயோ பாவம்! ஐயோ பாவம்!' என்று அலறிக் கொண்டிருக்கலாம். அன்பின் காரணமாக அவன் அலறிக் கொண்டிருக்கிறானென்பது உண்மையாயினும், அவனுடைய அன்புக்கு என்ன பயனுண்டு? காட்டுத்தீயிலே சமையல் செய்ய முடியுமா? அதைப்போல், அவனுடைய அன்பு யாருக்கேனும் ஆறுதல் அளிக்குமா?

அன்பு பெரிதா, அறிவு பெரிதா என்று சில சமயம் நமக்குச் சந்தேகம் வந்து விடுகிறது. சந்தேகம் தர்ம சங்கடத்தில் கொண்டு போய்விடுகிறது. அது செயலைக் கெடுக்கிறது. அன்பையும் அறிவையும் பற்றி நமக்குத் தெளிவுவேண்டும். அதை ஆராய்வது இந்தக் கட்டுரை.

இதனைச் சில திருஷ்டாந்தங்களினால் விளக்குவோம்? நாட்டிலே தொத்து நோய்கள் பரவியிருக்கின்றன. சரியான சிகிச்சை பெறாமல் ஜனங்கள் ஆயிரக்கணக்கில் மடிந்து போகிறார்கள். நாம் என்ன செய்கிறோம்? கோயில்களிலுள்ள கடவுளர்களுக்குப் பலியிடுகிறோம்; அவர்களைப் பூசைசெய்கிறோம்; பிரார்த்திக்கிறோம். இதனோடு நமது கடமை முடிந்துவிட்டதாகத் திருப்தி யடைகிறோம். இது, நோயினால் அவதிப்படுகிறவர்களுக்கு எந்த விதத்தில் ஆறுதல்? இறந்து போகிற எத்தனை பேரை, நமது பிரார்த்தனை, யமலோகத்திலிருந்து மீட்டுக் கொண்டு வந்திருக்கிறது? சென்ற நூற்றாண்டில இங்கிலாந்தில் லார்ட் பால்மர்ஸ்டன் என்ற ஓர் அறிஞன் (1784-1865) பிரதம மந்திரியாக இருந்தான். இவன் காலத்தில் காலரா நோய் பரவி அநேக மக்களை இரையாக்கிக் கொண்டது. எல்லோருக்கும் ஒரு வாரம் அல்லது ஒரு நாள் ரஜா கொடுக்க வேண்டு மென்றும், இந்த விடுமுறை நாட்களில் தாங்கள் கடவுளை நோக்கிப் பிரார்த்தனை செய்யப் போவதாகவும், ஜனங்கள் கேட்டுக்கொண்டார்கள். இவர்களுடைய வேண்டுகோளை மேற்படி பால்மர்ஸ்டன் நிராகரித்து விட்டான். "கடவுளை நோக்கிப் பிரார்த்தனை செய்கிற நேரத்தில், உங்கள் சுற்றுப் புறத்திலுள்ள அழுக்குகளை யெல்லாம் அப்புறப்படுத்துங்கள்" என்று கூறினான். இப்படிக் கூறியதனால், இவன் ஜனங்களின் அறியாமையை எடுத்துக் காட்டினான்.

இன்னொரு பக்கத்தைப் பார்ப்போம். இப்பொழுது மகாயுத்தம் ஒன்று நடைபெறுகிறது. மனிதனுடைய அறிவானது விஞ்ஞான சாஸ்திரமென்கிற விருட்சத்தின் உச்சாணிக் கிளையிலே ஏறிக்கொண்டு புதிய புதிய கருவிகளைக் கண்டுபிடித்து நிரபராதிகளான ஜனங்களின்மீது பிரயோகிக்கிறது. அறிவுடைய இந்த விஞ்ஞான சாஸ்திரிகளுக்குத் தங்கள் சகோதர மனிதர்களிடத்தில் உண்மையான அன்பு இருக்கும் பட்சத்தில், அவர்கள் தங்களுடைய மேலான அறிவை, அந்தச் சகோதர மனிதர்களைக் கொல்வதற்கு உபயோகிப்பார்களா? அவர்கள் - அந்த விஞ்ஞான சாஸ்திரிகள் - யுத்தகளத்துக்கு நேரடியாக வந்து ஜனங்களைக் கொல்லவில்லை யென்பது உண்மையே யானாலும், அவர்கள் தானே யுத்த களத்திலே ஆயிரக்கணக்கான போர்ச் சேவகர்கள் மடிவதற்கும், யுத்தத்தில் எந்த விதத்திலும் சம்பந்தப்படாத, யுத்தத்தின் காரணத்தைக் கூட அறியாத, தொட்டிலிலே தூங்குகிற குழந்தை முதல், தடியூன்றிச் செல்கிற கிழவர் வரை பலரும் திடீர் திடீரென்று குண்டுபட்டோ வேறெக் காரணத்தினாலோ இறந்து போவதற்கும் காரணர்களா யிருக்கிறார்கள்.

எனவே, அறிவில்லாத அன்பும், அன்பில்லாத அறிவும் அழிவையே உண்டுபண்ணும் என்பது தெரிகிறது.

ஆனால், இந்த அறிவு, அன்பு என்ற இரண்டை மட்டும் தனியாகப் பிரித்து இவை யிரண்டிலே எது சிரேஷ்டமானது என்று கேட்பீர்களானால், அன்புதான் சிரேஷ்டமானது என்று நாம் நிச்சயமாகக் கூறுவோம். அன்புக்கு முதல் ஸ்தானமும் அறிவுக்கு இரண்டாவது ஸ்தானமுமே கொடுப்போம். பெர்ட்ராண்ட் ரஸ்ஸல் என்ற ஆங்கில அறிஞன் இந்தக் கருத்தை மிக அழகாக ஒரு கட்டுரையில் சொல்லியிருக்கிறான். "அன்பினால் ஊக்கப் பெறுவதும் அறிவினால் நடத்தப் பெறுவதும் எதுவோ அதுதான் நல்வாழ்க்கை யென்பது" என்கிறான் அவன். இதைச் சற்று ஆராய்வோம்.

அறிவில்லாத அன்புக்கு, வருகிற தீமையைத் தடுக்கும் சக்தி இராது. செயலற்றிருக்கிற ஒரு தோஷத்தைத் தான் இதற்குக் கற்பிக்க முடியும். ஆனால், அன்பில்லாத அறிவு இருக்கிறதே அது, தீமைகளைச் சிருஷ்டிக்கும் சக்தியுடையது; செயலாற்றும் தோஷமுடையது. இதனால் தீமைகள் அதிகப்படுவதற்கு ஏதுவுண்டு. இரண்டுமே - அதாவது அறிவில்லாத அன்பும் அன்பில்லாத அறிவும் - தோஷமுடையவையே என்றாலும், இரண்டிலே எது அதிகமான தோஷமுடையது என்று பார்க்கிறபோது, அன்பில்லாத அறிவுதான் அதிக தோஷ முடையது என்று நிச்சயமாகக் கூறலாம்.

மற்றும் ஒருவனிடத்தில் உண்மையான அன்பு மட்டும் இருக்குமானால், அவன் அந்த அன்பை அனுஷ்டானத்திலே கொண்டுவந்து காட்டுவதெப்படி யென்பதைப் பற்றி ஆலோசிக்கிறான். அப்பொழுது அவனுக்கு அறிவின் துணை அவசியமா யிருக்கிறது. அதாவது அன்பானது அறிவைத் தூண்டி விடுகிறது. அப்படியே வேறொருவனிடத்தில் அன்பை அடிப்படையாகக் கொள்ளாத அறிவு மட்டும் இருக்கும்பட்சத்தில், அவன் அந்த அறிவை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவர அறிவின் துணையையே நாடுகிறான். அறிவு, அறிவை வளர்க்கும் தொழிலிலே ஈடுபட்டு விடுமானால், அது அன்பை அடியோடு இழந்து விடுகிறது. கடைசியில் அந்த அறிவானது மனிதனைத் தூர்த்தனாக்கி விடுகிறது. ஏன்? கொலைக்களத்திலே கொண்டுவந்துகூட அவனை நிறுத்தி விடுகிறது. இதனால் அறிவைக் காட்டிலும் அன்பு சிரேஷ்டமானதென்று புலப்பட வில்லையா?

இப்படிக் கூறியதனால், அறிவைப் புறக்கணித்து விட்டு அன்பை மட்டும் வளர்த்துக்கொண்டு செல்லவேண்டுமென்று அர்த்த மல்ல. அப்படி நினைப்பது தவறு. பரீட்சார்த்தமாக இரண்டையும் ஒரு தராசிலே வைத்து நிறுத்துப் பார்த்தோமானால், எதனுடைய எடை சிறிது தூக்காக நிற்கும்; எதனுடைய எடை சிறிது தாழ்

வாக நிற்கும் எனபதைக் காட்டுவதற்காகவே, மேற்கண்டவிதமாகப் பரிசீலனை செய்து காட்டினோம். ஆனால், இப்படி எடைபோட்டுப் பார்ப்பதே தவறு. அறிவும் அன்பும் எப்படி எல்லையில்லாதவையோ அப்படியே எடைபோட்டுப் பார்க்க முடியாதவை. எல்லையில்லாத ஒன்றை எப்படி எடைபோட்டுப் பார்க்க முடியும்? அதற்கு அளவுகோல் ஏது? பூமியை எடைபோட்டுப் பார்க்க முடியுமா? ஆயினும், அது இத்தனை டன் நிறையுள்ளதென்று உத்தேசமாக ஒரு கணக்குச் சொல்கிறார்களல்லவா? பூமியை நிறைபோட்டுப்பார்க்கவேண்டியது அவ்வளவு அவசியமில்லையாயினும், அப்படி நிறைபோட முடிந்தாலும் உத்தேசமான ஒரு கணக்கைத் தான் சொல்ல முடியுமென்பது தெரிந்திருந்தாலும், ஒரு மதிப்புக்காக, மற்றப் பொருள்களைப்பற்றி ஆராய்ச்சி செய்வதற்கு அனுகூலமாக இருக்கவேண்டுமென்பதற்காக, இத்தனை டன் நிறையுடையதென்று கணக்குப் போட்டுச் சொல்கிறார்கள். அதைப் போல், அறிவினாலும் அன்பினாலும் முறையே அடையக்கூடிய அனுகூலப் பிரதிகூலங்களை நன்கு தெரிந்து கொள்வதற்காகவே, இரண்டையும் கற்பனையான ஒரு தராசிலே வைத்து நிறுத்துக் காட்டினோம். ஆனால், மேலே சொன்னபடி மனிதனுடைய நல் வாழ்வில் இரண்டும் தேவை யென்பதை மறுபடியும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறோம். இரண்டிலே ஒன்றுமட்டும் இருந்து மற்றொன்றில்லாத வாழ்க்கை, ஒற்றைக் கண் மட்டும் இருக்கிற முகம் மாதிரி.

அன்பில்லாத அறிவு தீமைகளை உற்பத்தி பண்ணும் என்று மேலே கூறினோம். அப்படியே அறிவில்லாத அன்புக்குச் செயலற்ற ஒரு தோஷத்தைக் கற்பித்து அதனால் அது அறிவைக் காட்டிலும் உயர்ந்ததென்று கூறினோம். இப்படிச் சொல்வது ஒரு பக்கத்துக் கட்சியை எடுத்துச் சொன்ன மாதிரிதான் ஆகும். அறிவில்லாத அன்புக்குத் தீமைகளைத் தடுக்கும் சக்தியில்லாத ஒரு தன்மை உண்டு என்று சொன்னதனாலேயே, அது, அதனுடைய தூண்டுதலோ, முயற்சியோ இல்லாமலேயே தீமைகளை வளர்க்கிறதென்று அர்த்தமாகவில்லையா? நன்மைகளை வளர்க்க வேண்டுமே தவிர, தீமைகளை வளர்க்கக் கூடாது. பயிர்களை வளர்க்க வேண்டும்; களைகளைப் பிடுங்க வேண்டும். அது மட்டுமல்ல, பயிர்கள் செழுமையாக வளர வேண்டுமானால், களைகளைக் கட்டாயம் பறித்தேயாக வேண்டும். சிஷ்டர்களைப் பரிபாலனம் செய்வதற்காகத் துஷ்டர்களை நிக்ரகம் செய்தே யாக வேண்டும். அதேபோல் நன்மைகள் வளர வேண்டுமானால் தீமைகளை வளரவொட்டாமற் செய்யவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால், நன்மைகளை வளரவொட்டாமல் செய்தவர்களாவோம். எனவே தீமைகளைத் தடுத்து நிற்பதுமட்டும் போதாது; அவைகளை வளரவொட்டாமல் அழிக்கவும் வேண்டும். அப்படி அழிக்காமலிருப்பது குற்றம்; செய்ய வேண்டிய கடமையைச் செய்யாத குற்றம்.

அதுபோல் அறிவில்லாத அன்பானது, வருகிற தீமைகளைத் தடுத்து நிற்கும் செயலற்ற ஒரு தோஷமுடையதாக மட்டும் இருக்கிறதென்று சொன்னால், அது பெரிய குற்றத்தைச் செய்ததாகவே ஆகிறது. ஏனென்றால், அது தீமைகள் வளர்வதற்கு இடங் கொடுத்து விடுகிறதில்லையா? இதனை, நமது அன்றாட வாழ்க்கையிலே ஏற்படுகிற அனுபவங்களைக் கொண்டே பார்ப்போம்.

ஒரு தாய் இருக்கிறாள். அவளுக்கு ஒரே மகன். அந்த ஒரு மகன்பேரில் அவளுக்கு அளவில்லாத அன்பு இருக்கிறதென்றால், அதில் ஆச்சரியப்படுவதற்கு என்ன இருக்கிறது? ஆனால், அந்த அன்பின் மிகுதியினால் அவள் தன் மகனை அறிவோடு வளர்க்க வேண்டுமென்பதை மறந்துவிடுகிறாள். பாலும் சோறும் ஊட்டுகிறாள்; வெயிலிலே காயவேண்டாம், மழையிலே நனைய வேண்டாம், இருட்டிலே போகவேண்டாம் என்றெல்லாம் சொல்லி வாழ்க்கை யென்பது மேடுபள்ளங்களுடையது, சுகதுக்கங்கள்

கலந்தது என்று உண்மையை அவனுக்குக் காட்டாமலேயே வளர்த்து விடுகிருள். முடிவு என்ன? அவனிடத்திலே யுள்ள மேலான தன்மைகளெல்லாம் அடங்கிப்போய், கீழான தன்மைகளெல்லாம் வளர்கின்றன. இந்த வளர்ச்சியின் காரணமாக, அவன் கோழையாகவோ அல்லது கொடுமை நிறைந்தவனுகவோ ஆகி விடுகிருன். கடைசியில் தன்னைப் பெற்று வளர்த்த தாயையே அலட்சியப்படுத்துகிருன்; அவமானப்படுத்துகிருன்; மனம் நொந்தோ அல்லது வேறு காரணத்திஞலோ, அவள் இறந்துபடுவதற்கும் காரணமாயிருக்கிருன். இதனை அநேக குடும்பங்களில் நாம் நன்ருய்ப் பார்க்கிருேம். இதனின்று தெரிவது என்ன? அறிவில்லாத அன்பு, அந்த அன்புக்கே ஆபத்தாக முடிகிறது. அதாவது அன்பு, அந்த அன்பின் அழிவுக்கே காரணமா யிருக்கிறதென்று தெளிவாகிற தில்லையா?

இனி, அறிவையும் அன்பையும் தனித் தனியாகப் பிரித்துவைத்துக் கொண்டு ஒவ்வொன்றின் தன்மைகளைப்பற்றியும் சிறிது ஆராய்வோம். அறிவு இருக்கிறதே அது கூர்மையான கத்தி மாதிரி. அதனை நல்லதுக்கும் உபயோகிக்கலாம்; கெட்டதுக்கும் உபயோகிக்கலாம். ஆனல், நல்லதுக்காக உபயோகிக்கிற அறிவு தான் அறிவு; கெட்டதுக்காக உபயோகிக்கிற அறிவை அறியாமை யென்று தான் சொல்லவேண்டும். எப்படி நாற்றம் என்ற சொல்லை நல்ல வாசனைக்குத் தான் சொல்லவேண்டுமே தவிரக் கெட்ட வாசனைக்குச் சொல்லக்கூடாதோ, ஆனல் எப்படி அதற்கு விரோதமாகக் கெட்ட வாசனையைத்தான் நாற்றம் என்று சொல்கிருேமோ அதைப்போல், இப்பொழுது உலக விவகாரங்களில் அநியாயமான முறையில் ஒரு காரியத்தைச் செய்தால், அல்லது பிறருக்குத் தெரியாமல் திருடுதல் முதலிய குற்றங்களைச் செய்து, அந்தக் குற்றங்களுக்கான தண்டனையைப் பெருமல் சாமர்த்தியமாகத் தப்பித்துக்கொண்டால், அல்லது அர்த்தமில்லாத வார்த்தைகளை ஓட்டைக் குழாயிலிருந்துவரும் தண்ணீர்போல் கொட்டிக்கொண்டிருந்தால், அல்லது யார் வயிற்றிலே அடித்தாவது பணஞ் சம்பாதித்துச் சேர்த்தால், அப்படிச் செய்கிறவனை அறிவுள்ளவன் என்று கூறுகிருேம்; அவனைப் பாராட்டவும் செய்கிருேம். இது தவறு எப்படிக் கூர்மையான கத்தி, கொலைக் கருவியாக இல்லாமல் செடி கொடிகளை நறுக்குவதற்கும் புண்ணை அறுப்பதற்கும் இருக்கிறதோ அப்படியே அறிவானது நல்லதைச் செய்வதற்காக ஏற்பட்டிருக்கிறதே தவிர, கெட்டதைச் செய்வதற்காக அல்ல. அப்படிக் கெட்டதைச் செய்யுமானல் அது அறிவல்ல. அறிவு, அறிவாகவே இருக்கவேண்டும்; அதாவது எப்படி இருந்தால் அறிவு லட்சணமாயிருக்குமோ அப்படி யிருக்கவேண்டுமென்பதற்காகவே, அந்த அறிவுக்கு அடிப்படையில் அன்பு இருக்கவேண்டுமென்று சொல்வது.

அறிவு அதிகாரத்திலே மோகமுடையது; புகழ்ச்சியிலே விருப்பமுடையது; துணிச்சலுடையது; தனது சக்தியிலே எல்லைமீறிய நம்பிக்கையுடையது; அதன் பயனுக அநேக சமயங்களில் ஆபத்திலே சிக்கிக் கொண்டு விடுகிறது. ஆகவே, அறிவு பிரயோஜனப் படக்கூடியதாக இருக்கவேண்டுமானல், அது வேறு ஏதேனுமொன்றின் துணையோடு கூடியதாய் இருக்கவேண்டும்; தருமமென்பதை லட்சியமாகக் கொண்டிருக்க வேண்டும்.

அறிவு வெண்மை நிற முடையதென்று சொல்வார்கள். இதனலேயே அறிவின் அதி தேவதையாகிய சரஸ்வதியை 'வெள்ளைக் கலையுடுத்தி, வெள்ளைப் பணிபூண்டு, வெள்ளைக் கமலத்தே வீற்றிருப்பாள்' என்று கவிஞர்கள் வர்ணிக்கிருர்கள். வெண்மை, தூய்மைக்கு அடையாளம். அதாவது அறிவுடையவர்கள் தூய்மை யுடையவர்களாக இருப்பார்களென்பது மரபு. தூய்மை யென்ருல் புறத் தூய்மையல்ல; அகத் தூய்மை.

ஆனால், அறிவானது இப்படி வெண்மை நிற முடையதா யிருப்ப திலே ஓர் ஆபத்தும் உண்டு. அதில் ஒரு சிறு கறைபட்டால் கூட, அது பளிச்சென்று தெரியும். இதனால் அதன்மீது எவ்வித அசுத்தமும் படியா மல் பாதுகாத்துக் கொள்ளவேண் டும். அப்படி ஏதேனும் ஒரு சிறு அசுத்தமும் படிந்துவிடுமானால், அது அந்த வெண்மையினின்று மாறிவிடு கிறது. அதனைத் தூய வெண்மை என்று சொல்லமுடியாது. அப்படியே அறிவு சுத்த அறிவா யிருக்கவேண்டு மானால், அது வேறு எவ்வித அசுத்த குணங்களோடும் சம்பந்தப் படாத தாய் இருக்கவேண்டும்.

அறிவு முதுமைக்கு விரோதி; இள மைக்குத் தோழன். தலை நரைத்த, உடல் தளர்ந்த கிழவர்கள் அதனைச் சிரத்தையோடு நாடுவார்களானால், அவர்களை அது ஆதரிக்கிறது; அவர்களைப் புதிய உலகத்துக்குக் கொண்டுபோய் விடுகிறது; இது காறும் பெற்றிராத ஒரு கௌரவ ஸ்தானத்தை அவர்களுக்கு வாங்கிக் கொடுக்கிறது. இங்ஙனம் வயதிலே முதிர்ந்தவர்கள் அதனை நாடுகிற போது, இடையிடையே மறதி என்கிற திரை விழலாம். ஆனால், சிரத்தை யென்கிற விளக்கை மட்டும் அவர்கள் எடுத்துச் செல்வார்களானால், அந்தத் திரை தானாகவே விலகிவிடும்; அறி வைக் காண்பார்கள்; அந்த அறிவும் அவர்களுக்குத் தரிசனம் கொடுக்கச் சந்தோஷமாகக் காத்துக்கொண் டிருக்கும்.

அறிவானது ஏன் முதுமைக்கு விரோதியா யிருக்கிறது, ஏன் இள மைக்குத் தோழனாயிருக்கிறது என்று சிலர் கேட்கலாம். ஏனென்றால், அதுவே, அந்த அறிவே, இளமை யுடையது; வளரும் தன்மையது. கிரேக்கர்களின் அறிவுத் தெய்வமா கிய அத்தேனே, அழியாத கன்னிகை யென்றே வர்ணிக்கப் பட்டிருப்பது இங்கே கவனிக்கத் தக்கது. இப்படி மாறாத இளமையுடைய அறிவை நாடுகிறவர்கள் என்றும் இளமை யுடையவர்களா யிருப்பார்கள்; எப் பொழுதும் சுறுசுறுப்பா யிருப்பார் கள். அறிவு சோம்பலுக்குச் சத்துரு; நித்திரைக்கு விரோதி.

இனி, அன்பைப் பற்றிச் சிறிது ஆராய்வோம். அன்பை மூடு பனிக்கு ஒருவாறு ஒப்பிடலாம். எப் படியென்றால், ஒரு பொருளினிடத் திலோ அல்லது ஒரு ஜீவப் பிராணியி னிடத்திலோ அல்லது நம்மைப் போன்ற ஒரு மனிதரிடத்திலோ நாம் அன்பு செலுத்துகிறோம். அப்படி நாம் செலுத்துகிற அன்பு நம்மையறி யாமலே நம்மிடத்தில் உண்டாயிருக் கிறது. ஏன் குறித்த ஒரு பொரு ளிடத்தில் அல்லது குறித்த ஒரு மனித ரிடத்தில், மற்றப் பொருள்களை அல் லது மனிதர்களைப் புறக்கணித்து விட் டுக்கூட அன்பு செலுத்துகிறோம் என்ற காரணம் நமக்குத் தெரிவ தில்லை! இருந்தும் அன்பு செலுத்து கிறோம். அப்படி அன்பு செலுத்துகிற போது, குறித்த அந்தப்பொருளினிடத் தில் அல்லது மனிதரிடத்திலுள்ள குறைகள் ஒன்றும் நமக்குத் தெரிவ தில்லை. நம்முடைய அன்பானது, நமக்கும் அவர்களுக்கும் மத்தியில் மூடுபனி மாதிரி இருந்துகொண்டு, அவர்களுடைய குறைகளை மறைத் துக் காட்டுகிறது. உதாரணமாக, நமது குழந்தை துஷ்டத்தனம் செய் கிறது; அதனால் மனக் கஷ்டமும் பொருள் நஷ்டமும் உண்டாகின் றன. இருந்தாலும், அவைகளை நாம் பொருட்படுத்துவதில்லை. குழந்தை யின் மீதுள்ள அன்பு காரணமாக அதனை மிகவும் துட்டியென்றும் புத்திசாலியென்றும் பல படச் சொல் லிக்கொண்டு சந்தோஷப் படுகிறோம்; இப்படிப்பட்ட பிள்ளை நமக்குப் பிறந் ததே யென்று பெருமையும் அடைகி றோம். இதே பிரகாரம் அயலார் வீட் டுப் பிள்ளை யொன்று துஷ்டத்தனம் செய்யட்டும். அப்பொழுது நாம் அத னைச் சகித்துக் கொண்டிருக்கிறோமா? நமக்கு எவ்வளவு கோபம் வருகிறது! இதற்குக் காரணம் என்ன? அந்தக் குழந்தையினிடத்தில் நமக்குள்ள அன் புக் குறைவு தான். இதனாலேயே அன்பானது பனிப் படலம் மாதிரி இருந்து மற்றவர்களுடைய குறை களை நமக்கு மறைத்துக் காட்டுகிறது என்று மேலே கூறினோம்.

சாதாரணமாக, ஒரு பொருளின் மீது இரண்டு காரணங்களுக்காக அன்பு செலுத்துவதுண்டு. ஒன்று அழகுக்காக; மற்றென்று உபயோகத்துக்காக. உதாரணமாக, கன்னியாகுமரியை எடுத்துக் கொள்வோம். முக்கடலும் ஒன்று கூடும் இந்த இடம் பார்வைக்கு மிக அழகாயிருக்கிறது. இந்த இடத்திலே நின்று கொண்டு சூரியோதயத்தையோ சூரியாஸ்தமனத்தையோ பார்த்துக் கொண்டிருந்தால், நம்மை யறியாமலேயே நமக்கு ஒருவிதப் புளகாங்கிதம் உண்டாகிறது; ஒருவித மனச்சாந்தி ஏற்படுகிறது. இதனல் இந்த இடத்தின்மீது நமக்கு அன்பு ஏற்படுகிறது; அடிக்கடி இந்த இடத்தை வந்து பார்க்கவேண்டுமென்று ஆசைப்படுகிறோம். எனவே, இந்த இடத்து அழகானது இந்த இடத்தின்மீது நமக்கு அன்பு உண்டாவதற்குக் காரணமாயிருக்கிறது. இரண்டாவது, இந்த இடத்துக்குச் சென்று சிறிது காலம் வசித்தால், நமக்கு நல்ல தேகாரோக்கியம் ஏற்படுகிறது. இந்த உபயோகத்துக்காக இந்த இடத்தின் மீது நமக்கு அன்பு உண்டாகிறது. இதே மாதிரி தான், ஜீவப்பிராணிகள், மனிதர்கள் ஆகியவர்கள் விஷயத்திலும். ஆனல், பொதுவாகப் பார்க்கப் போனல், பொருள்களிடத்தினிலுள்ள அழகுக்காக அவைகளின் மீது அன்பு செலுத்துகிறோம்; ஜீவப்பிராணிகள், மனிதர்கள் முதலியோர் விஷயத்தில், அவைகளின் அல்லது அவர்களின் உபயோகத்துக்காக அன்பு செலுத்துகிறோம். சுவரில் படம் மாட்டியிருக்கிறது. அதைத் தினம் தூசு படாமல் துடைக்கிறோம்; கீழே விழாமல் ஜாக்கிரதையாகப் பாதுகாக்கிறோம். ஏன்? அதிலுள்ள அழகானது அதன்மீது நம்மை அன்பு செலுத்தச்செய்கிறது. சரி; வண்ணன் கழுதை மீது அன்பு செலுத்துகிறன். ஏன்? அதனுடைய உபயோகத்துக்காக, அதனுடைய அழகுக்காக அல்ல.

இவ்விதம் இந்த இரண்டுவிதக் காரணங்களுக்காக அன்பு செலுத்துவதென்பது சாதாரணம் என்று தான் சொல்லவேண்டும். இவைகளுக்கு

யார் தெரியுமா?

ஹென்ரி லாபுஷேர் என்பவர் ஒரு சமயம் ருஷ்யாவில் பிரிட்டிஷ் ஸ்தானீகரா யிருந்தார்.

அப்போது தடபுடலாக ஒரு ஜெர்மானியன் அவர் அறைக்குள் வந்தான்.

"ஒரு நாற்காலியில் உட்காருங்கள்" என்று சொல்லிவிட்டு, லாபுஷேர் ஏதோ எழுதிக்கொண்டே யிருந்தார்.

"நான் யார் தெரியுமா?" என்று படபடப்புடன் கேட்டு, தன்னுடைய பற்பல பட்டங்களையும் அந்த ஜெர்மானியன் அடுக்கினன்.

"அப்படியா? அப்படியானல், இரண்டு நாற்காலிகளில் உட்காருங்கள்" என்று திரும்பிப் பார்க்காமலே சொல்லிவிட்டு, மேலும் எழுதிக் கொண்டிருந்தார் லாபுஷேர்.

விசேஷ மதிப்புக் கொடுக்கமுடியாது. எவ்விதக் காரணத்துக்காகவு மில்லாமல், எவ்விதப் பிரயோஜனத்தையும் எதிர்பாராமல், அன்புக்காகவே அன்பு செலுத்துவதிருக்கிறதே அது தான் விசேஷம்; அது தான் மேலான அன்பு. வெள்ளம் வந்து ஊரை அடித்துக்கொண்டு போய்விடுகிறது. ஜனங்கள் வீடு வாசலின்றித் தவிக்கிறார்கள். அப்படிப் பட்டவர்களுக்கு நாம் உதவி செய்கிறோம். காரணம் அவர்கள்மீது நமக்குள்ள அன்பு தான். இந்த அன்பு, ஜனங்கள் இப்படித் தவிக்கிறார்களே என்ற இரக்கத்தினல் உண்டானதே தவிர, இந்த ஜனங்களிடமிருந்து எவ்விதப் பிரதிப்பிரயோஜனத்தையும் எதிர் பார்த்தல்ல; இந்த ஜனங்கள் பின்னடி நமக்கு உதவி செய்வார்களே யென்ற எண்ணத்தினலு மல்ல. இவ்விதம் அன்புக்காக அன்பு செலுத்துவது விசேஷந்தான். ஆனல், இதைவிட மேலான அன்பு ஒன்று இருக்கிறது. அன்பு செலுத்துவதனல் துன்பம் உண்டாகி, அந்தத் துன்பத்தை அனுபவித்துக்கொண்டே அன்பு செலுத்து

வது இருக்கிறதே அதுதான் முதல் தரமான அன்பு என்று சொல்வதற்குரியது. உதாரணமாக, குஷ்டரோகிகளுக்குச் சிகிச்சை செய்கிற தொண்டிலே ஒருவன் ஈடுபடுகிறான். அதற்கு எவ்வளவு சகிப்புத் தன்மை வேண்டும்? இந்தத் தொண்டிலே ஈடுபட்டதன் விளைவாக அவனுக்கே அந்தக் குஷ்டநோய் வந்துவிடுகிறது. இப்படித் தனக்கு நோய் வரக்கூடும் என்று அவனுக்கு ஏற்கெனவே தெரியாத தன்று. ஆயினும், துணிந்தே அவன் இந்தத் தொண்டிலே இறங்கினான்; இறங்கி, இந்தக் கொடிய நோயையும் வருவித்துக் கொண்டான். இப்படி நோயை அனுபவித்துக்கொண்டே மற்ற நோயாளிகளுக்குச் சிகிச்சை செய்துகொண்டு வருகிறான். இதுவல்லவோ உயர்ந்த அன்பு? தான் அன்பு செலுத்துவதன் விளைவாக மற்றவர்கள் இன்பம் அடைகிறார்களே, அந்த இன்பத்திலேதான் இவன் இன்பம் அடைகிறான்; தனது துன்பத்தையும் மறக்கிறான்.

ஆகவே, தனது சொந்தத் துன்பங்களை அனுபவித்துக் கொண்டு, அல்லது அவைகளை மறந்துவிட்டு மற்றவர்களுக்கு உதவி செய்வது தான் முதல்தர அன்பு; மற்றவர்களுக்கு உதவி செய்வதனால் ஒருவித சந்தோஷம் உண்டாகிறது, ஒருவித மனச்சாந்தி ஏற்படுகிறது என்பதற்காக உதவி செய்வது இரண்டாந்தர அன்பு; அழகை நாடியோ, உபயோகத்தைக் கருதியோ அன்பு செலுத்துவது மூன்றாந்தர அன்பு. பலனை எதிர்பார்த்து அன்பு செலுத்துவது அதமம். பலனை எதிர்பாராமல் ஆனால் சந்தோஷம் உண்டாகிறது என்ற காரணத்துக்காக அன்பு செலுத்துவது மத்திமம்; அன்புசெலுத்துகிறோமென்ற எண்ணமில்லாமலே அன்பு செலுத்துவது, துன்பத்தை அனுபவித்துக்கொண்டாவது அன்பு செலுத்துவது உத்தமம்.

ஒருவனுக்கு அறிவும் இருக்கலாம்; அன்பும் இருக்கலாம். அவைகளைப் பயன்படுத்துகிற விதத்திலே தான் அவை பிரகாசிக்கின்றன. எவனுடைய வாழ்க்கையிலே இவ்விரண்டும் பிரகாசிக்கின்றனவோ அவனுடைய வாழ்க்கை தான் நல்வாழ்க்கை.

✲

ஸினிமா வெற்றிக்கு வழி

ஸினிமாக் கதை எழுதுவதில் சிறந்த வெற்றிகண்ட ஒருவர் பிரெஸ்டன் ஸ்டர்ஜெஸ் என்பவர். ஒரு ஸினிமா ஜனங்களைக் கவர்ந்து ஏராளமாய்ப் பணம் கொடுக்கவேண்டுமானால், அதற்கு அவர் சொல்லும் 11 சூத்திரங்கள் வருமாறு:

(1) குரூபியான பெண்ணை விட அழகான பெண் மேல்.

(2) புஜத்தை விடக் கால் மேல்.

(3) கூடத்தை விடப் படுக்கை அறை மேல்.

(4) போவதை விட வருவது மேல்.

(5) சாவை விடப் பிறப்பு மேல்.

(6) பேச்சைவிடத் துரத்துவது மேல்.

(7) இயற்கைக் காட்சியைவிட நாய் மேல்.

(8) நாயைவிடப் பூனைக்குட்டி மேல்.

(9) பூனைக்குட்டியை விடப் பாப்பா மேல்.

(10) பாப்பாவைவிட முத்தம் மேல்.

(11) உளறியடித்துக்கொண்டு வழுக்கி விழுவது எல்லாவற்றையும் விட மேல்.

பச்சை மசி

கி. ஜ. ர.

சிறு பையனாயிருக்கையில், முதல் பொய்யைக் கற்றுக்கொள்ள, நான் வெகு சிரமப்பட்டேன். சிரமப்பட்டேனாவது! பொய் தானாக வரவில்லை. நிர்ப்பந்தத்தால் தான் உதயமாயிற்று. நிர்ப்பந்தம் ஒரு பாட்டி செய்த பல நாள் கைங்கரியமாகும். பிறகு, 'பொய்யுடை ஒருவன் சொல்வன்மையினால், மெய் போலும்மே-மெய் போலும்மே!' என்பார்களே, அந்த வல்லமை எனக்கு ஏற்பட்டு விட்டது. பொய் சொல்வது ஒரு கலை. ஏனென்றால், சகல கலைகளுமே பொய்தான். இன்னொருவிதமாகச் சொன்னால், பொய்யை மெய்யாகச் செய்வது கலை; மெய்யைப் பொய்யாகச் செய்வது வாழ்க்கை. நான் ஓர் மசிக்கூட்டை உடைத்து விட்டேன்; இது வாழ்க்கை. நான் அதை உடைக்கவில்லை என்று என் தகப்பனாரிடம் நிலைநாட்டினேன்; இது கலை. பச்சை மசி என்றதும், எனக்கு அந்த மசிக்கூட்டின் ஞாபகம் வருகிறது.

பேனா, பென்ஸில், மசிக்கூடு, பிளாட்டிங் அட்டை, ஸ்கேல், காம்பஸ் எதுவானாலும் முதல்தரமானவையாகவே என் தகப்பனார் வாங்கி வைத்திருப்பார். ஒவ்வொரு சாமானிலும் அவருக்கொன்று, எனக்கொன்று தனித் தனியாயிருக்கும். என்னதான் எனக்குத் தனியாய்ச் சாமான்கள் இருந்தாலும், அவர் சாமான்களிலே எனக்கு ஓர் ஆசை. எனக்கென்ன, ஒவ்வொரு வீட்டிலுமே குழந்தைகளுக்கு இந்த ஆசை இருக்கத்தான் இருக்கிறது. ஜவஹர்லால் நேரு கூடத்தான் தம் தகப்பனாரின் பேனாவை எடுத்துவிட்டார். அவ்வளவு தூரம் போவானேன்? இப்போது என் வீட்டிலேயே வந்து பாருங்கள். ஓர் அரை நிமிஷம் நான் வெளியே போய் விட்டு வந்தால் போதும். பைரனின் 'பைடு பைப்பர்' பாட்டில் வரும் எலிகள் மாதிரி, என் சாமான்கள், புத்தகங்களையெல்லாம் பசங்கள் 'லூட்டி' யடித்து விடுகிறார்கள். ஒரு சாமான் நான் வைத்த இடத்தில் இருப்பதில்லை.

என் தகப்பனார் ஓர் அபூர்வமான மசிக்கூடு வைத்திருந்தார். வெகு நாளாக எனக்கு அதிலே கண். அதில் அவர் எப்போதும் வர்ண இங்கிதான் கரைத்து வைத்திருப்பார். பச்சை மசி அல்ல; நீல மசி. (பச்சை மசி விஷயம் பின்னால் சொல்லுகிறேன்.) தகப்பனார் வெளியே போயிருக்கும் சமயம் பார்த்து, அதை நான் எடுத்தேன். திருட்டுத்தனமாய் எந்தக் காரியம் செய்தாலும், கை படபடக்குமல்லவா? எனக்குப் பட படத்தது. மசிக்கூடு தவறியது. 'டபக்'கென்று உடைந்து விட்டது. உடைந்ததுதான் உடைந்ததே; சுக்கு நூறாய்ப் போயிருக்கக் கூடாது? போயிருந்தால், அன்று என் சத்தியத்துக்குப் பங்கம் வந்திராது. ஆனால், அந்தச் சனியன் வெகு கச்சிதமாய் இரண்டே இரண்டு துண்டாய் உடைந்தது: மேல் பாதி, கீழ்பாதியாய் இரண்டு துண்டுகள். எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. மசிக் கூட்டின் இரண்டு பாதிகளையும் குயவன் வீட்டுப் பானை அடுக்குமாதிரி மிகவும் நாஜூக்காக அடுக்கிச் சேர்த்து அதன் எதாஸ்தானத்தில் கொண்டுபோய் வைத்தேன். விஷயத்தை யாரிடமும் சொல்லாமல், கமுக்கமாய் இருந்தேன்.

எனக்குப் பெரிய திகில். பண்டங்களில் என் தகப்பனாருக்குப் பெரும் பற்றுதல். ஒரு சிறு அழகான பென்ஸில் கட்டை போனாலும், அளவற்ற வருத்த மடைவார். இது பொது

வர்ணங்கள், பிரபஞ்ச அற்புதங்களில் ஒன்றாகும். விஞ்ஞானிகள், கலைஞர்கள், சாமான்யர்கள் - யாவருக்குமே வர்ணங்களின் அனுபவத்திலும் ஆராய்ச்சியிலும் இன்பமுண்டு. ஆனால், அந்த வர்ணங்களின் ரகஸ்யம் என்ன? அதை யாரறிவார்?

உடைமை வாதிகளுக்குக் கோபம் தருமோ, என்னவோ, நான் அறியேன்; பொட்டல் கொள்கைக்குச் சரிப்பட்டு வருமோ, வராதோ, அதையும் அறியேன். ஆனால், உண்மை இதுதான். ஒரு சாமானும் எக்காரணத்தாலும் அழியக் கூடாது, ஒரு ஜீவனும் எக்காரணத்தாலும் துன்புறக் கூடாது - இது அவர் மனோபாவம். சுந்தரமான மசிக்கூடு உடைந்து விட்டது. அதை அறியும் போது, அவர் வருத்தமும் கோபமும் அடைவார். இதுவே என் திகில். நேருவின் தந்தைமாதிரி, அடிப்பார் என்று என் தகப்பனரிடம் எனக்குப் பயமில்லை. அவர் என்னை அடிப்பதேயில்லை. என் நினைவறிந்த மட்டில், ஒரே ஒரு தடவை ஒரே ஓர் அடி தான் என்னை அவர் அடித்திருக்கிறார். என்றாலும், அவருடைய கோபத்தைக் கண்டால், எனக்குப் பயம். அடிக்க மாட்டார்; கண்டபடி திட்டவாவது திட்டுவாரா? அதுவுமில்லை. "ஏ மிருத்யு, மிருத்யு" என்று பல்லைக் கடித்துக்கொண்டு இரு முறை சொல்லுவார். இதுதான் அவர் திட்டு. இதை என்னால் தாங்க முடியாது. என் உள்ளம் பரம வேதனை யடையும். இது உங்களுக்கு ஆச்சர்யமாயிருக்கும். ஆனால், உண்மை. ஏன் என்றால், எனக்குத் தெரியாது.

மணி பதினொன்றாயிற்று. தந்தை வந்து சேர்ந்தார். சாப்பிட்டோம். இனிமேல், அவர் கணக்கெழுத உட்கார்ந்து விடுவார். நெருக்கடி நேரம் சமீபித்துவிட்டது. நான் சும்மா உட்கார்ந்திருந்தால், என்னைத்தான் மசிக்கூட்டை எடுத்துவரச் சொல்வார். வேலை செய்வது போல் பாவனை செய்யவேண்டும். தீவிரமாக ஒரு புத்தகத்தைக் கையில் எடுத்துக் கொண்டு, உட்கார்ந்து, ஆழ்ந்து படிக்கத் தொடங்கினேன். படிக்கவாவது மண்ணாங்கட்டியாவது! எரிமலைமேல் உட்கார்ந்திருப்பவன், பாரதமா படிப்பான்? பாசாங்குதான் செய்தேன்.

தகப்பனர் என்னைப் பார்த்தார். அருமைக் குழந்தை படிப்பதற்கு ஊறு செய்வாரா? சின்னம்மாவைக் கூப்பிட்டு, "அந்த மசிக் கூட்டை எடுத்துவா" என்று சொன்னார். மசிக்கூடு! மசிக்கூடா அது! சனியன் எதற்காக உடைந்தது? என் உடம்பு குலுங்கியது. கண் மிரண்டது. என்றாலும், புத்தகத்துக்குள்ளே அல்லவா புதைந்திருக்கிறது என் தலை. அந்த ஒரு நிமிஷத்தில் உலகமே கிடுகிடுத்தது எனக்கு. "அடாடா!" என்று சின்னம்மாவின் குரல் உள்ளே கேட்டது. அவள் மசிக்கூட்டின் மேல்பாதியோடு வெளியே வந்து சேர்ந்தாள். "மசிக் கூட்டை யாரோ உடைத்து வைத்திருக்கிறார்களே!" என்று என்னைக் கடைக்கண்ணால் பார்த்துக் கொண்டே சொன்னாள். யாரோவாவது! என்னையும் அவளையும் தவிர, வீட்டிலே யாரும் இல்லை. விஷயம் அவளுக்கு நிச்சயமாகி விட்டது. ஆனால், அப்பாவுக்கு? அவர் என்ன கடவுளா?

"என்ன இது? ஏனடா, நீயா உடைத்தாய்?" என்று என்னை அவர் கேட்டார்.

"இல்லவே யில்லை" என்று உதட்டைப் பிதுக்கிக் கொண்டு, பொல பொல என்று கண்ணீர் விட்டேன்.

"அவன் பொய் சொல்லமாட்டான்" என்றார் தகப்பனர்.

"பின்னே நானா பொய் சொல்லுகிறேன். பார்த்தாயா பழியை! மசிக் கூட்டை வைத்துக் கொண்டு எனக்கென்ன வேலை? அவன்தான் வீடு முழுக்க என்னவோ குடைந்துகொண்டிருந்தான். எப்போதும் ஏதாவது இறுக்கிக் கொண்டிருக்கிறான். மசிக் கூட்டின் வாயைப் பிடித்தேன். வாய் என் கையோடு வந்துவிட்டது. இதென்னடி அதிசயம்! நன்றாய்த்தான் இருக்கிறது" என்று கட கட வென்று கொட்ட ஆரம்பித்தாள் சின்னம்மா.

நான் அழுதேன். சின்னம்மா எனக்கு மேல் அழுதாள். தகப்பனருக்கு மசிக்கூடு போனது பெரிய காரியமல்ல, எங்களைச் சமாதானப் படுத்துவது பெரும்பாடாய்ப் போய் விட்டது. வெகு நாளைக்கு முன்னே, 'கல்பலதா அல்லது வெளிவராத ரகசியம்' என்று நான் ஒரு நாவல் படித்

திருக்கிறேன். சுமார் நானூறு பக்கங்களுக்கு மேல் இருக்கும். அத்தியாயத்துக்கு அத்தியாயம், ஏதோ ஒரு பெரிய ரகசியத்தைப் பற்றிப் பிரஸ்தாப மிருந்தது. ரகசியத்தை யறிய, வெகு ஆவலோடு கடைசிவரையில் படித்தேன். கடைசிப் பக்கத்தில், என்ன இருந்தது தெரியுமோ? "அந்த ரகசியம் வெளிவராத ரகசியமாகப் போய்விட்டது" என்று தான் எழுதியிருந்தது. இதே மாதிரியாக, அந்த மசிக் கூடு உடைந்த ரகசியம், என் தகப்பனர் சம்பந்தப்பட்ட மட்டில், வெளிவராத ரகசியமாகவே போய் விட்டது. (ஆகையால், பிள்ளைகளே! நீங்கள் பொய் சொல்லாதீர்கள்.)

பச்சை மசியைப் பற்றிச் சொல்ல வந்தவன், நீல மசிக் கூட்டைப் பற்றி இவ்வளவு தூரம் ஏன் எழுதினேன் என்ருல், பச்சை என்பது தான் என்ன என்று நினைக்கிறீர்கள்? நீலமும் மஞ்சளும் சேர்ந்தால், பச்சை. இவ்வளவு தானே! தவிர வர்ணத்தின் ரகசியத்தையே கவனியுங்களேன். வர்ணம் என்பது, கண்ணின் ஜாலம் என்கிருர்கள் விஞ்ஞானிகள். உங்கள் உடம்பிலே ஒரு கல் மோதுகிறது. வலிக்கிறது. 'கல்லிலே வலி இருக்கிறது' என்று சொல்லுவீர்கள்? வலி உங்கள் புலனுணர்ச்சி. வர்ணமும் இதேமாதிரி தானம். வர்ணக் குருடா யிருப்பவர்களுக்கு, சில வர்ணங்கள் தெரிவதே யில்லை; அல்லது மாறுபாடாய்த் தெரிகின்றன. ஆகையால், வர்ணத்தை உணர நமது கண்ணும் ஒத்துழைக்க வேண்டி யிருக்கிறது.

வர்ணங்கள், பிரபஞ்ச விசித்திரங்களில் ஒன்ருகும். அவை பல வித ஜாலங்களைப் புரிகின்றன. கலைஞர்கள் அவைகளைக் கொண்டு அபூர்வ சிருஷ்டிகளைப் புரிகிருர்கள். விஞ்ஞானிகள், அவைகளை ஆராய்ந்து, ஆச்சரியமான சித்தாந்தங்களை வகுக்கிருர்கள். சாமான்ய மனிதர்கள், பிரபஞ்ச அழகுகளை வர்ணங்களின் மூலமே பெரும்பாலும் அறிந்து அனுபவிக்கிறேம். குழந்தைகளுக்கும் கூட, வர்ணங்களைக் கண்டால் பேரானந்தம்.

இப்படி அதிசய சக்தி வாய்ந்த வர்ணங்களிலே, பச்சையைக் கண்டால் சிலருக்கு ஒரு தனி மோகம் ஏற்படுகிறது. யாரோ ஒரு மனிதர், வெகு தூரத்திலே பச்சை நிறத்தைக் கண்டால், அவர் உள்ளம் பிரமாதமான பரபரப்பை அடைந்துவிடுமாம். ஏன்? அது ஓர் அதிசுந்தரக் கன்னிகையாய்த் தான் இருக்க வேண்டும் என்று அவர் கற்பனை செய்துகொண்டு விடுவாராம். உலக முழுவதும் பசுமை நிறைந்திருக்கிறது. செடி கொடிகளெல்லாம் பசுமை. பசுமையே வாழ்வு என்று எனக்குத் தோன்றுகிறது. இதெல்லாம் எப்படியாயினும் சரி; பச்சை மசியில் எனக்கு ஒரு தனி விருப்பம். நான் எப்போதும் பச்சை மசியால் தான் எழுதுவது வழக்கம். அதனல் எழுதினுல், அந்தக் கட்டுரைகளும் கதைகளுமே தனி ஜோர்தான். இந்தக் கட்டுரை எப்படி யிருக்கிறது என்று நினைக்கிறீர்கள்? ஜோராய்த்தானே இருக்கிறது? உண்மையைச் சொல்லட்டுமா? இல்லை, இதை நான் பச்சை மசியால் எழுதவில்லை. "ஜோர் தான். ஆனுலும், ஒரு மாதிரியாய் இருக்கிறது" என்று இப்போது சொல்கிறீர்கள். ஆமாம், விஷயம் அதுதான்: மசிக் கோளாறு.

✲

புதிய வருமான வரி நமூனு

சர்க்காருக்கு வருமான வரிக் கணக்கு அனுப்புவது சம்பந்தமாக, வரி செலுத்துவோருக்குச் சௌகரியமான புதிய சுலபமான வருமான வரி நமூனு ஒன்றைச் சர்க்கார் தயாரிக்கப் போவதாக, ஆதாரமில்லாத செய்தி ஒன்று கூறுகிறது. அந்த நமூனு இதுதான்:

(1) இந்த வருஷம் உமது வருமானம் எவ்வளவு? (2) உமது செலவு எவ்வளவு? (3) மிச்சம் எவ்வளவு? (4) அதை உடனே அனுப்பிவிடவும்.

நீங்கள் சாப்பிடும் ஒவ்வொரு பதார்த்தமும் ஊக்கம் அளிக்கின்றனவா ?

ஒவ்வொரு ஸ்திரீயும் எந்தெந்த பதார்த்தங்கள் ஊக்கமளிக்கக் கூடியவை என்பதை அறிந்திருக்கவேண்டும். டால்டா "குக் புக்" (ஆங்கிலத்தில் மட்டும்) உணவுப் பொருள்களின் தராதரத்தைப் பற்றியும், 150 இந்திய ஆகாரத் திட்டங்களைப் பற்றியும் விவரித்திருக்கிறது. Dept. D160 P.O. Box No. 353. Bombay என்ற விலாசத்திற்கு 4 அணு ஸ்டாம்பு அனுப்புங்கள்.

ஆம்; அளிக்கின்றன. உணவு ஊக்கமளிக்கிறது! ஆனால் எல்லா உணவும் வேண்டிய அளவிற்கு ஊக்கமளிப்பதில்லை சில அதிகமும், சில குறைவாகவும் அளிக்கின்றன. இங்குதான் ஆரோக்கியத்திற்கு அபாயமிருக்கிறது நமக்குப் பிரியமான சில உணவுகளில் ஊக்கமளிக்கக்கூடிய சக்தி குறைவாக இருப்பதால் இவ்வுணவுகளிலிருந்து ஊக்கத்தை எதிர்பார்க்கும் ஜனங்கள் விளையாட்டிலோ, வேலையிலோ வெகு சீக்கிரம் களைப்படைகிறார்கள். எல்லா உணவுகளையும் அதிக சக்தி கொடுக்கக் கூடியவைகளாக செய்யலாம்—வைடமன் நிறைந்த டால்டாவினால் சமையல் செய்வதால் இயற்கை தரக்கூடிய சக்திப்பொருளையும் அநேக உணவுகளிலில்லாத சத்துக்களையும் டால்டா தருகிறது. நீங்கள் சாப்பிடும் உணவுகளுக்கு அதிக ஊக்கத்தையும் கொடுக்கிறது.

வைடமின் நிறைந்த **டால்டா** *ஊக்கமளிக்கிறது.*

THE HINDUSTAN VANASPATI MANUFACTURING CO., LTD.

HVM. 35-50-40 TM.

வயதான பிறகு வேலையிலிருந்து விலக்கப்பட்டிருக்கும் இன்னும் சிறிதுகாலம் வேலை செய்து சம்பாதிக்க விரும்பும் அனேகர், அகத்திலும் முகத்திலும் அச்சங்கொண்டு அடியிற் கண்டபடியே சொல்ல நேரிடுகிறது:—

"ஐயா, நான் பார்வைக்கு எவ்வளவு வயதானவனாய்த் தோற்றுகிறேனோ அவ்வளவு வயதானவனல்லன்"

ஆனால் அவர் தாம் எவ்வளவு வயதானவராயிருக்கிறாரோ அவ்வளவு வயதானவராகவும், இன்னும் அதிக வயதானவராகவும் இருப்பதுபோல் கருதுகிறார். அவர் அப்படி நினைப்பதற்குக் காரணம் அவருக்கு உறுதியான சாய்மானம் இல்லை—சேர்த்துவைத்த பணமுமில்லை எந்த வேலையையேனும் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஒருவர் எதைக் கொடுப்பதாகச் சொன்னாலும் அவர் "வேண்டாம்" என்று தைரியமாய்ச் சொல்ல முடியாது. அவர் ஏக்கத்தின் அர்த்தத்தையே அறிந்தவர். ஆனால் நீர் இப்படியிருக்கவேண்டியதில்லை. நீர் இப்போதே திட்டம் வகுப்பீராயின், கௌரவமாய் வேலையிலிருந்து ஓய்வு பெற்று, சுகத்தோடும் மன அமைதியோடும் முதுமைப் பருவத்தைக் கழிப்பதற்குப் போதுமான பணம் பெறலாம்.

புத்திசாலிகள் வருங்காலத்தை நோக்கி, எஞ்சுகின்ற வருவாயை இப்போது நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகளில் சேர்த்து வைக்கிறார்கள். அவர்கள் வருங்காலத்தைத் தைரியமாய் எதிர்நோக்கி நிற்கிறார்கள். நீரும் அப்படியே செய்யலாம்.

நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகள்

சிறு சேமிப்புக்காரர்கள் 5 ரூபாய்க்கு ஒரு ஸெர்டிபிகேட்டையாவது, ஒன்று அணா, 8 அணா, 1 ரூபாய் மதிப்புள்ள ஸேவிங்ஸ் ஸ்டாம்புகளையாவது வாங்கலாம். ஸெர்டிபிகேட்டுகளும் ஸ்டாம்புகளும் கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட அதிகாரம் பெற்ற யாதொரு ஏஜென்டினிடமாவது, ஸேவிங்ஸ் பீரோ, தபால் ஆபீஸுகள் ஆகிய இந்த இடங்களிலாவது கிடைக்கும்.

★ பிரதி 10 ரூபாயும் 12 வருஷங்களுக்குப் பிறகு 15 ரூபாய் ஆகிறது.

★ தனிவட்டி 4½ சத வீதம். இதற்கு இன்கம் டாக்ஸ் கிடையாது.

★ மூன்று வருஷங்களுக்குப் பிறகு (5 ரூபாய் ஸெர்டிபிகேட் விஷயத்தில் 18 மாதங்களுக்குப் பிறகு) அதனையும் சேர்ந்து வந்த வட்டியுடன் பணமாக மாற்றிக்கொள்ளலாம்.

சுபேதார் சாமி

மஞ்சேரி எஸ். ஈச்வரன்

முன்னிக்கவேண்டும். என்னை நானே உங்களுக்கு அறிமுகம் செய்து கொள்ளுகிறேன்: நான் சுபேதார் ரத்னசாமி. சுபேதார் சாமி என்று சுருக்கமாகவும் அழைப்பார்கள். என் யூனிபாரம் உடுப்புக் கிழிந்து அழுக்காய் இருக்கும். என் பூட்ஸ் சேறு ஒட்டிக்கொண்டிருக்கும். என் குல்லாய் நசுங்கி, கோணலாய் என் தலையில் இருக்கும். என் இடது பொட்டில் ரத்தம் வந்து கட்டிதட்டிய காயம் ஒன்றிருக்கும். என்றாலும், என்னை நீங்கள் ஊடுருவிப் பார்க்கலாம். உண்மையாகவே தான். என் மார்பிலே உள்ள ஓர் ஓட்டைவழியாகப் பார்க்கலாம். ஆம், நான் சுபேதார் சாமி தான்.

ஒரு காலத்தில் வெறும் சாமி அல்லது ரத்னசாமியாக நான் இருந்தேன். நண்பர்கள் பற்பல நவரத்தினங்களின் பெயர்களையும் சொல்லி என்னைக் கூப்பிட்டுப் பரிகாசம் செய்வதுமுண்டு. நான் செங்கற்பட்டு ஜில்லா, காஞ்சீவரம் தாலுக்கா, நத்தப்பேட்டையிலே இருந்தேன். சப் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் என் தகப்பனர் ஒரு பியூன். சுண்டெலி மாதிரி மனிதர். தமது அல்ப உத்தியோகத்தைக் கொண்டு பெருமைப் பட்டுக் கொண்டிருந்தார். அவருடைய ஐந்து குழந்தைகளில் நானே கடைக் குட்டி. எனக்கு மூத்த நாலுபேரும் பெண்கள்.

நான் சின்னப் பையனாய் இருக்கையிலேயே, ஆடு மாடு ஓட்டும் சிறுவர்களோடு மேய்ச்சல் தரைக்குச் சென்று திரிவதில் எனக்குப் பிரியம். பள்ளிக்கூடத்தை, பரிபூர்ணமாய் வெறுத்தேன். என்றாலும், என் தாயார் எப்படியோ மிட்டாய் முதலியவைகளை லஞ்சம் கொடுத்து, என்னைத் தாஜா செய்வாள். அப்பா ஒவ்வொரு சமயம் மிரட்டுவார். அது நிஜமான மிரட்டலல்ல. அவருக்கு அது ஒரு சம்பிரதாயம். இது எனக்குத் தெரியும் என்று அவருக்கும் தெரியும். அவர் தான் ஒரு சுண்டெலியாயிற்றே! அம்மாவின் தாஜாவாலும் அப்பாவின் மிரட்டலாலும் ஏதோ ஒருவாருக, ஹைஸ்கூல் வகுப்பை நான் எட்டிவிட்டேன். ஆனால், ஒவ்வொரு வகுப்பிலும் இரண்டிரண்டு வருஷங்கள் உட்கார்ந்து விட்டுத்தான் இப்படி வந்து சேர்ந்தேன். ஆனால், சகல விளையாட்டுக்களிலும் நான்தான் முதலாவதாய் நிற்பேன். பள்ளிக்கூடத்துக்குப் போகாத வேளைகளில், ஒரு கோஷ்டி சிறுவர்களுடன் குஸ்தி போடுவேன்; குத்துச் சண்டை நடத்துவேன். அந்தச் சிறுவர்களும் என்னைப் போலவே பரிபூர்ணமாய்ப் பள்ளிக்கூடத்தை வெறுத்தவர்கள் தான். ஆனால், என் மாதிரி யில்லாமல், தங்கள் இஷ்டப்படி திரியும் சுதந்தரம் அவர்களுக்கிருந்தது. நான் வளர்ந்து பெரியவனபோது, என்னை அவர்கள் 'பயில்வான்' என்று அழைத்தார்கள்.

என் உடம்பு நல்ல கட்டுமஸ்தாக இருந்தது. ஆகையால், கான்ஸ்டேபிள் உத்தியோகம் ஏற்று, என் தகப்பனரைவிட மேலாக மாஜிஸ்திரேட் கச்சேரிக்குச் சேவை புரிய வேண்டுமென்று எனக்கு மிகுந்த ஆசை.

இருபத்தொரு வயதில் எனக்குக் கலியாணம் ஆயிற்று. கலியாணம் எனக்காக நடக்கவில்லை. என் அம்மாவுக்கு உதவிசெய்ய ஆள் தேவை என்

யுத்தத்திலே மடிந்த எத்தனை இந்திய வீரர்களுக்கு, செத்த பிறகு அதியுன்னதமான 'விக்டோரியா க்ராஸ்' வீரப் பதக்கம் கிடைத்துள்ளது! அந்த வீரர்களிலே ஒருவர் சுபேதார் சாமி. அவர் தமது கதையைத் தாமே வெகு உணர்ச்சியோடு சொல்லுகிறர்.

பதற் காகவே நடந்தது. அவளுக்கோ வயதாகிவிட்டது. என் சகோதரிகள் எல்லாரும் அவளவள் புருஷன் வீட்டுக்குப் போய் விட்டார்கள். என் உள்ளம் இன்னமும் குஸ்தியிலும் குத்துச் சண்டையிலுமே லயித்திருந்தது. என் தந்தை மட்டில் முணுமுணுத்துக் கொண்டேயிருப்பார். தம்மைப் பின்பற்றி, நானும் ஓர் அற்ப உத்தியோகம் பெற்றுப் பெருமையடைய வேண்டும் என்பது அவர் ஆசை. என்றாலும், ஜீவனத்துக்குச் சம்பாதிக்கவேண்டுமே என்ற கவலை எனக்கு உண்டாகவில்லை.

இப்படியிருக்கையில், ஒரு நாள் திடீரென்று தகப்பனாரின் முணுமுணுப்பு ரொம்பவும் வலுத்துவிட்டது. தாயாரின் முணுமுணுப்பும் அதோடு சேர்ந்து கொண்டது. நானோ கலியாணமானவன். கூடிய சீக்கிரம் குழந்தை ஒன்று பிறக்கப் போகிறது. ஏன், வருஷங்கள் செல்லச் செல்ல, பல குழந்தைகள் பிறக்கப் போகின்றன. என் பொறுப்பை நான் அறியவேண்டாமா? இனியும் சிறுபிள்ளைத் தனமாய் நான் இருக்கலாமா?

ஐரோப்பாவில் யுத்தம் மூண்டது. ஒருநாள் காலையில் சுபவேளையில்—இப்போது அதை நான் அப்படி நினைக்கவில்லை—உள்ளூரில் ராணுவத்துக்கு ஆள் சேர்க்கும் ஆபீசுக்குள் நான் நுழைந்தேன். இதன் பலனை வீட்டிலே என்ன நடந்தது என்பதை நான் விவரமாய்ச் சொல்லத் தேவையில்லை. அந்தச் சம்பவம், அல்லது நிகழ்ச்சி, அல்லது என் வாழ்க்கையிலே முக்கியமான ஒரு கட்டம் என்று எப்படி வேண்டுமானாலும் நீங்கள் அதைச் சொல்லிக்கொள்ளுங்கள். சகஜமாக என்னென்ன விஷயங்கள் எல்லா வீடுகளிலும் நிகழுமோ அத்தனையும் என் வீட்டிலும்தான் அப்போது நிகழ்ந்தன - தாய் கண்ணீர் விட்டாள்; தந்தை கண்ணீர் விட்டார்; மனைவியும் கண்ணீர் விட்டாள். இம்மாதிரி சந்தர்ப்பம் நீங்கள் அறியாததா? இதிலே எழும் கண்ணீரையும் புலம்பலையும் பற்றி நான் உங்களுக்குச் சொல்லவா வேண்டும்? அப்போது பாஞ்சாலி ஐந்துமாச கர்ப்பவதி. கடைசி முறையாக அவள் என்னை நோக்கி அன்பும், ஆத்திரமும், சோர்வும் பொங்கப் பார்த்த பார்வை, ஒரு நாளும் என் கண்ணை விட்டகலாது. ஒரு கணம் நானே மனமிளகி விட்டேன்; அவசரப்பட்டு இதில் இறங்கி விட்டோமே என்று வருத்தமும் அடைந்தேன். ஆனால், காரியம் மிஞ்சிப் போய்விட்டது. இனி மனம் இளகியும் வருந்தியும் பயனில்லை. பாஞ்சாலி அப்போது ஐந்து மாத கர்ப்பவதி; பெற்றோர் பார்த்த பார்வை, என்னை இதைப்பற்றி 'அட நன்றியற்றவனே!' என்று பழிப்பதுபோல் இருந்தது.

என் அங்கமெல்லாம் நொந்து காய்ச்சலடிக்கும் வரை, நான் 'டிரில்' செய்தேன்; முழங்கால்சில் புரண்டு போகுமளவும் 'மார்ச்' செய்தேன். பின்பு, என்னைக் கப்பலில் ஏற்றி எங்கேயோ அனுப்பி விட்டார்கள். எங்கே என்று எனக்குத் தெரியாது. கண்ணையும் காதையும் அகலத் திறந்து வைத்துக் கொண்டேன். மெல்ல மெல்லப் போகுமிடங்களைக் கவனித்துக் கொண்டேன். இடத்துக்கிடம் என்னை மாற்றிக்கொண்டேயிருந்தார்கள். இராக், பெர்ஷியா, ஸிரியா, லெபனன் ஆகிய இடங்களுக்கெல்லாம் நான் போனேன். வீரச் செயல்கள் புரிந்தேன். 1940-ஆம் வருஷ மத்தியில், போர்க்களத்திலே என் வீரத்தையும் தீரத்தையும் காப்டனும் கமாண்டர்-இன்-சீபும் ஒருங்கே புகழ்ந்தார்கள். புகழ்பெற்ற இரண்டு இந்திய டிவிஷன்களில் ஒன்றான நாலாவது டிவிஷனில் சுபேதார் பதவிக்கு உயர்ந்துவிட்டேன்.

மேற்காப்பிரிக்கப் பாலைவனத் தரிசிலே, மாரிகாலம் மிகவும் கடுமையாயிருந்தது. என்றாலும், அற்புதமாய்ச் சகல கஷ்டங்களையும் நாங்கள் பொறுத்துக் கொண்டோம். கீர்த்திபெற்ற சென்னை எஞ்சினீரிங் படையினர், ரஸ்தாக்களும் ரயில் பாதைகளும் அமைத்தார்கள்; முன்னேறிச் செல்லும் படைகளுக்கு ஜல சப்ளைசெய்ய, தண்ணீர்க் குழாய்

களும் போட்டார்கள். தொடர்ந்து அற்புதமாய் மேலும் மேலும் நாம் தாக்கிய கடைசித் தாக்குதல் அது. அதிலே, ஐந்தாவது டிவிஷனுக்கு ஓய்வு கொடுத்துவிட்டு, நாங்கள் போர் முனையில் புகுந்தோம். ஜெர்மன் தளபதி ரோமல் எங்களுக்கு முன்னே போட்டிருந்த எஃகுச் சுவரைப் பிறிச் சென்று விட்டோம். மந்திர சக்தி வாய்ந்ததோ என்று தோன்றிய அவரது வீரத்தையும், இரும்பின் உரம் படைத்த படைகளையும், அடியோடு அழித்துவிட்டு, எகிப்தைக் கடந்து, ரெனீக்காஸைக் கடந்து, டிரிபாலிட்டாவுக்குள்ளும் புகுந்து விட்டோம்.

இந்த முன்னேற்றப் பாய்ச்சலில் நான் இருந்தேன். எதிரியின் மாரெத் அணி வகுப்பைத் தகர்ப்பது மிகவும் கடினமான காரியமாயிருந்தது. நான் வில்லிலிருந்து புறப்பட்ட அம்பைப் போல் வேகமாய்ப் பாய்ந்தேன். பின்னேயிருந்து என் தோழர்கள் என்னவோ கத்தியதைக் கேட்டேன். அவர்களில் சிலர் என்னைப் பின்னே பிடித்தும் இழுத்தார்கள். நான் மகா முரட்டுத்தனமாய்ப் பாய்வதாகவும், இந்தத் தடவை எனக்குக் கட்டாயம் ஆபத்து வந்துதான் தீருமென்றும் அவர்கள் கத்தினார்கள். நான் முரட்டுத்தனமா யிருக்கலாம். ஆனால், என் ரத்தம் கொதித்தது. நான் முன்னே குதித்தபோது, என் கபாலத்தை ஏதோ உழுது சென்றது. என் மார்பை ஏதோ ஊடுருவித் தகித்துச் சென்றது. நான் செத்துவிட்டேன் என்று அறிந்துகொண்டேன். நான் விழுந்த இடத்திலேயே அழுகி நாற வேண்டியது தான். என் முரட்டுத்தனம் என் உயிரைக் கொள்ளை கொண்டுவிட்டது என்று என் நண்பர்களெல்லாம் பேசிக்கொண்டார்கள். வெகு சீக்கிரத்திலே, செத்தவர்களும் சாகிறவர்களுமான எங்கள் தலைக்கு மேலே கழுகுகள் வந்து வட்டமிடத் தொடங்கின...

ஆனால், என் உள்ளத்தினுள்ளே, வீட்டுக்குத் திரும்ப நான் சித்தம் கொண்டேன். பாஞ்சாலியின் அன்பும் ஆத்திரமும் சோர்வும் கொண்ட அந்தக் கடைசிப் பார்வை என் மனதைச் சுற்றிக் கொண்டேயிருந்தது. என் நன்றியில்லாத் தன்மைக்காகப் பழித்த என் பெற்றோரின் அந்தப் பார்வை, அவர்களது அன்பையும் துக்கத்தையும் தளைகளாய்க் கொண்டு என்னை இழுத்தது. நான் அவர்களை ஏமாற்றலாகாது. நான் வீட்டுக்குத் திரும்பினேன். ஏரோப்பிளேன் இல்லை; கடலில் நீஞ்சும் கப்பல் இல்லை; நீராவி விசைக்கும் ரயில் இல்லை; வெறும் கட்டை வண்டி கூட இல்லை, என்னை வீட்டுக்குச் சுமந்து வந்தது. எண்ணத்தைப்போல் வேகமாய், ஆப்பிரிக்காவிலிருந்து இந்தியாவுக்கு நான் தாவி வந்தேன். என் உற்றார் உறமுறையாருக்குப் பேராச்சர்யமூட்டப் போகிறேன் என்ற எண்ணத்தினால் ஏற்பட்ட ஆனந்தம் குமிழிவிட,நான் வந்து சேர்ந்தேன். இந்தத் தேகச் சுமையை இறக்கிவிட்ட பின்பு, எண்ணத்தைப்போல் நினைத்த இடமெல்லாம் செல்ல இயல்வது, அதிசயமல்லவா? இறக்கைகளால் பறந்து செல்ல வேண்டியதில்லை; மெல்ல மெல்லக் கடக்கவேண்டிய கஷ்டமான பாதை எதுவுமில்லை. நினைத்த இடத்திலே, நினைத்த கணத்தில் நாம் இருந்துவிடுகிறோம். அழியும் இந்த உடம்பைக் கழற்றி யெறிந்த உடனே, இது சாத்தியமாவது ஓர் அற்புதம் அல்லவா ?

நான் என் வீட்டெதிரே நின்றேன். டிசம்பர் மாசம் ஒருநாள் மாலை. சொர்ணம்போல ஜொலித்துக்கொண்டு சூரியன் மலைவாயில் விழும் நேரம். காற்றுச் சிலு சிலுத்தது. தூரத்திலே கண கண என்று மணியோசை கேட்டது. பசுக்கள் வீடு வந்து கொண்டிருக்கின்றன. நான் பிறந்த என் கிராமம், எனக்குப் பலநாள் பரிச்சயமான காட்சிகளுடன் கூடி, எவ்வளவு அழகாயிருக்கிறது! இரண்டொரு வருஷங்களுக்கு முன்பு நான் அதைவிட்டுச் சென்றபோது, அது எப்படியிருந்ததோ அப்படியேதான் இன்னும் இருக்கிறது! வாயிற்படியிலே அந்த மூதிய வேப்பமரம் முன்போலவே பசுமையாய், தெருவிலே நிழல் வீசிக்கொண்டு நிற்கிறது. தெரு

வில் நடமாடும் ஜனங்கள் அந்த நிழலிலே சற்றுத் தங்கி இளைப்பாறுவது வழக்கம்.

என் வாயிற்படிக் கதவு தாழிடப்பட்டிருந்தது. என் தந்தை கோர்ட்டிலிருந்து இன்னும் திரும்பி வரவில்லையென்று இது காட்டியது. பட்டையான மரச்சட்டங்களுக் கிடையிலே கையை நுழைத்து, வெளியிலிருந்தபடியே தாழ்ப்பாளைத் தள்ளிக் கதவைத் திறந்தேன். இது நான் சிறு வயது முதலே பழகியிருந்த ஒரு தந்திரம். பின்பு, என் வீட்டுக்குள்ளே புகுந்தேன். வீட்டு முன்கதவு ஒரே யடியாய்த் திறந்து கிடந்தது. கூடத்தின் ஒரு மூலையிலே என் தாய் உட்கார்ந்துகொண்டு என் தந்தைக்காகக் காத்திருப்பது, வழக்கம். அந்த மூலையைப் பார்த்தேன். அங்கே அவளைக் காணோம். ஒளிந்த மனசுபோல் ஓர் உணர்ச்சி அந்த இடத்திலே நிலவிய தாய்த் தோன்றியது. சமையலறைப் பக்கமாய்ச் சென்று, "அம்மா!" என்று கூப்பிட்டேன்.

அவள் அடுப்பின் அருகே உட்கார்ந்து குனிந்து ஊதி, ஜ்வாலை மூட்டிக்கொண் டிருந்தாள். சமையலறை நிலைப்படியில் ஒரு காலை வைத்துக்கொண்டு, "அம்மா!" என்று நான் மறுபடியும் கூப்பிட்டேன்.

அவள் திரும்பிப் பார்க்கவில்லை. எங்கேயோ ஞாபகமாய் அவள் உட்கார்ந்திருந்தாள். சற்று நேரத்தில் தானுக அவள் திரும்பியபோது, நான் திடுக்கிட்டுப் போனேன். அவள் நெற்றியிலே குங்குமத்தைக் காணோம்; கன்னத்தில் பசேல் என்ற மஞ்சளின் மெருகைக் காணோம். என்னை அவள் நேரே பார்த்தாள். ஆயினும், என்னை அவள் கண்டுகொண்டதாகத் துளிக் கூட அடையாளம் காணோம். அவள் எங்கேயோ வெறிப்புடன் பார்த்தாள். தந்தை இனிமேல் கோர்ட்டிலிருந்து வீட்டுக்கு வரமாட்டார். ஐயோ! மாலையில் அவர் வருகைக்காகக் காத்திருப்பதை அவள் கைவிட்டு எத்தனை காலம் ஆகிறதோ! என் உள்ளம் கடும் வேதனையால் துடித்தது. என் நெஞ்சை அடைத்துக் கொண்டது. அதைச் சமாளித்துக்கொண்டு, நான் அப்பால் சென்று விட்டேன். நான் திடீரென்று வீட்டுக்குவந்ததால், அதை அவளால் ஒரு வேளை நம்ப முடியவில்லையோ என்னவோ!

நான் திரும்பிவிட்டேன். புறக்கடைத் தாழ்வாரத்தில் ஒரு தூணிலே சாய்ந்துகொண்டு, என் மனைவி நின்றுகொண் டிருப்பதைக் கண்டேன். என் தாயைப் போலவே அவளும்தான், பற்றற்று எங்கோ ஞாபகமாயிருப்பது போல் தோன்றினாள். ஒரு குழந்தை மண்டியிட்டுத் தவழ்ந்துகொண்டிருந்தது. தவழ்ந்து தடுமாறிக் குப்புற விழுந்தது. சில வருஷங்களுக்கு முன்னே நான் வீட்டைவிட்டு யுத்தத்துக்குச் சென்றபோது, வீட்டிலே இந்தக் குழந்தை இல்லை. நான் என் தந்தையை இழந்துவிட்டேன். ஆனால், இப்போது நான் ஒரு தந்தை ஆகிவிட்டேன். என் அருமைக் குழந்தை! அதை என் கையிலே தூக்கிக் கொஞ்ச எனக்கு எவ்வளவு ஆசையா யிருந்தது!

"பாஞ்சாலி!" என்று, அவளை ஆசையோடு நெருங்கி அவள் தோள் மீது கையை வைத்துக் கொண்டே, நான் கூப்பிட்டேன்.

அவள் பதிலளிக்கவில்லை. நான் அவள் தோளைத் தொட்டதை அவள் உணர்ந்ததாகவே தோன்றவில்லை. ஆனால், இத்தனை நேரமும் அவள் என்னைப் பார்த்துக் கொண்டேதான் இருக்கிறாள்!

"பாஞ்சாலி!" என்று நான் மறுபடியும் கூப்பிட்டேன்: "என்னை மறுபடியும் வீட்டிலே காண, உனக்குச் சந்தோஷமா யில்லையா? ஒரே ஒரு வார்த்தை சொல், என் தங்கமே! நான் அந்த மாதிரி போனதற்கு என்னை மன்னி! குழந்தையின் முகம் பார்த்தாவது, என்னிடம் பேசு. குழந்தை எனக்கு நீ வைத்திருக்கும் இணையற்ற பரிசு அல்லவா?" என்று மேலும் சொன்னேன்.

அவள் பதில் சொல்லவில்லை. அவள் முகத்திலே ஒரு துளித் தசை கூட ஆடவில்லை. அவள் கண்களில்

என்னைக் கண்டு வியப்படைந்த ஒரு சிறு கண்ணிமைப்பு மில்லை. அந்தப் பாப்பா தரையிலே குப்புற விழுந்து தளிர் போன்ற உதட்டிலே அடிபட்டு வலி பொறுக்காமல் சின்னக் குரலில் 'வீர்' என்று கத்தியவுடனே, அவள் அதைக் கையிலே தூக்கிக்கொண்டு, கொஞ்சிச் சமாதானம் செய்தபோது, அது ஒரு பெண் குழந்தை யெனக் கண்டேன்.

என் சொந்த வீட்டிலேயே நான் ஓர் அன்னியனாகிவிட்டேனே! என்னைத் தாய் மறுதலித்து விட்டாள்; மனைவியும் மறுதலித்து விட்டாள். இறக்கும் போது, தந்தையும் ஒரு வேளை மறுதலித்திருப்பாரோ என்னவோ! ஒரு மகனுக்கு மிக நெருங்கிய உறவினர்களிடமிருந்து எத்தகைய வரவேற்பு! துளியும் அடையாளமே கண்டுகொள்ளாமல் உதாசீனம் அல்லவா செய்கிறார்கள்! மன்னனுக்குத் தொண்டு புரிந்து ஏகாதிபத்தியத்தைக் காப்பாற்றிய ஒரு வீரனுக்கு எத்தகைய வரவேற்பு! சமாதிக்குழியிலே நிலவுமே, அந்த மௌனமன்றோ சாதிக்கிறார்கள்!

என் தாய் என் மனைவியைக் கூப்பிடும் குரல் எனக்குக் கேட்டது. மனைவி சமைய லறைக்குள புகுந்தாள். வெளியே தாழ்வாரத்தில் நான் மட்டும் தன்னந் தனியே இருந்தேன். அவர்கள் இருவரும் பேசும் பேச்சுக் குரல் மங்கலாக என் காதில் விழுந்தது. எல்லாம் வெறுத்து மனம் சோர்ந்து போயிருந்த எனக்கு, அவர்கள் பேச்சைக் கேட்க ஆசையில்லை. கூடிய சீக்கிரம் அவர்கள் ஏதோ நீண்ட பிரயாணம் செய்யப் போவதாய்ச் சொல்லிக் கொண்டது மாத்திரம் என் செவியில் விழுந்தது. அவர்கள் குரலிலே ஒரு பெருமை தொனித்தது. ஆனால், அதிலே ஒரு பெரும் துக்கமும் கலந்திருந்தது. நாட்டின் மிக உன்னதமான அதிகாரியிடமிருந்து அவர்களுக்குக் கிடைத் திருக்கும் ஏதோ ஒரு கடிதத்தைப் பற்றி அவர்கள் பிரஸ்தாபித்துக் கொண்டார்கள்.

இரண்டு நாட்களுக்குப் பின்பு, அந்த 'விசேஷமான' பிரயாணத்தைச் செய்ய, அவர்கள் புறப்பட்டார்கள். 'பாஞ்சாலி தன் சகோதரனுக்குச் செய்தி சொல்லி அனுப்புவாள். அவன் இவர்களுக்குப் புருஷத் துணையாக இவர்களோடு செல்லுவான்' என்று நான் நினைத்தேன். ஆனால், அவள் அப்படிச் சொல்லி அனுப்பவில்லை. இந்த இரண்டு ஸ்திரீகளும் எங்கேயோ ஆகாயத்திலிருந்து குதித்தவர்கள் போல், சதா தங்களைப் பற்றியே ஞாபகம் கொண்டவர்களாய், நடந்துகொண்டார்கள். திடீரென்று ஏதோ பெருமை தங்களுக்கு ஏற்பட்டு விட்டதுபோல், அவர்கள் தோன்றினார்கள். நான் மௌனமாக அவர்களைப் பின் தொடர்ந்தேன் - பஸ்ஸிலும் ரயிலிலும் தொடர்ந்தேன். என் பிரசன்னத்தைக் கண்டு யாரும் வியப்போ கலவரமோ அடைந்ததாய்த் தெரியவில்லை. இந்திய சர்க்காரின் தலை நகரான புது டில்லிக்குத் தான் அவர்கள் போய்ச் சேர்ந்தார்கள்.

அங்கே ராணுவ சம்பந்தமாக மிக முக்கியமான ஒரு சடங்கு நடக்கும் நாள் வந்து சேர்ந்தது. வைசிராய் மாளிகையின் முன் உள்ள விஸ்தாரமான பசும்புல் மைதானத்தில், பிரமாதமான காட்சிகள் நடந்தன. பாண்டு வாத்தியம் முழங்கியது. அது நின்றதும், பெரிய பெரிய ராணுவ அதிகாரிகளும் ஸிவில் அதிகாரிகளும், சீமாட்டிகளோடு வந்து கூடினார்கள். அதன்பின், வைசிராய் வந்தார். அவருக்கு 'ஸல்யூட்' மரியாதை நடந்தது. அடுத்த நிமிஷம் திடீரென்று தீவிரமாய் எனக்கு என் ஞாபகம் மூண்டது. ஏனெனில், ஆழ்ந்து நெருங்கிய அன்போடு லவுட்-ஸ்பீக்கர் என் பெயரை உச்சரித்தது. மத்தியக் கிழக்கு, சமீபக் கிழக்கு நாடுகளில் நேச நாட்டினர் நடத்திய போர்களில் சுபேதார் சாமி புரிந்த வீர தீர சேவைகளை வைசிராய் எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தார். நான் பரவசமடைந்து போனேன். வைசிராய் தமது சுருக்கமான புகழுரையை முடிக்கையில், மாரத் அணிவகுப்பைத் தகர்த்ததுபற்றி வர்ணித்து வியந்து பிரஸ்தாபித்தார். அந்தப் பாய்ச்சலின் முன்னணிப் படையிலே

யிருந்து சுபேதார் சாமி எவ்வாறு தன் கடமைக்கு மீறிய வீரச்செயலைப் புரிந்து உயிரையே துறந்தான் என் பதையும் அவர் எடுத்துக் கூறினர். அதற்காக இன்று அவனுக்கு, ஒவ்வொரு போர்வீரனும் பேராவல் கொள்ளக் கூடிய கிடைத்தற் கரிய அதியுன்னத வீரப்பதக்கமான 'விக்டோரியா கிராஸ்' அளிக்கப் படுகிறது என்று அவர் சொன்னர். அப்போது எனக்கு அவர் அருகே பாய்ந்தோடி, "இதோ இருக்கிறேன், பிரபுவே, உங்கள் தாழ்மையான அடிமை!" என்று கூச்சலிட வேண்டும்போல் தோன்றியது.

அவர் பேசி முடிந்ததும், என் மனைவியைச் சகலரும் காண நடுவே அழைத்து வந்தார்கள். அவள் மிக அருமையான சேலை உடுத்தியிருந்தாள். அவள் அம்மாதிரி சேலை உடுத்தி, நான் என்றும் பார்த்ததில்லை. அவளுக்குப் பின்னே, வயது முதிர்ந்த என் தாயும் வந்தாள். அவள் கைகள் என் சின்னக் குழந்தையைத் தாங்கிக் கொண்டிருந்தன. வைஸிராயின் ஆடம்பர கம்பீரத்துக்கு முன்னே, பாஞ்சாலி உடம்பெல்லாம் அடங்கி ஒடுங்கித் தலை குனிந்து நின்ருள். அப்போது, எல்லையற்ற கீர்த்தியின் பரிசான 'விக்டோரியா கிராஸ்' பதக்கத்தை, வைஸிராய் அவள் கையிலே—காலம் சென்ற சுபேதார் ரத்னசாமியின் கைம்பெண் மனைவியின் கையிலே-வைத்தார்...

என் மனைவி அச்சமும் பயிர்ப்பும் அடைந்தவளாய், அவசர அவசரமாய் அப்பால் நகர்ந்தாள். அந்தப் பதக்கத்தை அவள் கெட்டியாய்ப்பிடித்துக் கொண்டிருந்தாள். இந்தச் சமயத்தில் திடீரென்று என் குழந்தை பாப்பா கத்தி யழுதுகொண்டு, கையை நீட்டி, என் தாயின் கைகளிலிருந்து, பாஞ்சாலியிடம் தாவியது. அந்தக் குரலைக் கேட்டதும் என் மெய் மறந்த பரவசமெல்லாம் போய்விட்டது. எனக்குள் நானேமுணுமுணுத்துக்கொண்டேன்:

"கடமையையும் மீறி அதியுன்னத வீரச் செயல் புரிந்ததற்காக, சுபேதார் ரத்னசாமிக்கு வீரப்பதக்கம் பரிசாம்! ஆனால், பாவம்! என் ஏழை மனைவிக்கு அதனல், என்ன பிரயோசனம்? ஆஹா! ஆனல், என் கண்மணி பாப்பா, நீயாவது அதிர்ஷ்டக்காரியா யிருக்கிருயே! உன்னிடமாவது தெய்வம் கருணை காட்டியிருக்கின்றதே! நல்ல வேளையாய் நீ பெண்ணாய்ப் பிறந்தாய். அடுத்த மகா யுத்தத்திலே, உன்னை யாரும் சண்டைக்குச் சிப்பாயாய்ச் சேர்க்க மாட்டார்கள் அல்லவா? நீ பெண்ணாயிருப்பதே என் பாக்கியமாகும். என் சாவுக்கு அப்பால் இன்பம் தருவது நீ தான். அதுவே எனக்கு அளவற்ற இன்பமாகும்."

✲

சத்தியம் பேசிய தீரன்

என்ன வந்தாலும் சத்தியமே பேசவேண்டும் என்பதற்கு, முஸ்லீம்களின் தேச சரித்திரத்தில் ஒரு சிறந்த உதாரணம் இருக்கிறது. எதேச்சாதிகாரம் புரிந்த ஒரு மன்னன், தன்னை எதிர்த்த கலகக்காரன் ஒருவனை, அங்கம் அங்கமாக வெட்டி யெறிய வேண்டும் என்று உத்திரவிட்டான். இந்தக் கொடுங்கோல் மன்னனின் அநியாயத்தைப் பகிரங்கமாய் அவன் எடுத்துக் கூறினன் என்பதே அவன் செய்த குற்றம். அங்கம் அங்கமாக அவனை வெட்டியபோது, அவன் மலைபோல் சலியாது நின்றான். அன்றியும், அவன் நாவை அரியும் வரையில், மன்னனைக் கொடுங்கோலன் என்று அது கோஷித்துக்கொண்டே யிருந்தது. ஸிரியாவிலிருந்து சிந்து வரையில் ஆண்ட அப்துல் மல்லிக் சக்ரவர்த்தியின் ஆட்சியில் நடந்த ஒரு சம்பவம் இது. இந்தப் பயங்கர தண்டனையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, கி. பி. கோ. 124-ஏ பிரிவின் கீழ் விதிக்கப்படும் தண்டனையை எவனாவது லட்சியம் செய்வான?

—அபுல்கலாம் ஆஜாத் (1922-ஆம் வருஷம் கோர்ட்டில் கொடுத்த வாக்கு மூலம்)

என்ன படிப்பது?

ஜோட்

கண்டதையெல்லாம் படிப்பது சரியா? புத்திமான்கள் புகழும் நூல்களையே படிக்க வேண்டும் என்கிறார் பிரபல தத்துவ சாஸ்திரியான ஸி. இ. எம். ஜோட். நிபுணர்கள் வியக்கும் தத்துவ ஆராய்ச்சிகளைப் புரிந்தவர் அவர். அபூர்வமான நூல்கள் எழுதியிருக்கிறார். அவருடைய அழகான பத்திரிகைக் கட்டுரைகளோ பண்டிதருக்கும் பாமரருக்கும் ரஞ்சகமானவை.

குழந்தைகளுக்கு உப்புப் பட்சணங்களை விட இனிப்புப் பட்சணங்கள் தான் பிடிக்கும். படிக்கும் குழந்தைகளோ கண்ணில் அகப்பட்டதையெல்லாம் படித்துவிடும். புத்தகத்தின் தன்மையைப்பற்றி அவை கவலைப்படுவதேயில்லை. என் சிறுவயதில், பெண்கள்-நான் காதல்புரிந்த வாலிபப் பெண்களில் பெரும்பாலோர் - குட்டி நாவல்களைப் படிப்பார்கள். அவைகளின் கதாநாயகிகள் அபூர்வ சுந்தரிகளாயிருப்பார்கள்; உலகத்துக் காரியம் ஒன்றையும் செய்யாத கதாநாயகிகள்.

உயர்ந்த ரசனையை எப்படிச் சம்பாதிப்பது? அதற்குப் பொறுமை வேண்டும்; பணிவு வேண்டும்; சிரமப் படவேண்டும்; நம்மைவிட அதிகமாய் விஷயம் தெரிந்தோர் சொல்வதை நம்பிக்கையோடு கேட்டுக் கொள்ள வேண்டும். பெரியவர்கள் புகழ்கிறார்கள் என்பதற்காகவே, எந்தப் புத்தகங்களையும் நாம் படிக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. நம்மைவிட முற்போக்கும் புத்திசாலித்தனமும் உள்ளவர்கள் நம் காலத்திலேயே இல்லையா? அவர்கள் புகழும் புத்தகங்களை நாம் படிக்க வேண்டும் என்றே சொல்லுகிறேன்.

சங்கீதத்தை உதாரணமாய் எடுத்துக் கொள்ளுங்கள். உலகத்தின் சிறந்த சங்கீதம் எதையும் முதல் தடவையாக மட்டும் கேட்டுப் பயனில்லை. முதல் தடவை கேட்கும் போது, அது கடினமாய்த்தான் தோன்றும். கடினமாய்த் தோன்றுவதால், சலிப்புத்தான் வரும். நாமோ சாதாரண ஸ்திரீ புருஷர்கள். பாச், பீதோவன் ஆகிய சங்கீத மேதைகளின் அற்புதக் கற்பனைகளைப் புரிந்துகொள்ள நம்மால் எப்படி முடியும்? மனித ஆத்மாவின் வழிகாட்டிகள் அவர்கள். அபூர்வ உலகங்களிலே முதன் முதலில் சஞ்சரித்து, தங்களை விட மந்த புத்திக்காரர்களுக்குத் தங்கள் சங்கீதத்தின் மூலம் அவர்கள் வழிகாட்டியிருக்கிறார்கள்.

உன்னதமான கலையிலே - அது நாதமோ, வர்ணமோ, வார்த்தையோ எந்தச் சாதனத்தைக் கொண்டதாயினும் சரிதான் - நீங்கள் என்ன பயனை எதிர்பார்க்கலாம்? அது எவ்வளவு இன்பம் தருகிறது என்றஒன்றைமட்டும் கொண்டு அதை அளவிடக்கூடாது. நமக்கு இன்பம் தருவது ஒன்று மாத்திரமே ஓர் உன்னதமான புத்தகத்தின் பெருமையல்ல.

ஓர் உன்னதமான புத்தகம் என்ன செய்ய முடியும்? வாழ்க்கையைப் பற்றிப் பெரிய மனிதர்களின் விசேஷமான கருத்துக்களையும் வாக்குகளையும் அது நமக்குச் சொல்லலாம்; எதிரிடையான உதாரணங்களாலோ, அனுதாபத்தினாலோ, நம்மை நாமே அறிந்துகொள்ளச் செய்யலாம்; நம் கருத்தைத் தூண்டலாம்; கருணையை எழுப்பலாம்; அனுதாபத்தைக் கிளரலாம்; நம் சகோதர ஜீவர்களைப் புரிந்துகொள்ளும்படி நமக்குச் சக்தியூட்டலாம்; நம்மைச் சிரிக்கச் செய்யலாம் அல்லது நம் கண்ணீரை எழுப்பலாம்; மார்க்கம் தெரியாமல் இருள் சூழ்ந்த நம் பிரச்னைகளுக்கு ஒளி வீசலாம்; மனித சமூகம் எந்த அகன்ற கொள்கைகளை அஸ்திவாரமாய்க் கொண்டு இயங்குகிறதோ அந்தக் கொள்கைகளை வெளிப்படுத்தலாம்; நமது மனச்சாட்சியை விழிப்புறச் செய்து, நம் சொந்த நடத்தையைச் சீர்செய்யலாம். இந்தக் காரியங்களில்

எந்த ஒன்றையாவது ஒரு புத்தகம் செய்யுமானால், அது வாசகனிடம் வெற்றி பெற்றுவிட்டது என்று சொல்லலாம். ஏனெனில், வாசகனின் நித்திய வாழ்க்கையை அது பாதித்துவிட்டது.

நல்லதுக்கோ, கெட்டதுக்கோ, புத்தகங்கள் நம்மைப் பாதித்து மாற்றி விடுகின்றன என்று நான் சொல்வேன். நல்ல புத்தகத்தின் நோக்கம், நல்ல வழிக்கு நம்மை மாற்றுவதேயாகும். படிப்பினால் ஒன்றும் விளையவில்லையென்றால், படிப்பின் நோக்கம் தான் என்ன? புத்தகம் படிப்பதால் ஒரு பயனும் விளையாதென்றால், அதைப் படிப்பதைவிட நீங்கள் சினிமாவுக்குப் போகலாம்; நாட்டியத்துக்குப் போகலாம்; அல்லது நாசமாய்ப் போகலாம். அதுவே மேலாகும். உலக சரித்திரம், வேதாந்தம், நீதி சாஸ்திரம், பூதத்துவம் ஆகிய புத்தகங்கள், இவ்வுலக வாழ்க்கையிலே உங்கள் மனோபாவத்தை மாற்றமாட்டா என்றால், அவைகளைப் படிப்பதிலே அர்த்தமில்லை. கவிதையையோ, கற்பனையையோ படித்தால், உலகில் முன்னே நீங்கள் காணாத உணர்ச்சியையும் அழகையும் அனுதாப மார்க்கத்தையும் அது உங்களுக்குக் காட்ட வேண்டும். இல்லாவிட்டால் அதைப் படித்துப் பயன் என்ன?

ஏதோ மதுபானம் பருகுவதைப் போலவோ, கோந்தைக் கடிப்பது போலவோ, பல ஜனங்கள் புத்தகங்களைப் படிக்கிறார்கள். தங்களைத் தாங்களே மறக்கடிக்கும் லாகிரியாகவே அவர்கள் படிக்கிறார்கள். அவர்கள் தகுதிக்கு ஏற்ற சுகமே அவர்களுக்குக் கிடைக்கிறது. ஆனால், சரியானபடி யோசித்துப் பார்த்தால், புத்தகம் வாழ்க்கையை உயர்த்துவதாயிருக்க வேண்டும்; வாழ்க்கையை மறக்கடிப்பதாயிருக்கக் கூடாது.

ஆகையால், என்ன படிக்கிறோம் என்று யோசித்துப் படியுங்கள். மகா அல்ப சம்பவங்களிலும் ஆழ்ந்த கருத்தைக் காண உங்களுக்கு விருப்பமா? உங்கள் சகோதர மனிதர்கள் நோக்கமற்ற காரியங்களைப் புரியும் அர்த்தமற்ற பிராணிகளின் மந்தையல்ல; அவர்கள் மகா உருக்கமான ஒரு நாடகத்தை நடிக்கும் பாத்திரங்கள் என்று தெரிந்துகொள்ள உங்களுக்கு விருப்பமா? அப்படியானால், சிறந்த புத்தகங்களையே படிக்க, ஜாக்கிரதை எடுத்துக் கொள்ளுங்கள். முதல் தரமான புத்தகங்கள் அகப்படக்கூடியவையாயிருக்கும் போது, இரண்டாந்தரமான புத்தகங்களை நாம் ஏன் படிக்க வேண்டும்?

இன்னொரு விஷயம்: நீங்கள் படிப்பது ஒரு நல்ல புத்தகமாயிருந்தால், அதை 'லபக்' என்று விழுங்கிவிடாதீர்கள். நல்ல சாப்பாட்டை எவரும் 'லபக்' என்று விழுங்குவதில்லை. ஒரு புத்தகத்தை எவ்வளவு நேரம் படிக்கிறீர்களோ அவ்வளவு நேரம் அதைச் சுவைத்துப் பார்க்கவும் வேண்டும்; அதாவது அதைப்பற்றிச் சிந்தனை புரியவேண்டும். இப்படிச் செய்யாவிட்டால், அந்தப் புத்தகத்தின் ஆசிரியனை நீங்கள் அவமதித்தவராவீர்கள். இத்தனையும் சொல்லிய பிறகு, ஒருவர் என்ன படிக்கவேண்டும் என்ற கேள்வி பாக்கியாகவே யிருக்கிறது.

நான் நல்ல ரசனையுள்ளவன் என்ற பெருமையுடையவன் தான். என்றாலும், என் சொந்த விருப்பு வெறுப்புகள் சில இருக்கத்தான் இருக்கின்றன. ஆகையால், நான் சொல்வதில் சில குறைகள் இல்லாமல் இராது. ஒருவருக்கு ஒன்று பிடிக்கலாம்; இன்னொன்று அவருக்குப் பிடிக்காவிட்டாலும் நல்லதாகவேயிருக்கலாம். அவருக்குப் பிடித்தது நல்லதாயில்லாமலும் போகலாம். இந்த விஷயத்தையும் நாம் அறிந்து கொள்ளவேண்டும்.

நல்ல புத்தகங்கள் எங்கே கிடைக்கும்? பொது லைப்ரரிகளில் கிடைக்கும். அல்லது அவைகளை நீங்கள் விலைக்குவாங்கலாம்-புதிதாகவோ அல்லது பழைய புத்தகக் கடைகளிலோ.

*

ஹிந்துஸ்தான்

கோவாபரேடிவ் இன்ஷ்யூரன்ஸ் சொஸைடி,
லிமிடெட்

தலைமை ஆபீஸ்: கல்கத்தா

✻

மிக்க முன்னேற்றமான இந்திய லைப் ஆபீஸ்

முன்னேற்றத்தின் நிலை

1944-ம் வருஷத்தில் புதிய தொழில்	ரூ. 10,14,80,981
அமுலிலுள்ள மொத்த வியாபாரம்	ரூ. 32,49,30,872
ஆயுள் அஷ்யூரன்ஸ் நிதி	ரூ. 6,23,39,081

பிரதிநிதிகளில்லாத இடங்களில் செல்வாக்குள்ள

ஏஜண்டுகள் தேவை

விபரங்களுக்கு எழுதவும்:

டிவிஷனல் மானேஜர்,

ஹிந்துஸ்தான் கோவாபரேடிவ்
இன்ஷ்யூரன்ஸ் சொஸைடி,
லிமிடெட்,

107, அரமனைக்காரத் தெரு,

ஜி. டி., மதராஸ்.

IODISAL

அயோடிசால்

-: (ரத்த சுத்தி மருந்து) :-

இது திரேகத்தில் உஷ்ணம அதிகமாகி அதனல் ஏற்படக்கூடிய வெட்டை, கிரந்தி, மொழி, முடக்கு, கண்ட சூலேகள், வாதம், வாயு, மேக ரோகங்களேயும் தோலேப்பற்றிய துர்நீர் சம்பந்த மான படை, சொறி, சிரங்கு, திரேக அரிப்பு முதலியவைகளே யும் குணப்படுத்தி திரேகத்திற்கு ஆரோக்கியத்தையும் கொடுக் கும். ரத்தத்தை சுத்தி செய்து மலப்ரவிர்த்தியை ஒழுங்காக்கி ரத்தவிருத்தியை உண்டாக்கும்.

எல்லா மருந்து கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள்

THE SOUTH INDIAN Mfg CO., MUDURA.

சென்னே நகர் & ஆந்திரா பிரதேசத்திற்கு ஏஜண்டுகள் :

ராஜன் ட்ரக் ஸ்டோர்ஸ்

155, நைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி. மதராஸ்

கோடை காலத்திற்குத் தகுந்த குளிர்ந்த பானங்கள்

கும்பகோணம்

டி.எஸ்.ஆர்.

கம்பெனியின்

குங்குமப்பூ

நன்னரி, ரோஸ், ஆரஞ்சு

முதலிய சர்பத்துகள்

சென்னே ஏஜண்டுகள் :	கோவை ஸ்டாக்கிஸ்ட் :
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்	B. பால பட்டாபி
திருவல்லிக்கேணி	வைசியர் தெரு :: கோவை

சிக்கிய கள்ளன்

கார்க்கி

சாராயக் கடையின் கீழ் அறையில், தன் மேஜையண்டையில், தனியே, செமாகா உட்கார்ந்திருந்தான். ஒரு போத்தல் வோட்கா மதுவும் அஞ்சு காசு பெறுமான வறுவலும், அவன் முன்னே இருந்தன.

அறை புகையடைந்து, கறுத்திருந்தது. மச்சிலிருந்து இரண்டு தீபங்கள் தொங்கின. மற்றொரு தீபம், கவுண்டரில் ஒளி செய்தது. சுருட்டுப் புகை அறை முழுதும் சூழ்ந்திருந்தது. அந்த நீலப் புகைப் படலத்தினூடே, கந்தையுடுத்த பல உருவங்கள் நீஞ்சுவது போல் மங்கலாய் உலவின. அவர்கள் ஆணையிட்டுக் கொண்டும், பேசிக் கொண்டும், பாடிக்கொண்டுமிருந்தார்கள். இத்தனை காரியங்களையும் வெகு பரபரப்பாய், வெகு உரக்கத்தான் அவர்கள் நடத்திக்கொண்டிருந்தார்கள். தாங்கள் மிக்க பத்திரமாயிருப்பதாக, அவர்களுக்குப் பரிபூரண நம்பிக்கை.

வெளியே தெருவில் கண் காது தெரியாத பனித்திரளைக் காற்று வீசிக் கொண்டிருந்தது. பெரும் பெரும் பனிக்கட்டிகள் ஆகாயத்தில் அலைந்து கொண்டிருந்தன. கடைக்குள்ளேயோ நல்ல கதகதப்பாய், சந்தடி நிறைந்து, மதுவின் மணம் வீசி கொண்டிருந்தது.

புகைத் திரையினூடே வைத்த கண் எடாமல், கதவை உறுத்து நோக்கிக் கொண்டு, செமாகா உட்கார்ந்திருந்தான். உரமும் தொய்வும் படைத்த அவன் உடம்பு கூட, இரண்டொரு தடவை முன்னே வளைந்தது. சில சமயம் அவனது உள்ளங்கை, அவன் நெற்றியைக் காக்கும் கேடயம்போல் அதை அணைந்து அவன் கண்களுக்கு நிழல் தந்தது. புதிதாக வந்த மனிதனின் அங்க அடையாளங்களை அவன் ஆழ்ந்து ஆராய்ந்தான். அதற்கு மிக நல்ல காரணமுண்டு.

புதிய மனிதனைக் கவனித்ததில், செமாகா எதை நிச்சயம் செய்து கொள்ள விரும்பினனோ அது நிச்சயமாகிவிட்டது. அதன்மேல், ஒரு கிளாஸில் வோட்கா மதுவை ஊற்றி, அதைத் தன் வாயில் சாய்த்துக்கொண்டான். உருளைக்கிழங்கு வறுவலை ஐந்தாறு எடுத்து வாயிலே போட்டுக் கொண்டான். முள் கரண்டியால், கொஞ்சம் மாமிசக் கறியைக் குத்தி வாய்க்குள் தள்ளினன். அவற்றை மெதுவாகவும் சந்தடியோடும் வெகு நேரம் மென்று கொண்டிருந்தான். முள் திரள்போல் சிலிர்த்து நின்ற தன் ராணுவ மீசையை இடையிடையே தன் நாவினல் நக்கிக்கொண்டான்.

செமாகாவின் முகம் விசாலமாயிருந்தது. தாடை எலும்புகள் முண்டி நின்றன. அவன் மழமழ வென்று க்ஷவரம் செய்து கொண்டிருந்தான். அவனுடைய கண்கள் அகன்று, பழுப்படைந்து, ஒன்றரைக்கண் பார்வை பார்த்துக் கொண்டிருந்தன. அவைகளுக்கு மேலே, புருவங்கள் மயிர் அடர்ந்திருந்தன. இடது புருவத்தின் மீது, எலியைப்போல் சாம்பல் வர்ணமான மயிர்க்குஞ்சம் ஒன்று தொங்கலாடிக் கொண்டிருந்தது. மொத்தத்தில் செமாகாவின் முகம், பார்ப்போருக்கு நம்பிக்கை யூட்டுவதா யில்லை. தற்போது அவன் இருந்த நிலைமையிலும், கோஷ்டியிலும்கூட, அவனது தோற்றம் ஏதோ முடுக்கிவிட்ட தந்தி போல் இருந்தது. அகாரணமான உறுதியொன்று அவனிடம் காணப்பட்டது. எவருக்கும் இதைக் கண்டு வெறுப்புத்தான் வந்தது.

இவ்வாறு அவன் உட்கார்ந் திருந்தான். அவனது வோட்கா மது காலியாகிவிட்டது. அவன் இன்னும்

செமாகா பிடிபட்டு விட்டான். ஆனல், அவன் பிடிபட்ட விதம் எப்படி? அது தான் ஓர் உருக்கமான கதை. உலகப் புகழ்பெற்ற நவீன ருஷ்ய ஆசிரியர் **மாக்ஸிம் கார்க்கி** எழுதிய கதை இது. பிரத்யட்சமாய் நடப்பதுபோல் வர்ணித்து, ஜீவன் ததும்பும் கதைகளை எழுதுவதில் இணையற்றவர் அவர்.

கொஞ்சம் வேண்டுமென்று கேட்கப் போன சமயத்தில், கதவு படீரென்று கீச்சவிட்டுக்கொண்டு திறந்தது. முண்டும் முரடுமான பெரிய பந்துபோல் உருண்டு கந்தை யுடுத்த ஓர் உருவம் உள்ளே வந்தது. தெளிவான குழந்தைக் குரலில் பரபரப்போடு அது கத்தியது: "அம்மான்மார்களே! ஜாக்கிரதை! கிளம்புங்கள்!"

எல்லா அம்மான்மார்களும் திடீரென்று திகைத்து, மௌனம் பூண்டு, நிலைகொள்ளாமல் தவித்தார்கள். அவர்களின் நடுவே ஆழ்ந்த குரல் ஒன்று எழுந்து, கவலையோடு கேட்டது: "நிஜந்தானா?"

"நிஜம்தான். இல்லாவிட்டால், நீங்கள் என் மென்னியை முறித்து விடலாம். குதிரைமீது ஏறியும், நடந்துகொண்டும் வருகிறார்கள். இரண்டு பேர் சாதாரணமாய் உடுத்திருக்கிறார்கள். மற்றவர் ஒரு பெரும் படையாய்த் திரண்டு வருகிறார்கள்."

"அவர்கள் யாரைத் தேடுகிறார்கள்? உனக்கு அதைப்பற்றி ஏதாவது தெரியுமா?"

"செமாகாவை என்று நினைக்கிறேன். நிகியிடம் செமாகாவைப்பற்றி அவர்கள் விசாரித்தார்கள்."

சிறுவனின் குரல் மணியோசைபோல் கணீர் என்று ஒலித்தது. பந்து போன்ற அவன் உடம்பு, அம்மான்மார்களின் காலடிகளுக்கு இடையிலே குதித்துக் கொண்டிருந்தது. அம்மான்மார்களெல்லாம் இடித்து நெருக்கிக் கொண்டு கவுண்டரை நோக்கி விரைந்தார்கள்.

"அப்படியானால், அவர்கள் நிகியைப் பிடித்து விட்டார்களா?" என்று செமாகா கேட்டான். இப்படிக் கேட்டுக்கொண்டே, தன் பரட்டைத் தலையில் தொப்பியை எடுத்து வைத்துக் கொண்டு, பெஞ்சியினின்றும் மெல்ல எழுந்தான்.

"அவன் மாட்டிக்கொள்வது நிச்சயம். இந்நேரம் அவனைப் பிடித்திருப்பார்கள்."

"எங்கே?"

"மேரி அத்தையின் வீட்டில்."

"அங்கேயிருந்துதான் நீ வருகிறாயா?"

"ஆமாம், கொல்லைப்புற வழியாய் ஓட்டமாய் ஓடிவந்தேன். பார்ஜ் விடுதிக்கு இனி நான் ஓடவேண்டும். அங்கேயும் யாராவது குந்திக் கொண்டிருக்கலாம்."

"சரி, நீ ஓடு."

பையன் விர் என்று வெளியே பாய்ந்தோடினான். கடையின் சொந்தக்காரன் ஜோனா பெட்ரோவிட்ச் என்னவோ ஏக்கத்தோடு கூச்சலிட்டான். அவன் வயது முதிர்ந்து தலை நரைத்த கண்ணியமுள்ள கிழவன். தெய்வத்துக்குப் பயந்தவன். பெரிய மூக்குக் கண்ணாடியும், கறுத்த மண்டையோடு போன்ற குல்லாயும் தரித்திருப்பான்.

"ஹீ, இந்த மிருகத்தை, படுபாவிப் பயலைப் பார் - தட்டு முழுவதையும் விழுங்கி விட்டானே!" என்று கத்தினான்.

கதவருகே சென்று கொண்டிருந்த செமாகா, "தட்டிலே என்ன இருந்தது?" என்று கேட்டான்.

"ஈரல் கறி இருந்தது. தட்டுப் பூராவையும் காலி செய்து விட்டான். இப்படிக் காலி செய்ய, அவனுக்கு நேரம் எங்கே கிடைத்தது? சனியன் பிடித்த சர்ப்பம்! லபக் என்று அத்தனையையும் விழுங்கி விட்டானே?"

"போனால் போகிறது. இதனால் ஒன்றும் உன் குடி முழுகிப் போய் விடாது" என்று சொல்லிக் கொண்டே, செமாகா கதவைத்திறந்து கொண்டு வெளியே போய் விட்டான்.

பனிக்காற்று மகா கடுமையாய், பெருங் குளிரோடு வீசிக் கொண்டிருந்தது. ஹூம் என்று உறுமிக் கொண்டும், தலைக்கு மேலும் தெருவிலும் சுழன்று சுழன்றும், ஜிலுஜிலுத்த பனிக்கட்டிகளை அலைத்துக் கொண்டும், அது வீசிக் கொண்டிருந்தது. ஆகாயத்திலே பனிக்கட்டிகள், அலைந்தது, அடுப்பிலே குழம்பு பொங்கி நுரைத்துக் கொப்புளம் விடுவது போல் தோன்றியது.

செமாகா சற்று நேரம் அசைவற்று நின்று, ஏதேனும் சந்தடி கேட்கிறதா என்று உற்றுக் கேட்டான். காற்றின் பெருமூச்சையும் சுவர்களிலும் கூரைகளிலும் மோதும் பனிக்கட்டிகளின் சலசலப்பையும் அன்றி, வேறே சத்தம் எதுவும் கேட்கக் காணோம்.

பின்பு, செமாகா நடந்தான். சில அடி தூரம் சென்ற பிறகு, ஒரு வேலியைத் தாண்டி, எவர் வீட்டு முற்றத்திலோ குதித்தான்.

அவனைக் கண்டு ஒரு நாய் குலைத்தது. அதற்குப் பதில் சொல்லுவது போல், ஒரு குதிரை எங்கிருந்தோ கனைத்துத் தன் குளம்பைத் தரையிலே உதைத்தது.

செமாகா திட உறுதியுடன், அதே வேலியை மீண்டும் தாண்டித் தெருவிலே வந்து குதித்தான். நகரின் நடு மத்தியை நோக்கி, வெகு விரைவாய்த் தெருவோடு நடந்தான்.

சில நிமிஷங்கள் கழித்து அவனுக்கு எதிரிலே, தெளிவில்லாமல் ஏதோ ஒரு சத்தம் கேட்டு, அவன் கலவரமடைந்தான். மறுபடியும் அவன் இன்னொரு வேலியைத் தாண்டி, பத்திரமாய் ஒரு வீட்டு முற்றத்தைக் கடந்தான். வெகு சீக்கிரத்தில் அதன் திறந்த வாயிற்படி வழியாய்த் தோட்டத்திலே புகுந்தான். இப்படியே இன்னும் சில வேலிகளையும் முற்றங்களையும் எவ்வித அபாயமு மில்லாமல் கடந்து, ஜோன பெட்ரோவிட்சின் கடை இருந்த தெருவுக்கு அடுத்த தெருவை யடைந்து, அதிலே அவன் நடந்து கொண்டிருந்தான்.

போகிற வழியிலே, தான் எங்கே போவது என்று செமாகா யோசித்துக்கொண்டே நடந்தான். அவனுக்கு ஒரு யோசனையும் தோன்றவில்லை.

போலீஸ்காரர்களைச் சைத்தான் ஏவி விட்டு ஊர் சுற்றச் செய்திருக்கிறது. ஆகையால், பத்திரமான சகல இடங்களும் இன்றிரவு அபாயமானவையாகும். இந்தப் பனிப் புயலில், இரவு முழுவதும் தெருவிலே திரிவதென்றாலும், தேடும் போலீஸாரிடமோ இராக் காவல்காரனிடமோ அவன் அகப்பட்டுக் கொண்டுவிடக் கூடும். எனவே, அதுவும் அவனுக்குப் பிடிக்கவில்லை.

அவன் கண்ணைச் சுளித்தவண்ணம் மெல்லமெல்ல நடந்துகொண்டிருந்தான். புயல்வீசும் இரவிலே வெண்பனி வெள்ளத்தைப் பீறிப் பார்த்துக் கொண்டே அவன் நடந்தான். மௌனமான வீடுகளும் மூலைக் கற்களும் தெரு விளக்குகளும் மரங்களும் ஆகிய இந்த அனைத்துமே பனிப் பிளாஸ்திரிகளைப் போட்டுக் கொண்டு, அவனிடம் ஊர்ந்து வந்தன.

கொஞ்ச நேரத்துக்குப் பின், புயலின் ஓலத்துக் கிடையிலே ஒரு விசித்திரமான சந்தடி அவன் காதுகளை எட்டியது. அவனுக்கு முன்புறத்தில் எங்கேயோ இருந்துகொண்டு ஒரு சின்னஞ் சிறு குழந்தை மெல்லிய குரலில் கத்துவதுபோல் தோன்றியது. அபாயத்தை எதிர்பார்த்து எச்சரிக்கை கொண்டு சித்திரம்போல் நிற்கும் வன விலங்கு மாதிரி கழுத்தை வளைத்துப் பார்த்தவண்ணம், செமாகா நின்றுவிட்டான்.

சத்தம் நின்றது.

செமாகா தலையை ஆட்டினான். குல்லாயை நன்றாய் இழுத்து முகத்தை நன்றாய் மூடிக் கொண்டான். தன் கழுத்துப் பட்டையில் விழும் பனி குறைவா யிருக்கும்படியாக, தன் தோள்களுக் கிடையே தலையைப் புதைத்துக் கொண்டான். தன் நடையை மீண்டும் தொடர்ந்தான்.

அவன் காலடியில் எலிக்குஞ்சு போல் ஏதோ கீச்சிட்டது. அவன் திடுக்கிட்டான். நின்றான். கீழே குனிந்தான். தரையைத் தன் கைகளால் தடவினான். ஏதோ ஒரு மூட்டை மீதிருந்த பனித்திரளைத் தட்டிக்கொண்டே மீண்டும் நிமிர்ந்தான்.

"அட தெய்வமே! ஒரு குழந்தை! எங்கே பார்ப்போம்" என்று திடுக்கிட்டு முணு முணுத்துக் கொண்டே, தனக்கு அகப்பட்ட அந்த வஸ்துவை, தன் கண்களால் பார்ப்பதற்காக மேலே தூக்கினான்.

குழந்தையின் உடம்பு கதகதப்பா கவே யிருந்தது. அது கையையும் காலையும் உதைத்துக் கொண்டது. உருகும் பனியால் அதன் உடம்பெல் லாம் ஒரே ஈரமா யிருந்தது. செமா காவின் கை மணிக்கட்டை விட மிக வும் சிறியதாயிருந்தது அதன் முகம். அது சிவப்பாய் மடிப்புகள் விழுந் திருந்தது. கண்கள் மூடியிருந்தன. சின்னஞ் சிறிய வாய், பால் குடிப் பதுபோல், திறந்தபடி யிருந்தது. அழுக்குப் படிந்த அதன் கந்தைத் துணிகளிலிருந்து வழிந்த தண்ணீர், அதன் சின்னஞ் சிறு முகத்திலோடி, பல்லில்லாத அதன் வாயிலே சொட் டிக் கொண்டிருந்தது.

செமாகா ஆச்சரியத்தால் திகைத்து நின்றான். ஆயினும், பனித் தண் ணீரைக் குடிக்கும் உபத்திரவத்தி னின்றும் குழந்தையைக் காப்பாற்ற வேண்டுமென்றால், கந்தைத் துணி களைச் சரிப்படுத்தவேண்டும் என்று அவன் அறிந்துகொண்டான். இதற் காக, குழந்தையை அவன் கொஞ்சம் கீழே சாய்த்தான். இது குழந்தைக் குச் சிரமம் தருகிறது என்று தெளி வாய்த் தெரிந்தது. ஏனெனில், அது பரிதாபக மாய்க் கிச்சிட்டது.

"மூடு வாயை!" என்று கன கடு மையாய்ச் சொன்னான் செமாகா: "மூடு வாயை! இல்லாவிட்டால், உனக் குப் புத்தி போதிப்பேன். உன்னை நான் என்ன செய்வது? உன்னால் எனக்கு என்ன பிரயோஜனம்? ஏ முட்டாள்! ஏன் ஊளையிட்டுக் கொண்டே யிருக்கிறாய்?"

ஆனால், செமாகாவின் பிரசங்கத் தைக் குழந்தை லட்சியம் செய்யக் காணோம். குழந்தை பரிதாபகரமாய், மென் குரல் பாய்ச்சி, இன்னும் அழுதுகொண்டே யிருந்தது. செமா வுக்கு ஒன்றும் புரியவில்லை.

"தம்பீ, உன் இஷ்டப்படி செய். ஐயோ! ஈரமாய்க் குளிரில் விறைத் திருக்கிறாயே! சின்னக் குழந்தை. உன்னை நான் எங்கே சேர்ப் பது?"

குழந்தை இன்னும் அழுதுகொண்டே யிருந்தது.

"நிஜமாய்ச் சொல்லுகிறேன். உன்னைக் கொண்டுபோய்ச் சோக்க எனக்கு ஓர் இடமும் கிடையாது" என்று, செமாகா தீர்மானமாய்ச் சொன்னான். குழந்தையைக் கந்தைத் துணிகளில் வைத்து முன்னிலும் இறு கிய ஒரு மூட்டையாய்க் கட்டினான். அதைக் கீழே பனியிலே வைப்பதற் காகக் குனிந்தான். "இப்படி யிரு. இல்லாவிட்டால், உன்னை நான் எங்கே கொண்டுபோய் விடுவது? என் வாழ்நாள் முழுதும் நானே ஓர் அநாதைதான், தம்பீ. போய் வருகிறேன்... இவ்வளவுதான்; வேறே வழியில்லை." இவ்வாறு சொல்லி, தன்னைத்தானே பழிப்பதுபோல் கையை அலைத்துக்கொண்டு, செமாகா குழந்தையை விட்டு அப்பால் நகர்ந் தான். "போலீஸ்காரர்கள் சுற்றிக் கொண்டிராவிட்டால், உன்னை நான் எங்கேயாவது கொண்டுபோய்ச் சேர்த்திருப்பேன். ஆனால், இந்த நிலைமையில்... நான் என்ன செய் வது? இதை யல்லாமல், வேறொன் றும் செய்வதற் கில்லை. என்னை மன் னித்துக்கொள், தம்பீ. நீ ஒரு நிர பராதி... ஆனால், உன் தாய் ஒரு கெட்ட துன்மார்க்கி. அவளை மாத் திரம் இன்னாள் என்று கண்டால், அவள் எலும்பை முறித்துப் போடு வேன்..." என்று தனக்குத் தானே முணுமுணுத்துக் கொண்டான்.

இப்படி அவன் தனக்குத்தானே பேசிக்கொண்ட பேச்சின் எந்த கட் டத்திலே, செமாகா மீண்டும் திரும்பி, அந்தக் குழந்தையைத் திரும்பவும் தன் கைகளிலே தூக்கிக் கொண் டான் என்பதை அவனே அறியான். அதை அவன் தன் மேலங்கிக்குள்ளே அணைத்துக் கொண்டான். அதன் தாயை இன்னமும் திட்டிக்கொண்டே, தன் வழி நடந்தான். விசித்திரமான ஒரு துக்கமும் சஞ்சலமும் அவனைக் கவிந்து கொண்டன. குழந்தையிடம் அவன் கொண்ட பரிதாபத்தினால், தானே பரிதாபகரமாய்த் தோன்றி னான்.

குழந்தை பலவீனமாய் உடம்பை அசைத்தது. முக்கலும் முனகலு மாய்க் கத்தியது. மேலங்கிக்குள்ளே

செமாகா அணிந்திருந்த உள்சட்டை ஒரு கந்தல். குழந்தையின் சின்னஞ் சிறு உடம்பின் ஜீவனுள்ள கதகதப்பு, வெகு சீக்கிரம் அவன் மார்பிலே தாக்கியதை, அவன் உணர்ந்தான்.

"அடே, உயிருள்ள ஜீவன் நீ!" என்று முணு முணுத்தான் செமாகா: "உன் நிலைமை ரொம்ப மோசம், தம்பி. ஏனென்றால், உன்னை நான் என்ன செய்வது?...அது தான்... ஆனால், உன் தாய்...அசையாதே! சும்மாக் கிட. இல்லாவிட்டால் விழுந்து விடுவாய்!"

ஆனால், குழந்தை நெளிந்து கொண்டே யிருந்தது. அதன் கதகதப்பான முகம், தனது உள் சட்டையின் ஓட்டை வழியாய்த் தன் மார்பிலே உராய்ந்துகொண்டிருந்தை, அவன் உணர்ந்தான்.

திடீரென்று செமாகா ஆச்சர்யத்தோடு நின்றான். சற்று உரக்கவே அவன் முணுமுணுத்தான்: "ஓஹோ! ஸ்தன்யத்தை - தாயின் ஸ்தன்யத்தை அல்லவா அது தேடுகிறது! தெய்வமே! தாயின் ஸ்தன்யம்!"

காற்று ஏதோ ஆசை கொண்டு ஏங்கியது போல் வெற்றோலமிட்டது.

"ஏன் தம்பி, தூங்கமாட்டேன் என்கிறாய்? தூங்கு. லொல் லொல்லோ... தூங்கு. என் கிட்டக் குடிக்க ஒன்றுமில்லை, தம்பி. தூங்கு. உனக்கு ஒரு பாட்டுப் பாடுகிறேன்...உன் தாய் அல்லவா பாடவேண்டும்...லொல்லொல்லோ...லேலோ...லொல்லொல்லோ... நான் தாதியல்ல...தூங்கு!"

திடீரென்று செமாகா, குழந்தையை நோக்கித் தலை குனிந்து கொண்டு, அமைதியாய், அன்போடு பாடத் தொடங்கி விட்டான்:

> *அடி பெண்ணே! மதங்கா!*
> *அநியாயக் கழுதை நீ.*
> *உன் சுமையைத் தெருவிலே*
> *உதறி விட்டுப் போனையே!...*

இந்தப் பாட்டை அவன் ஒரு தாலாட்டு மெட்டில் பாடினான்.

"வெண்பனி வெள்ளம் தெருவிலே சீறிக் கொண்டு சென்றது. செமாகா குழந்தையைத் தன் மேலங்கிக்குக் கீழே அணைத்துக் கொண்டு, ஐந்தடியில் நடந்து கொண்டிருந்தான். குழந்தை கத்திக்கொண்டே யிருந்தது. அவன் மெல்லிய குரலில் மேலும் பாடினான்:

> *உன்னை நானும் கண்டிட்டால்*
> *ஒடித்திடுவேன் எலும்பெலாம்*
> *ஒடித்துச் சுக்கு நூறுக்கி*
> *உதறிடுவேன் தெருவிலே*

அவன் கண்களிலிருந்து ஏதோ அவன் முகத்தின் வழியாய்க் கீழே வழிந்தது. உருகிய பனியா யிருக்கலாம். இடையிடையே அவன் உடம்பு நடுங்கியது. அவன் நெஞ்சு அரித்தது. அவன் மார்புக்குள்ளே என்னவோ வேதனை ஏற்பட்டது. மனித சஞ்சார மற்ற தெருவிலே, புயல் காற்றிலே, புலம்பும் குழந்தையை அங்கிக் கடியிலே தூக்கிக்கொண்டு, அவன் நடந்தான். இது அவனுக்குப் பரம துக்கமாயிருந்தது. கண்ணீர் விடாக்குறை.

என்றாலும், அவன் நடந்து கொண்டே யிருந்தான்.

அப்போது அவன் தனக்குப் பின்னே, சொத்துச் சொத்தென்று குதிரைகளின் குளம்படிச் சத்தம் எழுந்ததைக் கேட்டான். குதிரைகள் மீது சவாரி செய்வோர்களின் உருவங்களும், இருண்ட பனிப்படலத்தின் நடுவிலே மங்கலாக அவனுக்குப் புலனாகத் தொடங்கின. பின்பு, அவனை அவர்கள் மறித்துக் கொண்டார்கள்.

"அங்கே போவது யார்?"

செமாகா சடக்கென்று நின்றான்.

"என்னடா தூக்கிக்கொண்டு போகிறாய்? சொல்" என்று குதிரை வீரரில் ஒருவன் கேட்டான். அவன் தன் குதிரையை ஐந்தடிக்கு அருகிலே கொணர்ந்து விட்டான்.

"என்ன தூக்கிக்கொண்டு போகிறேன் - ஒரு பாப்பாவைத் தான்."

"நீ யார்?"

"செமாகா...என் பெயர் செமாகா"

"ஓ! நீதானா அவன்? உன்னைத் தான் நாங்கள் தேடிக்கொண்டிருக்கிறோம்: வா எங்களோடு. குதிரைக்குப் பக்கத்திலே நட."

"நாங்கள்...நாங்கள் வீடுகளின் ஓரமாய் நடக்கிறோம். அங்கே அவ்வளவு பனியில்லை. நடு ரஸ்தா எங்கள் உடம்புக்கு ஒத்துக் கொள்ளாது. நாங்கள் உங்களோடேயே வருகிறோம்..."

போலீஸ்காரர்களுக்கு அவன் சொல்வது என்னவென்றே புரியவில்லை. என்றாலும், வீடுகளின் ஓரமாய் அவன் நடந்துவர அனுமதித்தார்கள். ஆனால், அவன் மீது வைத்த கண்ணை எடாமல், அவன் அருகிலேயே குதிரை சவாரி செய்து கொண்டு வந்தார்கள். இப்படியாக அவன் போலீஸ் ஸ்டேஷனுக்குள் நுழைந்தான்.

உள்ளே இன்ஸ்பெக்டர் அவனைக் கண்டதும், "ஆஹா! அட கழுதே! எங்களிடம் அகப்பட்டு விட்டாயா? பலே பேஷ்!" என்று கோஷித்தார்.

செமாகா தலையை ஆட்டி விட்டு, "பாப்பாவின் கதி என்ன? அதை நான் என்ன செய்வது?" என்று கேட்டான்.

"என்ன! எந்தப் பாப்பா?"

"ஓர் அநாதைக் குழந்தை. நான் கண்டெடுத்தேன். இதோ பாருங்கள்."

செமாகா இவ்விதம் சொல்லி, குழந்தையை வெளியே எடுத்தான். அது அவன் கைகளிலே துவண்டு விழுந்தது.

"அதுதான் ஏற்கனவே செத்துப் போயிருக்கிறதே!" என்றார் இன்ஸ்பெக்டர்.

"செத்துப் போய் விட்டதா!" என்று கூவினான் செமாகா. குழந்தையைப் பார்த்தான். பின்பு, அதை மேஜைமீது கிடத்தினான்: "அடாடா! கண்டவுடனே நான் அதைத் தூக்கிக் கொண்டிருக்க வேண்டும். தூக்கிக் கொண்டிருந்தால், அது ஒரு வேளை ...இல்லை, நான் கண்டவுடனே தான் தூக்கினேன். ஆனால், திரும்பவும் கீழே போட்டு விட்டேன்" என்று தனக்குத்தானே முணு முணுத்துக் கொண்டான்.

இன்ஸ்பெக்டர் ஆச்சர்யத்தோடு, "என்னடா முணு முணுக்கிறாய்?" என்று கேட்டார்.

செமாகா ஒளியிழந்த கண்களுடன் சுற்றுமுற்றும் பார்த்தான். இந்தக் குழந்தையின் சாவோடு, இரவுகளிலே தெருவில் திரியும் அவன் சஞ்சாரமெல்லாம் முடிவடைந்து விட்டது.

இனி அவனை மாமூல் வாழ்க்கை சூழ்ந்து விட்டது. சிறையும் சட்டமும் அவனை எதிர்நோக்கி நிற்கின்றன. தான் ஒரு காரியமுமில்லாமல் அகப்பட்டுக் கொண்டதாக, செமாகாவுக்குத் தோன்றியது. குழந்தையின் பிரேதத்தைப் பார்த்துப் பெருமூச்சு விட்டுக்கொண்டே, "சீ! நீ—அடே அற்புதமே! உன்னை நான் கண்டெடுத்தது, ஒரு பிரயோசனமுமில்லாமல் போச்சே! நான் என்ன நினைத்தேன் என்றால், நீ...நீ...ஆனால் நீ போய்விட்டாயே! செத்து விட்டாயே!..." என்றான். இவ்வாறு சொல்லி, அவன் பிடரியைப் பலமாகச் சொறிந்து கொள்ளத் தொடங்கினான்.

இன்ஸ்பெக்டர் செமாகாவைச் சுட்டித் தலையை ஆட்டிக்கொண்டே, "இவனை அப்பால் கொண்டு போங்கள்" என்றார். செமாகா கைதுசெய்யப்பட்டான். அவ்வளவுதான்.

✲

சிகரெட் விஷயம்

மௌலானா அபுல்கலாம் ஆஜாத், ஒன்றுக்குப் பின் ஒன்றாகத் தொடர்ந்து சிகரெட் குடிப்பவர். அவரைக் கண்டவுடனே, மகாத்மா காந்தி செய்யும் முதல் காரியம் என்னவாம் தெரியுமோ? சிகரெட் சாம்பலை உதிர்க்கும் ஓர் 'ஆஷ்-ட்ரே' யை எடுத்து ஆஜாதின் முன்னே வைப்பது தான். ஜவஹர்லாலும் பெரிதும் சிகரெட் குடிப்பார். ஆனால், மகாத்மாவுக்கு எதிரே அவர் குடிக்கமாட்டார். இந்த நாட்டின் மரியாதை முறைகள் மகா கண்டிப்பானவை. பெற்றோரின் முன்னே குழந்தைகள் சிகரெட் குடிக்கக் கூடாது.

— கே. ராமராவ்.

SHAKTI BOOKS IN ENGLISH

FOR TODAY & TOMORROW

	Rs. A.
FIVE PLAYS Harindranath Chattopadhyaya	1 8
STRANGE JOURNEY Harindranath Chdttopadhyaya	2 8
ANGRY DUST Manjeri S. Isvaran	2 0
SONG OF THE GIPSYMAIDEN Manjeri S. Isvaran	1 0
LYRIC FESTOONS V. R. M. Chettiar	1 0
TALK FOR FOOD Gopal & Abdulla	0 10
ESSENTIALS OF GANDHISM V. Swaminatha Sarma	0 12

SHAKTI KARYALAYAM

MADRAS : MADURA

COIMBATORE

மதுரை விவாஹம்

என் குமாரன் சிரஞ்சீவி M. S. தேவதாஸுக்கும், மதுரை ஸ்ரீ கே. எல். நாகசாமி அய்யரின் குமாரத்தி சௌபாக்கியவதி தனலக்ஷ்மிக்கும் சென்ற 25–5–45 தேதி மதுரையில் நடைபெற்ற விவாஹத்தின்போது வாழ்த்துச் செய்திகளும், சன்மானங்களும் அனுப்பிவைத்த எண்ணிறந்த நண்பர்கள், பந்துக்கள் ஆகியோர்க்கு என் மனமார்ந்த வந்தனத்தை இதன் மூலம் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னவர்களுக்கு தனித் தனியாகப் பதிலளிக்க இயலாததற்காக அவர்களது மன்னிப்பைக் கோருகிறேன். சிரஞ்சீவி தேவதாஸின் நண்பர்களுக்கு 10–6–45 தேதி மணீஸ் கபேயில் ஒரு தேநீர் விருந்து அளிக்கப்பட்டது.

M. K. சுந்தரராமய்யர்

(புரொப்ரைட்டர், மக்கம் கம்பெனி)

மஞ்சனக்காரத் தெரு, மதுரை

ஹெட் ஆபீஸ் :

75, தங்கசாலை வீதி, P. T. மதராஸ்

ஜீவாம்ருதம்
ஆண்மைக்கும்
ஆரோக்கியத்திற்கும்
ஆண்மைக்கும்
ஆரோக்கியத்திற்கும்
நிகரற்ற இந்த டானிக்
1898 வருஷம் முதல் பிரசித்தி பெற்
றது. இது நரம்புகளுக்கு வலுவை
யூட்டி எக்காலத்திலும் எதையும்
எதிர்த்து நின்று ஜெயிக்
கக்கூடிய சக்தியை
அளிக்கிறது.
ஆயுர் வேதாஸ்ரமம் மதராஸ்

Use
KESHA-MITRA
HAIR-OIL
(VEGETABLE)
A LITTLE'S ORIENTAL BALM PRODUCT
அடர்த்தியான, கருகருத்த
நீண்ட கேசத்திற்கு
கேசமித்திரா
ஹேர் ஆயில்
வழுக்கை, பொடுகு, முதலியவற்றை
அறவே போக்குகிறது.
எல்லா மருந்து வியாபாரிகளிடமும் ஷாப்புகளிலும்
கிடைக்கும்
லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம்
அண்ட் பார்மசூடிகல்ஸ் லிமிடெட்
11-12, முதல் லைன் பீச் : : சென்னை

பிரிஸ்கோ மகாநாடு

நாரா

சென்ற ஒன்பது வார காலமாக, ஸான் பிரான்ஸிஸ்கோவில் ஐம்பது தேசங்களின் பிரதிநிதிகள் கூடி, உலக சமாதானத்துக்கு நிரந்தரமான அடிகோல முயன்று பேசிய பேச்சுக்கள் சில நாட்களுக்கு முன் முடிவடைந்தன. புதிதாகச் சர்வ தேச சாஸனம் ஒன்றையும் மகாநாட்டினர் சிருஷ்டித்திருக்கிறார்கள்.

இதே போல, முப்பது வருஷத்துக்கு முந்தி நடந்த உலகப் பெரும் போருக்குப் பின், சண்டை போட்டு அலுத்துப் போன மேல் நாடுகள் வேர்சேல்ஸில் ஒன்று கூடிப் பேசின. அப்போது உண்டானதே வெர்சேல்ஸ் உடன்படிக்கை. இனிமேல் யுத்தம் மூளாமல் தடுப்பதற்காக ஜெனிவாவில் சர்வதேசச் சங்கத்தை ஸ்தாபித்தார்கள். சங்கத்துக்காக 20 லட்சம் பவுன் செலவில் அபாரமான மாளிகை ஒன்றைக் கட்டியமைத்தார்கள். இந்த யுத்தம் தொடங்கிய போது, அது புத்தப் புதிதாகவே இருந்தது. இப்போது, அதைச் சர்வதேசக் கல்லூரியாக மாற்றிவிடலாமா என்று யோசித்து வருகிறார்கள். சமாதானத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை வகிக்கும் சங்கத்துக்கு ஜெனிவா மிகப் பொருத்தமான இடமாக முன்பு கருதப்பட்டது. ஜெனிவாவில், இதர பெரிய நகரங்களிலுள்ள பரபரப்பும் அமளியும் கிடையாது. படிப்பு, ஆராய்ச்சியில் ஈடுபட்ட மாணவர்களே அங்கே அதிகம். மரமும், செடியும், ஏரியும், மலைச்சாரலும் வெகு ரம்மியமா யிருக்கும். பழைய சர்வ தேசச் சங்கத்தை நிறுவ முக்கிய காரணஸ்தரா யிருந்த அமெரிக்கத் தலைவர் வில்ஸன், ஐரோப்பியத் தலைநகரங்கள் பலவற்றையும் போய்ப் பார்த்து, அவை அனைத்துள்ளும் ஜெனிவாவே மிகப் பொருத்தமானது என்று தேர்ந்தெடுத்திருந்தாலும், இன்று ஜெனிவா மதிப்பிழந்து போய்விட்டது.

உலக சமாதானத்தை ஸ்தாபிக்க, முன்னே ஜெனிவாவில் ஒரு சர்வதேசச்சங்கம் அமைந்தது. இப்போது, ஸான்பிரான்ஸிஸ்கோவில் அதே மாதிரி ஒரு ஸ்தாபனம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த மகா நாடு எந் நிலையில் எவ்விடத்தில் கூடியது? இதற்கும் முந்திய சங்கத்துக்கும் உள்ள தாரதம்மியங்கள் யாவை? இதன் முடிவுகள் எப்படிப்பட்டவை?

யுத்தத்தில் அடிபட்டுக் கஷ்டப்படுகிறவர்களுக்கு, யுத்தம் எப்படியாவது ஒழிந்து போகாதா என்றுதா னிருக்கும். போர் நின்று விட்டதும், இனிமேல் சண்டையே உதவாது என்ற நல்லெண்ணம் தீவிரமாக உண்டாவதும் சகஜந்தான். ஆனால், இது நீடித்து நின்றாலொழிய, நிரந்தரமான சமாதானத்துக்கு வழியில்லை. சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு ஜெனிவாச் சங்கத்துக்கு இருந்த வசதிகள் குறைவுதான். இருந்தாலும், சங்க அங்கத்தினர்களுக்குச் சமாதானத்தினிடம் மனப் பூர்வமான பற்றுதல் இருந்திருந்தால், எவ்வளவோ காரியங்களைச் சாதித்திருக்கலாம். ஒரு வேளை, இப்போது நடக்கும் இரண்டாவது உலகப்பெரும் போர் மூளாதபடி தடுத்திருக்கவும் கூடும். வெளிக் காரணங்கள் எப்படி யிருந்தாலும், சண்டைக்கு மூல காரணம் எப்போதும் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டதே. ஜப்பான் மஞ்சூரியாவை ஆக்ரமித்த போது, வெறும் வாய்ப்பேச்சைத் தவிர வேறொன்றும் செய்ய முடியவில்லை. அபிசீனியாவை இத்தாலி ஆக்ரமித்த போது, சங்கத்தில் சேர்ந்த நாடுகள் இத்தாலிக்குப் பெட்ரோல் சப்ளை செய்யக்கூடாது என்று தீர்மானம் நிறைவேற்றியதைத் தவிர, வேறேதும் செய்ய முடியவில்லை. சங்கத்தின் தீர்மானத்தை மீறுகிறவர்களை வழிக்குக் கொண்டு வர வசதியோ அதிகாரமோ சங்கத்துக்கு இல்லை. ஆளும் நாடுகள்-ஆளப்படும் நாடுகள் என்ற பாகுபாடு இருந்து வந்ததால், மறைமுகமான

ஆதரவு கொடுப்பது, தெரிந்தும் தெரியாததுபோல இருந்து விடுவது எல்லாம் சேர்ந்து, சர்வதேசச் சங்கத்தை வெறும் வாய்ப் பந்தலிடுவதற்கான ஒரு பொழுது போக்கு ஸ்தாபனமாகவே இருந்து வரும்படி செய்து விட்டன. சண்டை போடுவதற்காகவே ராணுவ முஸ்தீப்புச் செய்து வந்த இத்தாலி, ஜெர்மனி, ஜப்பான் இவற்றின் போக்கை ஆரம்பத்திலேயே தடுத்திருந்தால், மீண்டும் ஒரு யுத்தம் மூண்டிருக்காது.

இந்த ஐரோப்பிய யுத்தம் முடிந்ததும் பிரிஸ்கோ மகாநாடு கூடிப் புதிதாகச் சர்வதேச சாஸனம் ஒன்றைத் தயாரித்திருப்பது இயல்பே. போன யுத்தத்தைக் காட்டிலும் இந்த யுத்தம் எல்லா விதத்திலும் பெரியது, கோரமானது. இது உலகமெங்கும் பரவிவிட்டது; உலகம் பூராவையும் பாதித்துவிட்டது. உலகம் பூராவுமே அலுத்துச் சலித்துப் போய்விட்டது. இந்த நிலைமையில், நிரந்தரமான சமாதானத்தில் தீவிர பக்தி ஏற்படுவது சகஜந்தான். இது வரையில் சண்டை சச்சரவுகளுக்குப் பிறப்பிடமாயிருந்து வந்திருக்கும் ஐரோப்பாக் கண்டமே உதவாது என்பது சிலர் கருத்து. ஆகவே, புதிய சர்வ தேசச் சங்கத்துக்கு அமெரிக்காவிலுள்ள இரண்டாவது பெரிய நகரமாகிய சான் பிரான்ஸிஸ்கோவைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். மகாநாடு ஆரம்பிக்கச் சில நாள் முன் வரையில், உலக மகாநாடு பிரிஸ்கோவில் கூடும் என்று யாருக்கும் தெரியாது. காலஞ்சென்ற ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டுக்கு வடமேற்கு அமெரிக்காவிலுள்ள க்விபெக்கில் பற்றுதல். அங்கே கூடலாம் என்று சிலர் நினைத்தார்கள். ஆனால், கடைசியில், எவர் எதிர்பார்த்ததற்கும் மாறாக, பிரிஸ்கோவைத் தேர்ந்தெடுத்தார்கள்.

உலக சமாதானப் பாதுகாப்புச் சங்கத்தின் இருப்பிடமான சான் பிரான்ஸிஸ்கோ, வட அமெரிக்காவின் மேற்குப் பகுதியில் உள்ள கலிபோர்னியாப் பிரதேசத்தின் தலை நகரம். அமெரிக்காவிலேயே, நியூயார்க்குக்கு அடுத்த பெரிய நகரம் இதுதான். கடலோரமாயுள்ளது. இதற்கு முதல் தரமான கடற்கரை உண்டு. உலக அதிசயத்தில் ஒன்றான 'தங்க வாசல் பாலம்' (கோல்டன் கேட் பிரிட்ஜ்) இங்கே தானிருக்கிறது. ஒரே வளைவில், கீழே ஆதரவில்லாமல், கட்டப்பெற்ற இவ்வளவு பெரிய பாலம் உலகத்தில் வேறெங்குமில்லை. இங்கே, பூமிக்குக் கீழே தோண்டியெடுத்துப் போட்டிருக்கும் சுரங்கப் பாதை, உலகத்திலேயே மிக அகலமானது. இந்த மாதிரி நூதன அதிசயங்கள் பல பிரிஸ்கோ நகரமெங்கும் உள்ளன. ஆரம்பத்தில், இங்கே குடியிருந்தவர்கள் ஸ்பானிஷ் பாஷை பேசும் மெக்ஸிக்கர்கள்தான். அப்போது இது அவ்வளவு பிரபல மடைந்துவிடவுமில்லை; வளர்ந்துவிடவுமில்லை. 1906-ஆம் ஆண்டு உண்டான பூகம்பத்தால் நகர் முழுதும் சேதமடைந்து போயிற்று. அதன் பின்னர் உண்டான நவீன சிருஷ்டிதான், இப்போது நாம் காணும் கவர்ச்சி மிக்க கடல் துறைமுக நகரம். அமெரிக்காவிலே இருந்தாலும், இது கீழ் நாட்டின் இயல்பையே அதிகமாகக் கொண்டிருக்கிறது. எல்லாத் தேச மக்களும் சகோதர உணர்ச்சியோடு அளவளாவி வாழ்வதை இங்கே காண்பது போல, அமெரிக்காவில் வேறெங்கும் காண்பது அரிது. தங்கம் வெள்ளி, வெள்ளீயம், தான்யங்கள் ஆகிய இயற்பொருள்கள் இங்கிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி யாகின்றன. இரும்புச் சாமான்கள், யந்திர சாதனங்கள், சுருட்டு, பூட்ஸ் முதலிய உற்பத்திப் பண்டங்களும் ஏற்றுமதியாகின்றன. கடல் மார்க்க வியாபாரம் யுத்தகாலத்தில் அசாத்தியமாய்ப் பெருகிவிட்டது. இந்த யுத்தத்தில் இது பெரிய கேந்திர ஸ்தானமாக இருந்து வந்திருக்கிறது. நேச நாடுகளின் கப்பல்கள், படைகள், தளவாடங்களுக்கு இது நல்ல தள்மாக இருந்து உதவியிருக்கிறது. ஒரே குளிராகவோ, ஒரே வெப்பமாகவே இராமல், சீதோஷ்ண நிலை இங்கே வெகு ரம்மியமாய், நிரந்தர வஸந்த காலம் போல இருக்கும்.

இத்தனை சிறப்புக்களும் வாய்ந்த பிரிஸ்கோவில் கூடிய உலக மகா நாட்டில், ஐம்பது தேசங்கள், ஒன்பது வாரமாக விவாதித்து, முடிவாகத் தயாரித்த சர்வதேச சாஸனம், மொத்தத்தில் முந்திய சங்கத்தின் கோட்பாடுகளையே ஒத்திருப்பினும், சில முக்கிய அம்சங்களில் வித்தியாசப் படுகிறது. அடங்காப் பிடாரித்தனம் செய்யும் நாட்டை, முந்தியெல்லாம், விசாரிப்பார்கள்; தீர்மானம் நிறைவேற்றி, அந்த நாட்டுக்குப் பொருளாதாரத் தடை விதிப்பார்கள்; அதை அது மீறினால், ஒன்றும் செய்ய முடியாது. அப்புறம், வல்லான் வகுத்ததே வாய்க்கால். இப்போது, விசாரணை செய்து, தீர்மானம் நிறைவேற்றி, பொருளாதாரக் தடை விதிப்பதோடு மட்டும் நின்று விடாமல், ராணுவ பலத்தாலும் சங்க நோக்கத்தை நிறைவேற்றி வைக்க முடியும்.

உலக நாடுகளிடையே நிரந்தரமான சமாதானத்தை நிலை நிறுத்துவது சாஸனத்தின் முக்கிய நோக்கமாகும். இதற்கான துறைகளில் சாஸனத்தில் கையெழுத்திட்டுள்ள ஐம்பது நாடுநாடுகளும் சேர்ந்து உழைக்கும். பெரிய நாடு, சிறிய நாடு என்ற வித்தியாசமில்லாமல், எல்லா நாடுகளுக்கும் சம உரிமை யுண்டு. உலக அமைதியைக் குலைக்காத வரைக்கும், எந்த நாட்டின் சொந்த விவகாரத்திலும் இதர நாடுகள் தலையிட மாட்டா. பொது அமைதியைக் குலைத்துவிடுகிற முறையில் நடந்து கொள்கிற நாட்டை, இதர நாடுகள் எல்லாம் சேர்ந்து பகிஷ்கரிக்கும். மீறி நடக்கிற நாட்டுக்கு யாரும் உதவவோ, அனுதாபங் காட்டவோ கூடாது. தேவைப் பட்டால், அத்து மீறி நடக்கும் நாட்டை ராணுவ பலங்கொண்டு அடக்கி வழிக்குக் கொண்டு வருவார்கள்.

சங்கத்தின் நோக்கங்களை நிறைவேற்றி வைப்பதற்காகப் பாதுகாப்புக் கவுன்ஸில் ஒன்று உண்டு. இதில் மொத்தம் பதினேர் அங்கத்தினர்கள் உண்டு. ஐம்பெரும் வல்லரசுகளான சீன, ருஷ்யா, அமெரிக்கா, பிரான்ஸ், வட அயர்லாந்து உள்பட பிரிட்டன் ஆகிய ஐந்து நாடுகளும் சாசுவத அங்கத்தினர்கள். பாக்கி ஆறு ஸ்தானங்களுக்கும் பொது அசெம்பிளிக் கூட்டத்தில் தெரிந்தெடுப்பார்கள். இவர்கள் இரண்டு வருஷத்துக் கொருமுறை தேர்ந்தெடுக்கப்படுவார்கள். பாதுகாப்புக் கவுன்ஸிலிலுள்ள ஒவ்வொரு தேசத்துக்கும் ஒவ்வொரு பிரதிநிதிதான் உண்டு. கவுன்ஸிலின் தீர்மானத்தை எல்லா நாடுகளும் ஏற்றுக் கொள்ளும்.

கவுன்ஸில் நிரந்தரமாய், இடையருமல் வேலை செய்யும் பொருட்டு, கவுன்ஸிலின் அங்கத்தினர்கள் யாவரும் சங்கம் நிறுவியுள்ள இடத்திலேயே தங்கியிருக்க வேண்டும்.

சங்கத்தின் பொது அசெம்பிளிக் கூட்டம் வருஷம் ஒருமுறை நடை

வண்ணன் தொல்லை

சலவைக்குத் துணிகள் போட்டால், அவை கிழிந்து வருகின்றன; கெட்டுப் போகின்றன; சில சமயம் நம் துணிகள் காணமலும் போய் விடுகின்றன. ஜேம்ஸ் தர்பர் என்ற மேல்நாட்டுக் கலைஞர் ஒருவர், இந்தச் சங்கடங்களுக்குச் சுலபமான ஒரு பரிகாரம் கண்டு பிடித்து விட்டார்.

அவர் சலவைக்கு என்ன துணிகள் போட்டாலும் சரி; கவலையில்லாமல் வாழ்ந்தார். எப்படித் தெரியுமா? சலவையிலிருந்து திரும்பி வரும் துணிகளைக் கணக்குப் பார்ப்பதே யில்லை; திரும்ப உடுத்துவதுமில்லை. தமது அறைக்குள்ளே அவைகளை மேலும் மேலும் போட்டுக் குவித்து விடுவார். தாம் புதிய புதிய துணிகளை வாங்கி உடுத்திக்கொள்வார்.

அறை நிறைந்து விட்டால் என்ன செய்வார் என்று நண்பர்கள் கேட்கலாம். அதற்கும் அவர் ஒரு பரிகாரம் கண்டுபிடித்திருந்தார். அவர் அந்த அறைக் கதவைச் சாத்துவார். வெளியே கிளம்புவார். இன்னொரு ஹோட்டலுக்குப் போய்க் குடியேறிவிடுவார்.

பெறும். கவுன்ஸில் கூட்டம் அடிக்கடி வேண்டும் போதெல்லாம் பிரிஸ் கோவிலும் அதற்கு வெளியிலும் கூடும். சங்கத்தில் அங்கத்தின ரல்லாத நாடுகளும் தங்கள் தகராறுகளைத் தீர்த்துக் கொள்ளச் சங்கத்தின் உதவியை நாடலாம்.

சங்கத்திலே, ராணுவ ஆலோசனைக் கமிட்டி என்று ஒன்றிருக்கும். ராணுவ சம்பந்தமான தகராறுகளைத் தீர்ப்பதற்கும், ராணுவ நடவடிக்கை எடுக்கவேண்டிய போதும், கவுன்ஸிலுக்கு இது யோசனை கூறும். சர்வதேசக் கோர்ட்டு ஒன்றும் நிறுவப் பெறும்.

(1) உலக மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது; அனைவர்க்கும் வேலை, பொருளாதார சமூக முன்னேற்றத்துக்கும் உயர்வுக்கும் ஆன வசதிகள் செய்வது. 2. சர்வதேசப் பொருளாதார, சமூக, சுகாதாரப் பிரச்னைகள். 3. இன, மத, மொழி வேறு பாடின்றி அனைவருக்கும் அடிப்படைச் சுதந்தரங்கள் தருவது - இவைதான் உலக கவுன்ஸிலின் நோக்கம்.

இது தவிர, பொருளாதாரக் கவுன்ஸில் என்று ஒன்றும் உண்டு. இதில், பொது அசெம்பிளியில் தேர்ந்தெடுக்கப்பட்ட 18 அங்கத்தினர்கள் இருப்பார்கள். ஒவ்வொரு வருஷமும் இந்தப் பதினெட்டு அங்கத்தினரில் ஆறு பேர் விலகிக்கொண்டு, வேறு ஆறு பேர் தேர்ந்தெடுக்கப் படுவார்கள். இப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர் ஒவ்வொருவரும் மூன்று வருஷம் பதவி வகிப்பார். ஆனால், முதல் தேர்தலில் வந்தவர்களில் ஆறு பேரின் பதவிக்காலம் ஒரு வருஷத்திலும், இன்னும் ஆறு பேரின் பதவிக் காலம் இரண்டு வருஷத்திலும் முடிவடையும்.

இந்தியா போன்ற சுய ஆட்சியில்லாத நாடுகளின் நலத்துக்கும் சங்கம் பாடுபடும். ஆனால், அவைகளின் அரசியல் தகராறுகளில் தலையிடாது.

ஐம்பது நாடுகள் சேர்ந்த இந்தச் சங்கத்திலே, எல்லாரும் ஒன்றுகூடிப் பொது அசெம்பிளியில் தீர்மானிக்கும் போது தகராறு வந்தால், 45 நாடுகள் செய்யும் தீர்மானத்தை மறுத்துவிடும் அதிகாரம் ஐந்தே ஐந்து வல்லரசுகளுக்கு உண்டு. சிறு நாடுகளின் தகராறுகளை எளிதில் தீர்த்துவிடுகிற மாதிரி பெரிய வல்லரசுகளின் தகராறுகளைத் தீர்க்கமுடியாது. வல்லரசுகளிடையே ஒற்றுமையிருக்கும் வரை அமைதிக்குப் பங்க மேற்பட மார்க்கமில்லை. எனவே, முன்பு ஒவ்வொரு நாட்டுக்கும் இருந்த ரத்து அதிகாரம் இப்போது ஐந்து வல்லரசுகளுக்கு மட்டுமே இருக்கிறது. துரிதமாய்க் காரியம் நடத்த இது உதவும். வல்லரசுகள் முரண்டினலொழிய, இப்போது காரியம் நடத்த வொட்டாமல் யாரும் கோணச்சால் ஓட்ட முடியாது.

இனி, பழைய சங்கத்தின் சாஸனத்துக்கும் புதிய சங்கத்தின் சாஸனத்துக்கும் உள்ள வித்தியாசம் என்னவென்றல், பழையதுக்குப் 'பல்' இல்லை; இதற்குப் 'பல்' உண்டு. இது வெறும் பேச்சோடு நில்லாமல் கடிக்கவும்முடியும்; ஆக்ரமிப்புகளைத் தன் ராணுவ பலத்தால் தடுக்க முடியும். யுத்தத்தைத் தடுப்பதற்கு இதுவரை சரித்திரத்திலே கண்டிராத பிரம்மாண்டமான ஸ்தாபனமாகிய புதிய சர்வதேசச் சங்கம் சட்ட ரீதியாகவும், பொருளாதார வழிகளிலும், அவசியமானல் ராணுவ பலத்தைக் கொண்டும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளும். பழைய சங்கம் நடவடிக்கை எடுக்கச் சிபார்சுதான் செய்யலாம். இந்தச் சிபார்சை யாரும் மறுக்க உரிமை இருந்தது. இப்போது மறுக்கும் உரிமை ஐந்து வல்லரசுகளுக்கு மட்டுமே உண்டு. நடவடிக்கைகள் எடுப்பதில் ஐந்து வல்லரசுகளே அதிகப் பங்கெடுத்துக் கொள்ளும். இவற்றுக் குள்ளடங்கியவர்களாகவே தான் உலக மக்களில் பெரும்பாலோர் இருக்கிருர்கள். உலக முழுவதிலும் கேந்திர ஸ்தானங்களில் ஐக்கிய நாடுகள் படைகளை நிறுத்தி வைத்திருக்கும். அந்தப் படைகளுக்குப் பெரிய வல்லரசுகளின் யந்திரத் தொழில்கள் ஏராளமான ஆயுதங்களையும், தளவாடங்களையும் வழங்

கும். நினைத்த உடனே இந்தப் படைகள் நடவடிக்கை எடுத்துக் கொள்ளும் நிலையி லிருக்கும். யுத்தத்துக்குப் பொருளாதாரக் காரணங்கள ஏற்படா திருப்பதற்காக, பொருளாதார, சமூகப் பிரச்னைகளைப் பரிசீலனை செய்வதற்குத் தனியான ஒரு ஸ்தாபனம் நிறுவப்படும். இந்த ஏற்பாடு வெர்ஸேல்ஸ் உடன்படிக்கையில் இல்லை. புதிய சங்கத்தை ஸோவியத் ருஷ்யா, அமெரிக்கா, பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் ஆகிய மூன்று பெரிய வல்லரசுகளும் ஏற்றுக் கொண்டுள்ளன. பழைய சங்கத்தில், அமெரிக்கா சேர்ந்துகொள்ள மறுத்து விட்டது. ருஷ்யாவைச் சேர்த்துக் கொள்ள மறுத்துவிட்டார்கள்.

இந்தியாவின் பிரதிநிதிகளாகப் பிரிஸ்கோ சென்றவர்கள் பிரிட்டிஷாரின் நல்ல பிள்ளைகளாக, யாருக்கும் பொல்லாப்பில்லாமல் நடந்து கொண்டிருக்கிறார்கள். நல்ல சந்தர்ப்பத்தைக் கை நழுவ விட்டுவிட்டார்கள். பாதுகாப்புக் கவுன்ஸிலிலும், சர்வதேசக் கோர்ட்டிலும் இந்தியாவுக்குப் பதவி கிடைக்க ஏதோ ஒரு மாதிரி வழி செய்திருக்கிறார்கள். சிறு தாலுகா, ஜில்லாபோன்ற நாடுகளுக்கு எட்டுப் பத்துப்பேர் பிரதிநிதிகளும் பத்துப் பேர் போல ஆலோசகரும் போயிருந்தார்கள். இந்தியாவுக்கு இரண்டு பிதிரநிதிகளும், மூன்று ஆலோசகரும் மட்டுமே போனார்கள். ஆலோசகரும், காரியதரிசியும் ஐரோப்பியர்கள். இது இந்தியாவின் கௌரவத்துக்கு அவ்வளவு எடுத்ததாயிராமல் போனதில் ஆச்சரியமில்லை.

பழைய சங்கத்துக்குப் புதுச் சங்கம் எவ்வளவோ மேல்தான். ஆனால், ஆளும் நாடு, அடிமை நாடு என்ற பாகுபாட்டுணர்ச்சி இருந்துவரும் வரை - உலக மக்கள் அனைவரும் அரசியல், சமூக, பொருளாதாரத் துறைகளில் சரிநிகராய் வளர்ச்சியடைய எல்லாரும் ஏகோபித்து மனமார முயன்று, குறைபாடுகளை நீக்கி, ஆக்க வேலைகளைச் செய்து, கைத்தொழில் முதலிய துறைகளில் நியாய புத்தியோடு ஒத்துழைத்துப் பகிர்ந்து வாழ முயன்று வந்தாலொழிய-நெருக்கடி வந்த பிறகு அதைச் சமாளிக்க நடவடிக்கை எடுப்பதையே மாமூலாக வைத்திராமல், நெருக்கடியை உண்டு பண்ணுகிற தீமைகளையும், மனக் கசப்புகளையும் முளையிலேயே கிள்ளி எறிந்து, நெருக்கடி நிகழவொட்டாதபடி தடுக்கத் தக்க மார்க்கம் கண்டுபிடித்து, மனப்பூர்வமாக அதைக் கொண்டு செலுத்தினாலொழிய-வெறும் நல்லெண்ண வார்த்தைகளாலோ, போரால் அடக்கும் முறையாலோ நிலையான பயனும் கதிமோட்சமும் கிட்டுவது சாத்தியமல்ல. புதிய சங்கத்துக்கு, இந்த வல்லமை இருக்குமா?

கழுதையின் காதுகள்

அமெரிக்க ஜனாதிபதிகளில் ஒருவர் குரோவர் கிளீவ்லாண்ட் என்பவர். அவர் மாணவரா யிருக்கையில், நியூயார்க் சந்தை ஒன்றுக்குச் சென்றிருந்தார். அங்கே சில கழுதைகள் நின்றுகொண்டிருந்தன. அவற்றின் காதுகள் வெகு நீளமாயிருந்ததைக் கண்டு அவருக்குப் பேராச்சரியம் உண்டாயிற்று.

"இந்தக் கழுதைகளுக்கு என்ன வயது?" என்று, பக்கத்திலிருந்த ஒருவரை மாணவர் கேட்டார்.

"ஆறு மாதம்" என்றார் பக்கத்திலிருந்தவர்.

"அப்படியா! இவற்றின் காதுகளுக்கும் அதே வயது தானா?" என்று மேலும் கேட்டார் மாணவர்.

புத்தக உலகம்

பாண்டியன் பரிசு (கவிதை): இயற்றியவர்: பாரதிதாஸன். வெளியிட்டோர்: முல்லைப்பதிப்பகம், பிராட்வே, சென்னை, விலை ரூ. 3-8.

தங்கள் ஆசைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காகக் கீழ்மக்கள் தங்கள் நாட்டையும் அந்நியருக்கு அடிமைப் படுத்தப் பின்வாங்கமாட்டார்கள் என்பதை, பாரதி தாஸன் இந்தக் காவியத்தின் மூலம் அறிவுறுத்துகிறார். 'தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்; தருமம் மறுபடி வெல்லும்' என்ற பாரதியாரின் பொன் மொழிக்கு இலக்கியமாக அமைந்துள்ளது இந்த நூல். தெள்ளிய, சிறு விறுப்பான, இனிய நடையில் பாடல்கள் இயன்றுள்ளன. பைண்டும் அழகாக இருக்கிறது.

> **முக்கிய அறிவிப்பு**
>
> மதிப்புரைக்குப் புத்தகம் அனுப்புவோர், புத்தகத்தின் இரண்டு பிரதிகள் அனுப்ப வேண்டுகிறோம்.
>
> ஆசிரியர், 'சக்தி'

சின்னச்சாம்பு: ஆசிரியர்: வ. ரா. சுதேசமித்திரன் வெளியீடு. விற்பனை உரிமையாளர்: ஜோதி நிலையம், திருவல்லிக்கேணி, சென்னை. விலை ரூ. 1-8-0.

தற்காலம் வெளி வந்திருக்கும் நவீனங்களெல்லாம் வெறும் பொழுதுபோக்குக் கதைகளாகவே இருக்கின்றன. சமூகத்தை அரித்துவரும் பிரச்னைகளைப் பற்றியோ, செய்யவேண்டிய சீர்திருத்தங்களைப் பற்றியோ அவை சிந்திப்பதே இல்லை. ஆசிரியர் வ. ரா. தமது சின்னச் சாம்புவின் மூலம் ஒரு சிறந்த 'பிரசார இலக்கிய'த்தைச் சிருஷ்டித்துத் தமிழ் நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்திருக்கிறார். வ. ரா. வெறும் வறட்டுச் சீர்திருத்த வாதியல்ல. அவர் ஒரு லட்சிய வாதி. சீர்திருத்தம் பேசுபவர்களின் வீட்டிலேயே அந்தச் சீர்திருத்தம் ஆரம்பித்துவிட்டால், அவர்கள் எப்படிக் கதிகலங்கிப் போவார்கள் என்பதை, அழகாக வ. ரா. வர்ணித்திருக்கிறார். பேச்சில் மட்டும் இல்லாமல் செயலிலும் சீர்திருத்தம் செய்ய முன்வரும் சீர்திருத்தவாதிகள் எத்தனை இடையூறுகளைத் தாண்ட வேண்டும் என்பதையும் தெளிவாக்கியிருக்கிறார். கதைப் போக்கு சரளமாக அமைந்திருக்கிறது.

நாட்டியக்காரி: ஆசிரியர்: தி. நா. சுப்பிரமணியன். வெளியிட்டோர்: சூடாமணிப் பிரசுராலயம், கோபாலபுரம், சென்னை. விலை ரூ. 1.

பெண்களுக்கு நிலையான புத்தி கிடையாதென்று கூறுகிறார்கள். குடும்பப் பெண்களுக்கு மட்டுமல்ல, தாசிகளுக்கும் கூட ஸ்திர புத்தி உண்டு. எடுத்த காரியத்தைச் செய்து முடிக்கும் ஆற்றல் உண்டு என்று ஆசிரியர் இந்தச் சரித்திர நவீனத்தில் ஸ்திரப்படுத்துகிறார். சுமார் அறுநூறு வருஷங்களுக்குமுன் ஆண்டு வந்த மும்மடி நாய்க்கன் என்ற அரசனின் ராஜநர்த்தகி ரோஹிணியையும், அவள் தாய் லட்சுமியையும் கதாநாயகிகளாகக் கொண்டு, இந்தக் கதை சுற்றிவளைந்து செல்கிறது. தங்களுடைய லட்சியமாகிய பராசர நரசிம்ம சுவாமி கோயிலைக் கட்டி முடிப்பதற்காக அவர்கள் பட்ட சிரமங்களையும், தங்கள் அந்தஸ்தையும் அரசபோகத்தையும் உதறித்தள்ளித் தெருவில் நடனமாடிப் பிச்சை எடுக்கவும் முற்பட்ட அவர்களது தியாக புத்தியையும், ஆசிரியர் மிக அழகாக வர்ணித்திருக்கிறார். அவர்களுடைய தர்மசிந்தையும் தியாகமும், அரசன் கூட அவர்களை வணங்கும்படி செய்து விடுகிறது. தெளிவான நடையில் இந்தச் சரித்திர நவீனம் எழுதப்பட்டிருக்கிறது.

நமது மொழிப் பிரசினை: ஆசிரியர்: மகாத்மா காந்தி. மொழி பெயர்த்தவர்: அ. லெ. நடராஜன்.

வெளியிட்டோர்: புதுமைப் பதிப்பகம், காரைக்குடி. விலை ரூ. 2-8-0.

இந்தியாவுக்குப் பொதுமொழி ஒன்று இருக்க வேண்டியதன் அவசியத்தையும், அந்தப் பொதுமொழியாக இருக்கத்தக்கது ஹிந்தி-ஹிந்துஸ்தானியே என்பதையும் விளக்கி ஹரிஜனில் காந்திஜி எழுதிய சில கட்டுரைகள், நிகழ்த்திய சில பிரசங்கங்களின் தொகுப்பு இந்த நூல். ஹிந்தி-உருது விவாதத்துக்கும் காந்திஜி தகுந்த பதில் அளித்திருக்கிறார். ஹிந்தி-ஹிந்துஸ்தானி எழுதுவதற்கு ரோமன் லிபியைக் கையாளக் கூடாது என்று வாதித்திருக்கிறார். சம்ஸ்கிருதத்தி லிருந்தோ அல்லது அதன் சார்புடனே இருக்கும் இந்திய மொழிகள் எல்லாம் தேவநாகரியையே பொது லிபியாகக் கைக்கொள்ளவேண்டும் என்று மகாத்மா வற்புறுத்துகிறார். ஹிந்தியின் வளர்ச்சியால் மாகாணத் தாய்மொழிகளின் வளர்ச்சி குன்றிப் போகும் என்ற பயத்தைப் போக்கியிருக்கிறார். மாகாணங்களின் தாய்மொழி, அகில இந்தியமொழி, இவைகளுக்குள்ள தொடர்பையும், தாரதம்மியத்தையும் நன்றாக விளக்கி யிருக்கிறார். மொழிபெயர்ப்பு சரளமாக இருக்கிறது.

மேரி மக்தலேனா (பாடல்கள்): இயற்றியவர்: பாலபாரதி ச. து. சுப்பிரமணிய யோகியார். வெளியிட்டோர்: ஸ்டார் பிரசுரம், பாலக்கரை, திருச்சி. விலை ரூ. 0-12-0.

மேரி மக்தலேனா பேரழகி, தாசி. அவளது அழகிலே ஈடுபட்டு அடிமைகளானோர் பலர்; அழிந்த குடும்பகள் பல. கடைசியில் ஒரு நாள் அவளுக்கே தன் பாவத்தைப் பற்றிப் பயம் ஏற்படுகிறது. எங்கே சென்று அதைத் தொலைப்பது என்று கவலையுறுகிறாள். ஏசுநாதரைச் சந்திக்கிறாள். அவரிடம் அடைக்கலம் புகுகிறாள். தீயில் பாவங்கள் சாம்பராகின்றன. அவள் புனிதையாகிறாள்; அமரத்வம் பெறுகிறாள். இந்தக் கதையை 112 பாடல்களாக ஆசிரியர் இயற்றியிருக்கிறார். பல இடங்களில் கற்பனைத் திறனும், சொல் வன்மையும் செறிந்திருக்கின்றன.

மங்கிய நிலவு, ஆசிரியர்: 'அகிலன்'. வெளியிட்டோர்: கலைவாணிக் கழகம், புதுக்கோட்டை. விலை அணு 12.

ஏமாற்றம் லட்சியமும் ஒன்றுகூடி வாழ்க்கையை நாசப் படுத்தினாலும், நிடசித்தத்தினால் அதில் ஓர் இனிமை காணமுடியுமென்று ஸ்தாபிக்க, ஆசிரியர் அகிலன் 'மங்கிய நில' வின் மூலம் முயன்றிருக்கிறார். மனித உள்ளத்தில் ஏற்படும் போராட்டங்களை வெளியே இருந்து படம் பிடித்துத் தரும் இந்த நவீனம், ஒரு சிறந்த பொழுது போக்குக் கதை.

சத்தியமூர்த்தி பேசுகிறார் (சத்திய மூர்த்தியின் கட்டுரைகளும் பிரசங்கங்களும்): வெளியிட்டோர்: தமிழ்ப் பண்ணை, தியாகராயநகர், சென்னை. விலை ரூ. 4-0-0.

காலஞ்சென்ற ஸ்ரீ சத்தியமூர்த்தி அவர்கள் நிகழ்த்திய பிரசங்கங்களும், எழுதிய கட்டுரைகளுமாக 20 கட்டுரைகள் இந்தத் தொகுப்பை அலங்கரிக்கின்றன. சுதந்தர லட்சியம் முதல், அஹிம்சை, கல்வி, கலை, சங்கீதம், சுகாதாரம், சமூகப் பிரச்னைகள் வரை அநேக விஷயங்களை ஸ்ரீ சத்தியமூர்த்தி ஆராய்ந்திருக்கிறார். இந்த நூலுக்கு நாமக்கல் கவிஞர் ஒரு சிறந்த முன்னுரை அளித்திருக்கிறார். காலஞ்சென்ற தலைவரின் ஞாபகார்த்தமாக, அவரது இரண்டாவது வருஷாப்தீகத்தன்று வெளியிடப்பட்ட இந்த நூலைத் தமிழர் ஒவ்வொருவரும் வாசித்துத் தலைவரின் கருத்துக்களைத் தெரிந்து கொள்ளவேண்டியது அவசியம்.

முதலாளிகள் திட்டம்: தினசரி வெளியீடு. ஆசிரியர்: வெ. ராமசாமி. விற்பனை உரிமையாளர்: சக்தி காரியாலயம், ராயப்பேட்டை, சென்னை. விலை அணு 4.

பிர்லா, டாடா, டலால், ஸர் புருஷோத்தம தாஸ் தாகூர் தாஸ் முதலிய சில முதலாளிகள் சேர்ந்து தயாரித்த திட்டத்துக்குப் 'பம்பாய்த்

திட்டம்' என்று பெயர். அந்தத் திட்டம் ஏழை மக்களுக்குச் சிறிதும் பயன் தராது என்று ஆசிரியர் விளக்குகிருர். இந்தப் புத்தகத்தின் முதல் பதிப்பு வெகு சீக்கிரம் செல வழிந்து விட்டது. அப்போது, பம்பாய்த் திட்டத்தின் முதல் பாகம் மட்டுமே வெளி வந்திருந்ததால், முதல் பதிப்பில் அந்த முதல் பாகம் மட்டுமே அலசப்பட் டிருந்தது. இந்த இரண்டாம் பதிப்பில், பம்பாய்த் திட்டத்தின் இரண்டாம் பாகத்தை ஆராயும் புதிய விஷயமும் பல பக்கங்கள் சேர்ந்திருக்கிறது. இப்படிப் புத்தகம் விரிவடைந்திருந்தும், விலையை உயர்த்தாமல் பழையவிலையே வைக்கப்பட்டுள்ளது.

ஸம்பத்து : ஆசிரியர் : எஸ். வி.வி. வெளியிட்டோர்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை. விலை: சாதாப் பதிப்பு ரூ. 3-8-0; உயர்ந்த பதிப்பு ரூ. 4-0-0.

பெரிய குடும்பங்கள் என்று நாம் எண்ணிக் கொண்டிருக்கும் இடங்களில் நடக்கும் விநோதங்களைச் சித்தரிக்கும் ஒரு நாவல் இது. எஸ்.வி.வி. அவர்களின் நகைச் சுவை பிரசித்தமானது. எவர் மனதும் புண்படாமல், வாழ்க்கையின் அசம்பாவிதங்களைக் கண்டு சிரிப்பது அவருடைய ஹாஸ்யம். அந்த முறையில் மிகவும் சுவாரஸ்யமாக இதுவும் அமைந்திருக்கிறது.

✲

ஒரே கேள்வி

அமெரிக்காவில் நீக்ரோக்கள் ஒரு காலத்தில் அடிமைகளா யிருந்தார்கள். இந்த அடிமைத்தளையை அறுத்தெறியப் பெரும் பாடுபட்டவர் ஜனதிபதி ஆபிரகாம் லிங்கன்.

இல்லினய்ஸ் தேர்தல் பிரசாரத்தில், ஜட்ஜி டக்ளஸ் என்பவருக்குத் திரும்பத் திரும்ப லிங்கன் ஒரே கேள்விதான் விடுத்தார். அமெரிக்க மக்களையும், தமது மனச்சாட்சியையுமே அவர் திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டதும் அந்த ஒரே கேள்வி தான்.

அந்தக் கேள்வி இதுவே : " நீக்ரோவும் ஒரு மனிதன, அல்லவா ? "

அமெரிக்கர் அனுபவிக்கும் சுகம்

அமெரிக்காவில் உள்ள வீடுகளைப் பார்த்தாலே போதும்; நவீன வசதிகளை அமெரிக்கர்கள் எவ்வளவு அனுபவிக்கிருர்கள் என்று தெரியும். அமெரிக்க வீடுகளைப்பற்றிய பின்வரும் புள்ளி விவரம் கவனிக்கத் தக்கது :

ரேடியோ உள்ள வீடுகள் 100-க்கு	80
மின்சார விளக்கு உள்ள வீடுகள் 100-க்கு	80
அலங்கார வசதிகள் உள்ள வீடுகள் 100-க்கு	60
கியாஸ் அல்லது மின்ஸார அடுப்பு உள்ள வீடுகள் 100க்கு	55

அவதார புருஷர்கள்

விளக்கு தன்னைச் சுற்றியுள்ள பொருள்களுக்கு விளக்கம் தருகிறது. ஆனல், அதனடியில் எப்போதும் இருட்டாகவே இருக்கும். அதைப்போல், அவதார புருஷருக்குச் சமீபத்தில் இருப்பவர்கள் அவருடைய பெருமையைத் தெரிந்து கொள்வதில்லை. எங்கேயோ தூரத்தில் இருப்பவர்கள் அந்த அவதார புருஷருடைய ஆத்ம சக்தியில் ஈடுபட்டு, அவரிடம் பக்தி கொள்கிருர்கள்.

—ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்

88851

மு. அருணாசலம்
எழுதிய, பதிப்பித்த நூல்கள்

ரூ. அ.

யான் பெற்ற இன்பம் 1-8

தமிழ் இலக்கியச் சுவையிலே தோய்த்தெடுத்த அருமையான கட்டுரைகள்

காற்றிலே மிதந்த கவிதை 1-0

வாழ்மொழி இலக்கியம் என்று கூறப்படும் நாடோடிப் பாடல்களைப் பற்றிய கட்டுரைத் தொகுதி. ஒவ்வொரு கட்டுரையும் கவிச்சுவைமிக்க இன்பமான நடையில் அமைந்திருக்கிறது.

நிழலருமை வெய்யலிலே 1-4

இலக்கிய ரகம் மிக்க, எட்டுக் கட்டுரைகள் அடங்கிய நூல். ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையான சுவையில் அமைந்திருக்கிறது.

கூளப்ப நாய்க்கன் காதல் 1-8

காதற் சுவை மிகுந்த பழந் தமிழ்ப் பிரபந்தங்களுள் ஒன்று.

திருமலை முருகன் பள்ளு 2-8

எளிய உழவர் வாழ்க்கையை அழகாகச் சித்திரிக்கிறது. கவிச் சுவையும் பொருட்சுவையும் மிக்கது.

ராப்பர் 2-0

முக்கூடற் பள்ளு (கைவசமில்லை)

அம்பிகாபதிக் கோவை 4-0

கலிகோ 5-0

தமிழ்க் கோவைப் பிரபந்தங்களின் வரிசையிலே இது மிகவும் பழமையானதாகும் ரசமான நூல். மூலமும் குறிப்புரையும் அடங்கியிருக்கிறது.

திரு ஆனைக்கா உலா 2-8

சோழ நாட்டிலுள்ள திரு ஆனைக்கா என்ற தலத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் மீது காளமேகப் புலவர் பாடிய நூல்.

தபால் செலவு தனி

சக்தி காரியாலயம்

ராயப்பேட்டை :: சென்னை

வடக்கு வெளி வீதி :: மதுரை

வெரைடி ஹால் ரோடு கோயமுத்தூர்

இன்னுமா ஆஸ்த்மா?

உங்களை இன்னமும் ஆஸ்த்மா பிடித்தால் சீக்கிரம் குணம், நிச்சயம் சொஸ்தம் என்று கூறுகிற போலிகளை என நம்புகிறீர்கள்?

ஸ்வாஸஹரி ஆஸ்தமாவுக்கு டாக்டர்கள் ஔஷதம், மேல் பூச்சுகளை மட்டும் நிவர்த்தித்து அடிப்படையான காரணங்களை விட்டு வைப்பதல்ல. முதல் டோஸிலேயே இழுப்பும், மூச்சுத் திணறலும் நின்றுவிடும். நல்ல தூக்கம், நன்றாக சாப்பிட்டு ஜீரணமும் ஆகும். நாளடைவில் ஆரோக்கியம் பெற்று சுவாஸப்பை பலமடைந்து ஆஸ்த்மா ஒரேயடியாய்த் தொலைந்து போகும்.

3 அவு., 6 அவு., 12 அவு., பாட்டில்கள் முறையே ரூ. 3-6, ரூ. 5-12, ரூ. 10-க்கு எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

சென்னை ஸ்டாகிஸ்டுகள்: (1) அப்பா அண்டு கோ., சைனா பஜார், (2) அமிருத் ரத்னாகர் பார்மஸி, கோவிந்தப்ப நாயக்கன் தெரு.

தயாரிப்பவர்கள்:

டாக்டர் புரோஹித் பார்மஸி

கோலாப்பூர்

புரோகித்ஸ் ஸ்வாஸஹரி

புத்தகங்கள்

புதிய சீனு: வெ. சாமிநாத சர்மா — 6 8

அன்பையும் அறத்தையுமே லட்சியங்களாகக் கொண்டு, புத்தர் பிரானின் போதனைகளை நடைமுறையில் கடைப்பிடித்து ஒழுகியவர்கள் சீனர்கள். அத்தகையவர்கள் இன்று வீழ்ச்சியுற்றிருப்பதற்குக் காரணம் என்ன? அதன் எதிர்காலம் எவ்வாறிருக்கும்? சீனுவின் ஆரம்பகால சரித்திரத்திலிருந்து, புதிய சீனுவின் தோற்றம்வரை எல்லா விபரங்களும் இந்நூலில் அடங்யிருக்கின்றன.

பிளேட்டோவின்
அரசியல்: வெ. சாமிநாத சர்மா — 6 0

இதில் அரசியலின் ஒவ்வொரு பிரிவும் வெகு தெளிவாக சம்பாஷணை மூலம் விளக்கப்பட்டிருக்கிறது. தேசத்துக்கும் மக்களுக்குமுள்ள தொடர்பு; எந்த மாதிரியான மக்களுக்கு எத்தகைய அரசியல் இருக்கவேண்டும்? நீதி வழங்குதல் என்ருல் என்ன? என்பன போன்ற விஷயங்களை பிளேட்டோ தெளிவாக விளக்கியிருக்கிருர்.

மானிட ஜாதியின் சுதந்திரம்: இங்கர்ஸால் — 1 0

அறியாமையை ஒழித்து மனித சமூகத்தை அடிமைத்தனத்திலிருந்து மீட்க அரும்பாடு பட்டவன் இங்கர்ஸால். அவருடைய விறுவிறுப்பான பிரசங்கங்களில் ஒன்றே இப்புத்தகம்.

சூரிய நமஸ்காரம்: டி. வி. திருவேதி — 1 0

சூரிய நமஸ்கார முறைகளையும், மந்திரங்களையும் சித்திர விளக்கங்களோடு இந்நூல் விவரிக்கிறது.

பாரதியார் சரித்திரம்: செல்லம்மா பாரதி — 1 8

மகாகவி பாரதியாரின் சரிதத்தை அவர் மனைவியார் செல்லம்மா பாரதியும், மகள் தங்கம்மா பாரதியும் எழுதியது. புதுக்கிய இரண்டாம் பதிப்பு படங்களுடன். (அச்சில்)

மாணவருக்கு: காந்திஜி — 6 0

மாணவருக்கென காந்தியடிகள் அவ்வப்பொழுது எழுதியதும், பேசியதும். அ. லெ. நடராஜன், வெ. ராமசாமி தமிழாக்கியது. திருத்திய இரண்டாம் பதிப்பு. கையால் செய்த காகிதத்தில் அச்சிடப் பெறுகிறது.

[தபால் செலவு தனி]

சக்தி காரியாலயம்

சென்னை - மதுரை - கோயமுத்தூர்


காய்கறித் தோட்டம்
தோட்டம் போடுவது எப்படி
விதை விதைப்பது எப்படி
எரு இடுவது எப்படி
காய்கறிகளிலுள்ள உணவுச்
சத்து யாது
என்ற விஷயங்களை
அறிய வேண்டுமா?
கத்தரி வகை, அவரை வகை,
கீரை வகை, பூசணி வகை, கிழங்கு
வகை, சீமைக் காய்கறி வகை
பயிரிடக் கற்றுக்
கொள்ள வேண்டுமா?
இதற்கேற்ற புத்தகம்
காய்கறித் தோட்டம்
மு. அருணாசலம் எழுதியது
விலை ரூ. ஐந்து
தபால் செலவு தனி
சக்திகாரியாலயம்
ராயப்பேட்டை : சென்னை
வடக்கு வெளி வீதி : மதுரை
வெரைடி ஹால் ரோடு : கோயமுத்தூர்

இந்தியத் தேயிலையில்

மிகச்சிறந்தது

மிக நேர்த்தியான மணமும், நல்ல நிறமும், குறைந்த விலையும் உள்ள லிப்டன்ஸ் வெள்ளை லேபில் தேயிலைகள் இதர தேயிலைகளை விட சிறந்தவை.

லிப்டன்ஸ்

வெள்ளை லேபில்

நேர்த்தியான இந்திய தேயிலை

LTK 84 W

லிப்டன் தேனீர் அருந்துகையில்
ஜாக்கிரதைக் குறைவாய்ப் பேசாதீர்கள்.

அழகுக்கு அழகு செய்வது தங்கம், வைர நகை தான், கண்டசரம், காப்பு, தோடு, மூக்குத்தி, புது மோஸ்தரில் செய்து கொடுக்கிறோம்

உத்தரவாதமுள்ள தங்கம், வைர நகைகளுக்கு நம்பிக்கையானவர்கள் :

பி.ஏ. ராஜு செட்டியார் & பிரதர்

கோயமுத்தூர்

தந்தி : ராஜா   தபால் பெட்டி : 139   போன் : 218-A



எரிதுரும்பு
ஒரு பிரசினை

கரியும் விறகும் அநேகமாக ஒவ்வொருவருக்கும் இரண்டு
பிரசினைகளை கொடுக்கின்றன. அவைகள் கிடைப்பது
கஷ்டம். ஓரிடமிருந்து மற்றொரிடத்துக்கு கொண்டு
போவது சிரமம் ஆனால் ஒரு கெட்டில் தண்ணீர் கொதிக்க
வைத்து ஒரு கோப்பை டீ தயாரிக்க மிக குறைந்த எரி
துரும்பே தேவை. ஒரு கோப்பை நல்ல டீ செய்யும்
மாருதல்களோ மிக அதிகம். கவலைகள் மறைந்து விடு
கிறது. சந்தேகங்கள் நீங்கு கின்றன. நீங்கள்
சந்தோஷமடைந்து திருப்தியுடன் உலகத்தோடு
சமாதானமாய் இருக்கிறீர்கள். அடுத்தமுறை
நீங்கள் இந்த கஷ்டமான யுத்தகாலத்தில்
வாழ்வதின் சிரமத்தை உணரும் பொழுது
ஒரு கோப்பை டீ அருந்தி அது விளை
விக்கும் மாருதல்களை கவனியுங்கள்

இந்தியன் டீ

சோர்வடையும் சமயம் டீ அருந்துங்கள்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது.

IK 237 TM

Printed & Published by Vai. Govindan at the Shakti Press Ltd., (Shanti Press)
115-E, Mowbrays Road, Royapettah, Madras
Managing Editor: Vai. Govindan. Editor: T. J. Ranganathan